752

சாந்தி

ஆசிரியர் : ரகுநாதன்



752
1-55
REGISTRAR OF BOOKS
FEB 1955

தந்தி: பெய்த்.
FAITH

போன்: 149
112

நவ நாகரீகத்திற்கேற்ற பவுன் தங்க நகைகள்
வெள்ளிப்பாத்திரங்கள் & கல் நகைகள்
உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம்

சித.கோ.இ.பெருமாள் பிள்ளை
ஜுவல்லர் திலி.டவுண்

சித. கோ. இ. பெருமாள் பிள்ளை
43. கீழ ரத வீதி

தலைமை ஆபீஸ்:

கூளக்கடை பஜார் - திருநெல்வேலி டவுண்.

சாந்தி

கலை இலக்கிய மாத இதழ்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
955

752
1-55



இந்த இதழில்

நிலைமை மாறுமா? (தலையங்கம்) 1

பாராட்டுக்கள் 6

குட்டிக் கதை — ஐவான் கிரிலாவ் 8

பொறுக்கி வர்க்கம் — சுந்தர ராமசாமி 9

கடல் தரும் செல்வம் — நா. வானமாமலை 17

ஏழு காசுகள் — சிக்மண்ட் மோரிக் 20

முஜபர்ஜங் பகதூர் தெரு — ப. சீனிவாசன் 28

ரத்தபாசம் — 'நம்பி' 31

மொழிகள் குட்டி போடுமா? — சடகோபன் 40

அன்பின் விலை — யஷ்பால் 45

சென்னையிலே சீனம் .... — எஸ். ஆர். 52

மருதுபாண்டியர் — ரகுநாதன் 59

மிஸ்ஸியம்மா (விமர்சனம்) — 'துருவன்' 66

புத்தக விமர்சனம் — தி. க. சி. 69

கதைகளில் வரும் பெயர், சம்பவம் அனைத்தும் கற்பனை; எவரையும் குறிப்பிடுவன அல்ல.

சென்பகா தீப்பெட்டிகளே வாங்கி உபயோகியுங்கள்.

மழை காலத்திற்கு உத்தரவாதம் உள்ளது.

"சேகோ"

தீப்பெட்டி தொழிற்சாலே

தச்சநல்லூர் P. O.

(திருநெல்வேலி ஜில்லா)

Pro: ப. வ. உ. சேதுராமசுப்பிரமணியபிள்ளே

வடக்கு ரதவீதி — திருநெல்வேலி டவுண்.

சாந்தி

ஆசிரியர் : ரகுநாதன்

விளம்பர விகிதம்

பின்புறம் கவர்	.... ரூ. 75—0—0
உள்புறம் கவர்	... ரூ. 60—0—0
முழுப் பக்கம்	... ரூ. 50—0—0
அரைப் பக்கம்	... ரூ. 30—0—0

வருஷ விளம்பரங்களுக்குக் குறைந்த சார்ஜ்

பிற விவரங்களுக்கு

81, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

சாந்தி

"நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற் குழைத்தல்" — பாரதி

மலர் 1 | ஜய, தை ○ பிப்ரவரி 1955 | இதழ் 3

நிலைமை மாறுமா?

○

சில தினங்களுக்கு முன்னர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் அறுபதாவது மகாநாடு ஆவடியில் நடந்தது. இம்மாதிரியான மகாநாடு இதற்குமுன் கூட்டப்பெற்றதில்லை என்றும், இந்திய நாட்டின் எதிர்காலத்தையே புதிய பாதையில் உருவாக்கும் மகாநாடு இதுஎன்றும் பேசப்படுகின்றன; பிரபலப்படுத்தப் படுத்துகின்றன. இந்தமகாநாடு நம்மைஆளும் அரசியல்கட்சியால் கூட்டப்பெற்ற மகாநாடு; எனவே இதன்முடிவுகளும் லட்சியங்களும்தான் நாட்டின் அரசியல் கொள்கையாக விளங்கும். ஆதலால், இந்த மகாநாட்டின் முடிவுகள் நாட்டு மக்களுக்கு எவ்வாறு பயன்படும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். மகாநாட்டின் தீர்மானங்களில் முக்கியமானவை இரண்டு. ஒன்று அன்னிய நாட்டுக்கொள்கை பற்றிய தீர்மானம்; மற்றொன்று சோஷியலிஸ சமுதாய லட்சியம்.

அன்னிய நாட்டுக் கொள்கை

அன்னிய நாட்டுக் கொள்கையில் நேரு அரசாங்கம் கடந்த காலத்தில் பாராட்டத்தக்க முறையில் நடந்துகொண்டிருக்கிறது; உலக சமாதானத்துக்கும், நாடுகளிடையே சுமுகமான உறவு நிலவுவதற்கும் இந்தக் கொள்கை பேருதவி புரிந்துள்ளது. அணுகுண்டு ஹைட்ரஜன் குண்டு போன்ற நாசக்கருவிகளின் பரிசோதனையையும், உற்பத்தியையும் தடைசெய்யவேண்டும் என்று கூறிவந்திருக்

கிறது. புதிய சீனவை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் இடைவிடாது வற்புறுத்தி வந்திருக்கிறது. தென்கிழக்கு ஆசிய ஒப்பந்தம் என்ற பெயரால் அமெரிக்காவும் அதைச்சார்ந்த வல்லரசுகளும் ஒன்றுசேர்ந்து, ஆசியாக் கண்டத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதையும் நேரு அரசாங்கம் கண்டித் துள்ளது. இந்தோசீனவில் போர்நிறுத்தம் ஏற்படுவதற்கும், ஜெனிவா மகாநாட்டில் இந்திய அரசாங்கம் அரும்பாடு பட்டு வெற்றி கண்டிருக் கிறது. இவற்றுக்கெல்லாம் மேலாக, பண்டித நேருவும், சீனப்பிரதமர் சூயென்லாயும் சேர்ந்து வகுத்த பஞ்சசீலக் கோட்பாடு ஆசிய நாடு களுக்கிடையேயுள்ள ஒற்றுமையையும் நல்லுறவையும் உறுதிப்படுத்து கிறது; ஏனைய உலக நாடுகளுக்கோர் வழிகாட்டியாகவும், உலக சமாதானத்துக்கோர் திட்டமாகவும் விளங்குகிறது. இவ்வாறு பல வகையிலும் உலகமக்களின் பாராட்டுக்குரிய வகையில் நேருவின் அன்னிய நாட்டுக்கொள்கை அமைந்துள்ளது. ஆவடியில் கூடிய காங்கிரஸ் மகாநாடு நேருவின் அன்னிய நாட்டுக் கொள்கையை அங்கீகரித்துள்ளது. இதனை நாம் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்.

இன்று ஆசிய நாட்டின் ஒரு பகுதியான மலேயாவில் போர் நடைபெற்று வருகிறது. இந்தோ சீனவில் ஏற்பட்டது போலவே, மலேயாவிலும் மலேய மக்களின் சுதந்திரக் கோரிக்கையை ஒத்துக் கொண்டு, போர் நிறுத்தத்துக்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கு மாறு இந்திய அரசாங்கம் கோரவேண்டும்; அதுபோலவே சீனவுக்குச் சொந்தமான பார்மோஸா தீவில் அமெரிக்கத் துருப்புக்கள் இருப்பதும் ஆசிய நாட்டின் அமைதியை அச்சுறுத்துவதாகவும், ஆசிய மண்ணில் போர்தொடங்குவதற்கு ஏதுவாகவும் இருக்கிறது. எனவே பார் மோஸாவை விட்டு அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேற வேண்டும் என்றும் இந்திய அரசாங்கம் கோரவேண்டும். ஐயாயிரம் மைலுக் கப்பால் உள்ள தீவில் அமெரிக்கர்களுக்கு வேலையில்லை என்பதைத் தெளிவு படுத்தவேண்டும். இவ்வாறு நேரு அரசாங்கம் எதிர்காலத்தில் தனது அன்னிய நாட்டுக்கொள்கையைப் பயன்படுத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். உலகில் யுத்தபயம் நீங்கி, நிரந்தர சமா தானம் நிலவுவதற்கு நேரு அரசாங்கம் பாடுபடும் என்று எதிர்பார்க் கிறோம்.

சோஷியலிஸ சமுதாய லட்சியம்

சோஷியலிஸ சமுதாய லட்சியத்தைப்பற்றிய தீர்மானம் ஆவடி காங்கிரஸில் இடம் பெறுமுன்னரே, நேருவால் அவரது பேச்சுக் களின் மூலம் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. ஆவடி காங்கிரஸில் பண்டிதநேரு பேசுகையில் தமது லட்சியத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்:

"சோஷியலிஸப் பொருளாதார அமைப்பைக்கொண்ட க்ஷேம நல ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் லட்சியத்துக் கேற்ற முறையிலேயே

திட்டமிருக்கவேண்டும். உற்பத்தியைக் கூடுமானவரை துரிதமாகப் பெருக்கி, சமமாகப் பகிர்ந்தளிப்பதன் மூலமே இதனைச் சாதிக்க முடியும். இந்த லட்சியங்களைக்கொண்ட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மக்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்."

எனவே நேருவின் சோஷியலிஸ லட்சியத்துக்கான திட்டம் அடுத்து வரும் ஐந்தாண்டுத் திட்டங்கள்தாம் என்றே தெரிய வருகிறது. இந்த லட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு, பத்து வருஷ காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்றும், அடுத்துவரும் இரு ஐந்தாண்டுத் திட்டங்களும் அதற்கு வழி வகுக்கும் என்றும் நேரு அறிவிக்கிறார். ஆனால், ஏற்கெனவே திட்டமிடப்பெற்று அமலாகிவரும் ஐந்தாண்டுத் திட்டம் சாதித்துள் ளதென்ன? திட்டம் தொடங்கப்பெற்று நான்கு ஆண்டுகள் ஆகின் றன. எனினும் இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை உயரவில்லை என்பது கண்கூடு. ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்று கூறப்படுகிறது. ஆனால், இந்தப் பெருக்கத்துக்குக் காரணம் கடந்த இரண்டாண்டு களில் பொய்யாது பெய்த பருவமழையே பெரிதும் காரணம் என் பதை அரசாங்க அபிவிருத்தி அறிக்கையே ஒப்புக்கொள்கிறது. மேலும் யுத்தத்துக்கு முந்திய காலத்தில் கிடைத்து வந்ததையும் விட, இந்த உற்பத்தி மிகவும் குறைவானதே. எனவே ஐந்தாண்டுத் திட் டத்தால் உணவு உற்பத்தி பெருகியது என்று கூறுவதற்கில்லை.

தொழில் துறையிலோ, சணல், சர்க்கரை, இரும்பு, எஃகு போன்ற நாட்டின் பிரதான தொழில்களிலும் உற்பத்தி குறைந்துள் ளது என்பதையும் அரசாங்க அறிக்கை கூறுகிறது. பொருள் உற் பத்தி உண்மையிலேயே அதிகரித்திருந்தால் அதற்கேற்ப வேலை செய் வோரின் தொகையும் அதிகரித்திருக்கவேண்டும். ஆனால் அதற்கு மாறாக வேலையற்றோர் கூட்டமே அதிகரித்துள்ளது. ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கிய காலத்தில் பதிவு செய்துகொண்ட வேலையற் றோர் தொகை சுமார் மூன்று லக்ஷம்; இப்போதோ அந்தத் தொகை ஆறு லட்சமாகப் பெருகியுள்ளது. இந்த நிலைமையைக் கொண்டு பார்த்தால், அடுத்த இரு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் மக்க ளின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதும், வேலையில்லாத் திண்டாட் டத்தைப் போக்குவதும் எவ்வாறு சாத்தியம் என்பதுதான் புலப்பட வில்லை. மேலும், இப்போதுள்ள ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து வரப் போகும் ஐந்தாண்டுத் திட்டங்கள் எந்த வகையிலும் மாறுபட்டிருக்கக் கூடும் என்றும் நம்ப வழியில்லை. ஏனெனில் சோஷியலிஸ சமுதாய லட்சியத்தைப் பிரகடனம் செய்யும் பண்டித நேரு, புதிதாக ஏதே னும் 'புரட்சிகரமான' மாறுதல்களையோ நடவடிக்கைகளையோ மேற் கொள்ளுவார் என்று நம்பவும் இடமில்லை.

வழி உண்டா?

'எல்லோருக்கும் வேலை; எல்லோருக்கும் உணவு' என்றுதான் சாதாரண மக்கள் 'சோஷியலிஸம்' என்ற சொல்லைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் எல்லோருக்கும் வேலையும் உணவும் கிடைப்பதற்கு வழி என்ன? நாட்டில் பல தொழில்களும் பெருகவேண்டும்; அப்போதுதான் எல்லோருக்கும் வேலை கிடைக்க முடியும். மக்களுடைய வருமானமும் வாங்கும் சக்தியும் அதிகரிக்கவேண்டும்; அப்போதுதான் மக்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெறும் வாய்ப்பைப் பெற முடியும். நேருவின் சோஷியலிஸ லட்சியம் இதற்கான திட்டங்கள் வகுத்துள்ளதா?

இன்று நமது நாட்டின் பிரதான தொழிற்சாலைகள் யார் வசம் உள்ளன? தொழில் வளர்ச்சிக்கே அத்தியாவசியமான எண்ணெய் உற்பத்தி, நிலக்கரி உற்பத்தி முதலியன தொழில்களெல்லாம் ஆங்கில, அமெரிக்க முதலாளிகள் வசமே உள்ளன. நம் நாட்டில் உற்பத்தியாகும் ரப்பர், தேயிலை, மாங்கனீஸ் முதலிய மூலப்பொருள்களின் உற்பத்தியிலும் ஆதிக்கம் வகித்து வருவது அன்னிய முதலாளிகளே. நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான தொழில்களையெல்லாம் அன்னியர் கையில் விட்டு வைத்தால், நமது தேசியப் பொருளாதார நிலை உயர்வது எப்படி? அந்தத் தொழில்களையெல்லாம் இந்திய அரசாங்கமே பரிபூரணமாக ஏற்று நடத்துவதுதானே தேசியத் தொழில் வளர்ச்சிக்கே முதல்படியாக விளங்க முடியும்! இதுபற்றி 'சோஷியலிஸ லட்சியம்' பிரஸ்தாபித்துள்ளதா? இல்லை. தனிப்பெரும் முதலாளிகளின் வசம் உள்ள எந்தப் பெரும் தொழிலையும் அரசாங்கம் ஏற்று நடத்தக்கூடும் என்றும் நம்ப வழியில்லை; எனவே தொழில்வளர்ச்சி அதிகரிக்காதவரை மக்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கக்கூடும் என்ற உறுதியில்லை; வேலை கிடைப்பது உறுதியில்லாதவரை உணவும் பிறவசதிகளும் கிடைப்பதும் நிச்சயமில்லை.

மேலும் இப்போதுள்ள மக்களின் வருமானமும் வாங்கும் சக்தியும் எவ்வாறுள்ளன? நாட்டுமக்களின் வாழ்க்கை நிலை எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது? இந்திய நாட்டின் முதுகெலும்பு என்று பாராட்டப்படுகிறான் ஏழை விவசாயி. ஆனால், இந்த நாட்டின் பெரும் பகுதி மக்களான விவசாயிகளின் வாழ்க்கைத்தரமோ கடன் சுமையாலும், விலைவாசியாலும், பண்ணைச் சுரண்டலாலும் நாளுக்கு நாள் சீரழிந்து வருகிறது. நிலமற்ற விவசாயக்கூலிகளின் கூட்டம் பெருகுகிறது. நாட்டில் துணி முதலிய பொருள்களின் உற்பத்தி அதிகரித்துள்ளதுஎன்கிறார்கள். நாட்டு மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்திருக்குமேயானல், உற்பத்தியான பொருள்கள் தேங்கிக் கிடக்க மார்க்கமில்லை. ஆனல் நம் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களுக்கோ நம் நாட்டிலேயே கிராக்கி இல்லை. காரணம், மக்களிடம் அந்தப்

பொருள்களை வாங்கும் அளவுக்கு வருமானமில்லை. பொருள்கள் விற்பனையாகாமல் தேங்கினல் ஏற்படக்கூடிய நிலைமை என்ன? அதனால் ஏற்படும் நஷ்டத்தைச் சமாளிப்பதற்காக, தொழிலதிபர்கள் வேலையாட்களைக் குறைக்கிறார்கள். வேலையில்லாதார் கூட்டம் அதிகரிக்கிறது.

இதுதானே நாட்டில் நிலவிவரும் பொதுவான நிலைமை? இந்த நிலைமையை மாற்றுவதற்கு ஆவடி காங்கிரஸ் திட்டங்கள் தீட்டியுள்ளதா என்றால், இல்லை என்றே கூறவேண்டும்.

அப்படியானல் நேரு வகுத்துத்தந்த 'சோஷியலிஸ சமுதாய லட்சியம்' எதைக் குறிப்பிடுகின்றது? இதுபற்றிக் காங்கிரஸ் தலைவர்களும் காங்கிரஸை ஆதரிக்கும் பத்திரிகைகளும் கூறியுள்ள விஷயங்களைப் பார்த்தாலே நமக்கு உண்மை புலப்பட்டுவிடும். 'சோஷியலிஸம் என்ற வார்த்தையைக் கண்டு யாரும் பயப்படவேண்டியதில்லை' என்று அபுல்காலாம் ஆஸாத் இந்திய நாட்டின் பெருமுதலாளிகளுக்குமட்டுமல்ல, அன்னிய நாட்டுமுதலாளிகளுக்கும் அபயஸ்தானம் அருளியிருக்கிறார். காங்கிரஸின் சோஷியலிஸம் சர்வோதயக் கொள்கையே என்று விளக்குகிறார் மகாநாட்டுத் தலைவர் தேபர். இந்தக் கொள்கையால் பெரிய முதலாளிகளின் சொத்துக்கு ஒன்றும் ஆபத்தில்லை என்பதைத் தெளிவு படுத்துகிறது, 'தினமணி'. எனவே இந்தத் தீர்மானத்தால் நாட்டில் புதிய மாற்றங்களோ, புதிய வளர்ச்சியோ ஏற்பட்டுவிடும் என்று நம்புவதற்கு இடமில்லை.

ஏன் இந்த 'லட்சியம்?'

தற்போதுள்ள கொள்கையில் புதிய மாற்றம் எதுவுமில்லையென்ற போதிலும்கூட, நேரு இந்தப் புதிய லட்சியத்தைப் பிரகடனப் படுத்துவதற்குரிய காரணம் என்ன? காங்கிரஸ்காரர்கள் இத்தனை நாளும் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பிரபலப்படுத்தினார்கள். ஆனால் அந்தத் திட்டமோ மக்களிடம் செல்வாக்கும் மதிப்பும் இழந்துவிட்டது; காந்திய சர்வோதய லட்சியமும் மக்களிடம் எடுபடவில்லை. சர்வோதயத்தின் அம்சமான பூதான இயக்கமோ கேலிக்கூத்தாகிவிட்டது. எனவே காங்கிரஸின்மீது நம்பிக்கையை இழந்துவரும் மக்களை மீண்டும் தன்பால் கவர்வதற்கும், ஏற்கெனவே நம்பிக்கையை இழந்து விட்டவர்களை ஏமாற்றுவதற்கும், குழப்புவதற்கும்தான் இந்தப் புதிய லட்சியம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனல் நேருவின் சோஷியலிஸம் நாட்டு மக்களிடம் உற்சாகத்தையோ கவர்ச்சியையோ ஏற்படுத்தவில்லை என்பது வெளிப்படை. இதனை 'ஹிந்து' போன்ற பத்திரிகைகளே ஒப்புக்கொள்கின்றன. சோஷியலிஸம் என்ற சொல்லைக்கண்டு மட்டும் நாட்டு மக்கள் ஏமாற மாட்டார்கள்; சிறுத்தைப் புலியிடம் ஜீவகாருண்ய உணர்ச்சி பிறக்க முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

★

பாராட்டுக்கள்

[சாந்தியை வாழ்த்தி வரவேற்று மேலும் பல தமிழன்பர்களும் வாசக நேயர்களும் நீண்ட கடிதங்கள் பல எழுதியுள்ளார்கள். பயனுள்ள ஆலோசனைகளையும் கருத்துக்களையும் தந்துள்ளார்கள். நேயர்களின் ஆலோசனைகளையும் விருப்பங்களையும் எதிர்காலத்தில் சாந்தி தன்னால் இயன்றவரையிலும் நிறைவேற்றி வைக்கும் என்று உறுதி கூறுகிறோம். கடிதங்கள் எழுதி ஊக்குவித்த அன்பர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அந்தக் கடிதங்கள் சிலவற்றின் சில பகுதிகளை இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

— ஆசிரியர் 'சாந்தி']

''ஈசல்போல் குவிந்து வரும் பத்திரிகைச் சந்தையிலே சாந்தி ஒரு 'விட்டமின் பில்'கள் தாங்கிய புட்டி....சாந்தி தனக்கென ஓர் வழி வகுத்து வெளிவருகிறாள். அதன் தரம் உயர்ந்தது''

''சுதந்திரன்'' (மதிப்புரை), கொழும்பு.

''சாந்தி தமிழகத்தின் 'புதிய சக்தி' என்று கூறுவதில் சிறிதும் ஐயமில்லை. அழகான அட்டைப் படத்துடன் அருமையான விஷயங்கள் கூடிய இப் பத்திரிகைக்குப் பொது மக்களின் ஆதரவு கிடைக்கவேண்டும்.''

''விஜய'' (மதிப்புரை), நெல்லை.

''சாந்தியின் இதழ்கள் இரண்டையும் படித்தேன். உள்ளடக்கம் என்னைப் பரவசத்தில் ஆழ்த்தியது. இரண்டு இதழ்களும் எனக்கு நல்ல பாடங்கள் சில சொல்லித்தந்தன. அரிய பெரிய புதுக் கருத்துக்களையும் அருமையான தமிழில் அள்ளித்தந்தன. சாந்தியில் எதைப் படிப்பது, எதைப் படிக்காமல் விடுவது என்ற பிரசினை இல்லை. அத்தனையும் படிக்க வேண்டியவைகளாக இருக்கின்றன.''

எச். எம். பி. மொஹைதீன், ஆசிரியர் 'தேசாபிமானி', கொழும்பு.

''நாளுக்கொரு இதழ் தோன்றிக் கொண்டிருக்கும் இந்த நாளில் தங்கள் சாந்தி மனச் சாந்தியைத் தந்தது.... சாந்தியில் ஒதுக்கித் தள்ளி விட்டுப்போக ஒன்றுமில்லை. அத்தனையும் பயனுள்ள கருத்துக் குவியல்கள். சாந்திக்கு எனது நல்வாழ்த்துக்கள்.''

'அவ்வை' டி. கே. சண்முகம், சென்னை.

"ஒரே மர்திரியான காதல் கதைகளையே படித்து அலுத்து, நல்ல இலக்கியத்தைச் சுவைக்கத் தவித்துக்கொண்டிருந்த மனதுக்கு 'தேடிச் சென்ற மூலிகை காலைச் சுற்றிக்கொண்டது போல்' ஆயிற்று சாந்தியின் வருகை."

எஸ். மீனுட்சி, கோட்டயம்.

"வெறும் பொழுது போக்காக இல்லாமல் கருத்துக்களுடன் எழுதப்பட்டுள்ள கதைகள் எல்லாம் எங்கள் சிந்தனையைக் கிளறின."

'சாந்தி' வாசகர்கள், கடையநல்லூர்.

"பத்திரிகையின் புனித சங்கல்பங்கள் கதை, கட்டுரை முதலியவைகளிடையே மிளிர்கின்றன. சமூக ஊழல்களும் நாகரிகம் என்ற போர்வையால் மறைத்துக் காட்டப் பெறும் கீழ்த்தரமான செய்திகளும் நகைச்சுவை தோன்றச் சிற்சில இடங்களில் மிளிர்கின்றன. இதை அனுபவிக்கத் தெரியாத சிலர் தம்மைக் குறை கூறுவதாகக் கருதக்கூடும். குறைகளைப் போக்க இதனினும் மேம்பட்டவழி என்ன இருக்கிறது?"

வித்வான் மு. சண்முகம்பிள்ளை, சென்னை.

"சமீபத்திலே நான் வாசித்த வேறெந்தச் சஞ்சிகையும் வரவழைக்க முடியாததான கலை அனுபவம், சுவை நுகர்ச்சி என்பனவற்றைச் சாந்தி வரவழைக்கிறது. சாந்தி மென்மேலும் சிறந்து வளர வேண்டும் என்பது என் ஆசை"

இ. முருகையன், இலங்கை.

"சாந்தியின் பிரதிகள் வரண்டு போயிருக்கும் இன்றையத் தமிழ் இலக்கிய உலகில் அதிகம் நம்பிக்கையைத் தருகிறது. நல்ல கவிதைகள் எழுதப்படுவதும் வெளிவருவதும் அருகிய இந்நாளில் நல்ல கவிதைகளைச் சாந்தி வெளிக்கொணரும் என்பதை வெளிவந்த சாந்தி காட்டுகிறது..."

க. கைலாசபதி, கொழும்பு.

"புதுமைப்பித்தன் நம்மைவிட்டு மறைந்து போனுலும்கூட, அவர் வகுத்துத்தந்த இலக்கியப் பாதை அடைபடவில்லை என்பதைச் சாந்தியின் ஒவ்வொரு பக்கத்திலும் கண்டு பரவசமடைகிறேன். கருத்திலும் நடையிலும் துணிவிலும்கூட, சாந்தி தமிழகத்தில் தலைசிறந்த சிறப்படையும் என்று நம்புகிறேன்."

சாரண பாஸ்கரன், கூத்தாநல்லூர்.

சின்னத்தனம் மிகுந்து சீழ்பிடித்த உள்ளமுடன்
பொன்னுக்கடி பணிந்து பொய்யுரையால்—கன்னக்கோல்
இட்டவரின் பேனுமுள் இங்கொடித்து, சாந்தியே நீ
வெட்டரிவாள் பாட்டெடுத்து வெல்.

எம். சி. சீனிவாசன், சென்னை.

★ குட்டிக்கதை

நல்ல தீர்ப்பு!

ஐவான் கிரிலாவ்

முன்னொருகாலத்தில் ஒரு குடியானவன் ஒரு வெள்ளாட்டைக் கட்டி இழுத்துக்கொண்டு நீதிஸ்தலத்துக்கு வந்தான். அந்த நீதிஸ்தலத்தில் ஒரு நரிதான் நீதிபதியாக வீற்றிருந்தது. நீதிபதியின் முன்னர் அந்தக் குடியானவன் தன்னுடைய வழக்கை எடுத்துக்கூறினன்:

"நீதிபதி அவர்களே! முந்திய நாள் இரவில் நான் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சிவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது, என் குடிசையிலிருந்த இரண்டு கொழுத்த கோழிக் குஞ்சுகளைக் காணவில்லை; அந்தக் குஞ்சுகளின் இறகுகளும், எலும்புகளும் மட்டுமே சிதறிக் கிடந்தன. அன்றைய தினத்தில் என் குடிசையில் இந்த ஆட்டைத் தவிர வேறு யாருமில்லை. எனவே இந்த ஆடுதான் அந்தக் கோழிக் குஞ்சுகளைக் கொன்று தின்றிருக்க வேண்டும். அநியாயமாக என் கோழிக் குஞ்சுகளைத் தின்ற இந்த ஆட்டைத் தக்கபடி தண்டிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்."

குற்றம் சாட்டப்பட்டு நின்ற அந்த வெள்ளாடும் அழுது புலம்பியவாறு தனது கட்சியை எடுத்துக் கூறத் தொடங்கியது.

"தர்மதுரைகளே! அன்றிரவில் என்ன நடந்தது என்பதே எனக்குத் தெரியாது; ஏனெனில் அன்றிரவில் நான் அயர்ந்து தூங்கி விட்டேன். இந்தக் குடியானவனின் குற்றச் சாட்டு அபாண்டமானது. என் ஆயுளில் நான் இதுவரை எந்த மாமிசத்தையும் தொட்டதுகூட இல்லை. நான் சுத்த சைவன்! இது சத்தியம். என்னை நம்புங்கள்."

நீதிபதி கனம் நரியார் அவர்கள் வழக்கைச் சீர்தூக்கிப் பார்த்துத் தனது தீர்ப்பை வழங்கினர்: "வெள்ளாட்டின் வாக்கு மூலத்தை நம்பவே முடியவில்லை; குடியானவனின் கூற்றுப்படி, இந்த வெள்ளாடும் கோழிக் குஞ்சுகளும் அருகருகேதான் இருந்தன என்பது தெளிவாகிறது. மேலும் கொழுத்த கோழிக் குஞ்சுகளின் மாமிசமோ தேவாமிர்தம் போல் ருசி நிறைந்தது. எனவே இந்த வெள்ளாடுதான் அந்தக் கோழிக் குஞ்சுகளைக் கொன்று தின்றிருக்க வேண்டும். குடியானவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து, அவனது கோழிக் குஞ்சுகளைத் தின்று தீர்த்த இந்தக் கொடிய வெள்ளாட்டுக்கு நான் மரண தண்டனை விதிக்கிறேன். தண்டனை இங்கேயே இப்போதே நிறைவேற்றப்படும். தண்டனை நிறைவேறியதும், வெள்ளாட்டின் மாமிசத்தை நீதிஸ்தலத்தாருக்குக் காணிக்கை செலுத்திவிட்டு, அதன் தோலை மட்டும் குடியானவன் நஷ்டஈடாக எடுத்துச் செல்லலாம்!" ★



பொறுக்கி வர்க்கம்

சுந்தர ராமசாமி

இதுதான் ஹோட்டல்.

அடேயப்பா என்ன கூட்டம்! சர்வர் மிஷின்கள் பம்பரக்காய்கள் மாதிரீ சுழலுகின்றன. அன்றைய வேலையால் சக்கையாக்கி உமிழ்ந்துவிட்ட மாஜி மனித ஆத்மாக்கள், வம்பளந்தவாறே சுயப்பிரக்ஞையின்றி தட்டைக் காலி செய்கிறார்கள். பக்ஷணங்கள் தான் எத்தனை தினுசுகள்?

வெளியே—

ஓட்டல் எச்சில் தொட்டி. அதைச்சுற்றி இவர்கள்—இவை என்ன? நமது சகவர்க்கமா? பிராணி வர்க்கத்தைச் சேர்ந்ததாக இருக்குமோ? சே! அவை கௌரவமாக வாழ்பவை!

நீங்கள் இவற்றைப்பார்த்திருக்கிறீர்களா? உங்களுக்கு எந்த ஊர்? நம்ம பக்கம்தானே? சரிதான். அப்பொழுது நீங்கள் இவர்களைப் பார்க்காத நாளே இருந்திருக்க முடியாதே!

ஓட்டலில் ஏதாவது தின்று தொலைக்கிறோமென்றால், இலையைத் தொட்டியில்போடவேண்டாமா? இங்கு அதற்குக்கூடச் சுதந்திரம் கிடையாது. தொட்டிக்குள்ளே இவர்கள். ஒன்று... இரண்டு... மூன்று..... ஸ்திரவாசம் இங்கேயேதான். கண்களில்தான் என்ன ஆவல்! உங்களைப் பார்க்கவில்லை. உங்கள் கையை, கை இலையைப் பார்க்கிறார்கள். ஏதாவது மிச்சம் மீதி வைத்திருக்கிறீர்களா? நீங்கள் தானே! நன்றாக வைத்தீர்களே! அதெல்லாம் பெரிய இடத்தில்!

தொந்திரவுதான். நன்றாக, ருசியாக, தேவாமிர்தமாக, (இதெல்லாம் வயிற்று நிலையைப்பொறுத்தது) சுவைத்

"ச்சீசீ! எச்சிலைத் தின்று உயிர் வாழ எண்ணுபவன் மனிதனா? மனித உணர்ச்சியையும் மானபிமானத்தையும் உலுப்பி விட்ட மிருகமல்லவா அவன்!" என்று சிலர் நினைக்கிறார்கள். இந்தக்கதையில் வரும் பொறுக்கி மட்டுமல்ல, அவனது வர்க்கம் முழுவதுமே கும்பீத் தீயை அணைக்கக் குப்பைத் தொட்டியைத்தான் நாடுகிறார்கள். ஆனால் அந்தச் 'சிலர்' நினைப்பது போல் அவர்கள் மனித உணர்ச்சியற்றவர்களா? மானபிமானம் அற்றவர்களா? மிருகப் பிறவிகளா?......

துக் கொண்டிருக்கிற பொழுது அதோ. அதோ தலை தூக்கிப் பார்க்கிறார்கள். என்ன பார்வை அது? உங்கள் இலையிலிருப்பது அப்படியே அவன் வாய்வழியே கீழ் இறங்குவதுமாதிரிதோன்று கிறதல்லவா? முதல் பார்வை யிலேயே ஆழமான வெறுப்புத் தானே ஏற்படுகிறது! இயற்கை தானே! ஒரு நாய்தான் பார்த்துக் கொண்டிருக்கிறதென்றால் இந்த அருவருப்பு உங்களுக்கு ஏற்படவே ஏற்படாது. அது மட்டுமல்ல, சிலசமயங்களில் ஒரு கவளம் உருட்டி எறிந்தாலும், எறிந்து விடுவீர்கள். ஆனால் இங்கு அப்படியெல்லாம் ஒன்றும் தோன்றிவிடாது. சகவர்க்கம்தான் என்பதற்கு இதைவிட வேறு என்ன ருசு வேண்டும்?

அவர்கள் பார்த்துக்கொண் டே நின்று விட்டுப்போகட்டும். நீங்கள் சாப்பிடுங்களேன். சும்மா சாப்பிடுங்கள். ஓட்டலில் எவ்வளவோ பேர்கள் உங் களைப் பார்த்துக் கொண்டிருக்க வில்லையா? இதையெல்லாம் பார்த்தால்முடியுமா? அதுவும்நம் புண்ணியதேசத்தில். சாப்பிடுங் கள். என்ன முடியவில்லையா? ஒரேயடியாக மறந்தே விடுங் களேன். சாத்தியமில்லையா? ருசி குறைந்து கொண்டே போ கிறதா? ஆமாம், வாஸ்தவம் தான். அந்தக் கண்கள், அந்த முகம் இவற்றை மறக்க முடி யாது. அது அசட்டை செய்ய வேண்டிய, செய்யக் கூடிய பொருளல்ல.

கண் தெரியாத தோஷத் தாலோ, புத்திசுவாதீனக்குறை வினாலோ, ஒருவர் ஒரு முழு ரச வடையை இலையில் மடக்கிக் கொண்டு எச்சில் தொட்டியை நெருங்கிவிட்டார். ஒரு நிமிஷம் "லோ, லோ" என்ற கூப் பாடு. மறு நிமிஷம், வயிறு வளர்த்திருந்த துணிச்சலில் ஒருவன் வந்தவர் கையிலிருந்தே அதைத் தட்டிக்கொண்டு போய் விட்டான். பொறுக்கியின் கை, அவரது எச்சில் கையில் பட்டு விட்டது! மானம், மரியாதை யோடு வாழ்பவர்களால் இதைத் தாங்க முடியுமா? தாங்கக் கூடி யதா? அவர் ஓட்டல் கல்லாப் பெட்டியில் இருந்த பைய னிடம், சற்றுக்காரமாக விஷ யத்தைச் சொல்லிவிட்டுப்போய் விட்டார். பையனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட் டது. அதிலும் கல்லூரி மாண வன். தமாஷுக்காகவும், சில் லறை தட்டுப்படுகிற சமயமும் அப்பாவுக்கு உதவி செய்ய ஓடோடி வருவான். ஓட்டலுக் குள் நுழைந்து விட்டால் ஒரே ரகளைதான். சர்வர்களுக்கு வரி சையாக நாமார்ச்சனை. மேஜை துடைக்கும் பையன்களின் தலை வீங்கிவிடும். பிறர் துன்பத்தில் இன்பம் காணக்கூடிய தன் மையை நன்றாக உரம்போட்டு வளர்த்திருந்தான், அந்தப் பையன்.

பையன் மெதுவாக கல்லாப் பெட்டியை விட்டிறங்கி அடுக் களையை அடைந்தான். நீளமான வால் கரண்டி இருந்தது. தூக் கிப்பார்த்தான். நல்ல கனமான கரண்டி. தனது இடது கை யிலேயே லேசாக அடித்துப் பார்த்தான். சதையைச் சுள்ளென்று பிடித்தது. அப் படியே கால் அரவமின்றி புழக் கடை வழியே வெளியே வந்தான்.

எச்சில் தொட்டியில் ஒரே ஒரு பொறுக்கி மட்டும் 'டிபன்' சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வயிற்றைத் தொட்டியின் விளிம்பில் அழுத்தி, ஒடிந்து படுத்துக்கொண்டு, தொட்டிக்குள் கிடக்கும் இலைகளை அளைந்து கொண்டிருந்தான். மண்ணில் கால் கட்டை விரல்களைமட்டும் அழுத்தமாக ஊன்றிக் கொண்டிருந்தான்.

முதலாளி மகனுக்கு இதைப் பார்த்ததும் இன்னும் தமாஷான ஒரு 'வேலை'யும் ஞாபகமாயிற்று! மனத்துள் சிரித்துக் கொண்டான். வால் கரண்டியை முதுகில் மறைத்துக்கொண்டு, பம்மிப் பம்மி முன்னேறினான். பக்கத்தில் நெருங்கினதும் சிறிது நேரம் அசைவின்றி நின்றான். பொறுக்கியோ சுயப்பிரக்ஞையின்றி போஜனம் பண்ணிக்கொண்டிருந்தான்.

முதலாளி மகன் லேசாக திரும்பிப் பார்த்தான். பின்னால் ஒருவருமே இல்லை. லேசாகக் குனிந்தான். அசிங்கத்தையும் பாராமல் அப்படியே பொறுக்கியின் இரண்டு கால்களையும் பிடித்து,மேலே வாரிவிட்டான். 'தொப்' பென்று தலை தொட்டிக்குள் தலைகீழாய்க் குத்தியிடிக்கும் சப்தம் கேட்டது. பையன் அலறி அடித்துக் கொண்டு எழுந்தான்.விழுந்தது அடி!

பளீர்!

ஐயோ!!

பையனுக்கு என்னவென்றே விளங்கவில்லை, எதிர்பார்க்காமல் தாக்கப்பட்டதில் பரபரப்பு; படபடப்பு. அதற்குள் மீண்டும் அடி விலா எலும்புகளில் விழுந்தது! பையன் கோரமாக, மனமே விண்டு விடும்படி சப்தம் போட்டான்.

அவனால் தொட்டியிலிருந்து வெளியேறவும் முடியவில்லை. சுவரில் காலைத் தூக்கி வைத்தால் காலில் அடி விழுந்தது. கையை வைத்தால் கையில் அடி விழுந்தது. மூன்றாவதாக ஒரு அசுர அடி முதுகில் விழுந்தது. பையனால் பொறுக்க முடியவில்லை.ராக்ஷஸ பலம் அவனுள்ளே வந்து புகுந்து கொண்டது போலிருந்தது. அவன் அப்படியே முதலாளி மகன் மேல் தாவி விழுந்தான். 'சின்ன' முதலாளி இந்தத் தாக்குதலை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவனுக்கு நிலை தடுமாறி விட்டது. பொறுக்கி அப்படியே தலையைத் திருகிப்போட்ட கோழியின் உடல் மாதிரி தரையில் கால் பாவாமல்,ஓட்டலுக்குவெளியே வீதிமண்ணில்வந்துவிழுந்தான். முதலாளி மகனின் வெள்ளைச் சட்டையில் பொறுக்கியின் ஐந்து எச்சில் கை விரல் அடையாளங்களும் பளிச்சென்று பதிந்திருந்தன.

வீதியோரத்தில் நின்று கொண்டு பரிதாபகரமாகபிலாக்கணம் தொடுத்துக் கொண்டிருந்தான் பொறுக்கி.கையிலும் விலாவிலும், முதுகிலும் வீறு வீறாய்த் தடித்திருந்தது.தலையில் நெற்றிக்கு மேலே, வீங்கிப் பளபளத்திருந்தது. குய்யோ முறையோ என்று கூப்பாடு போட்டான். இடையிடையே நடந்த சம்பவத்தையும் அரைகுறையாக,புரியாத, அவனது சொந்த பாஷையில் வெளியிட்டான். அவன் முன் யாரும் இல்லை. அவன் சொல்வதைக் கேட்க

அங்கு யாரும் இல்லை. ஒரு சமயம் அவன் நடந்த விஷயத்தை உலகத்துக்கே அறிவித்துக் கொண்டிருந்தானோஎன்னவோ! உடம்பில் வீங்கியிருப்பதைப் பார்த்து இன்னும் பெரிதாக ஓலமிட்டான். சிறு பையன். நோஞ்சலான உடம்பு. அந்தப் பேயறையை அவனால் தாங்க முடியுமா? பொறுக்கி என்றாலும் குழந்தைதானே? அவன் மண்ணில் விழுந்து, விழுந்து புரண்டான். தலைமயிரைப் பிடித்து இழுத்துக்கொண்டான். மண்ணை அள்ளி உடம்பெல்லாம் போட்டுக்கொண்டான்.

ரோட்டில் எவ்வளவு பேர்களோ போய்க்கொண்டிருந்தார்கள்; வந்துகொண்டிருந்தார்கள். நின்று விசாரிக்க அவர்களுக்கென்ன பைத்தியமா? வேறு வேலை கிடையாதா? மேலும் ரோட்டில் நின்று, பொறுக்கியிடம் துக்கம் விசாரிப்பது கௌரவக் குறைவான காரியமல்லவா?

எதிர்ப்புறத்தில் அவிழ்த்துப் போட்டிருந்த வண்டிக் குள்ளிருந்து ஒரு கிழவன் இறங்கி, ஆடி ஆடி வந்தான். பையனின் அருகில் வந்து நின்று கொண்டான். பொறுக்கியின் நீர்மல்கிய கண்கள் கிழவன் நிற்பதைக் கவனித்து விட்டன. இப்பொழுது பொறுக்கி, கிழவனின் இரக்கத்தை இன்னும் அதிகமாகக் கவர்வதற்காக உச்சஸ்தாயியில் கூப்பாடு போட்டான். அந்த இளம் உள்ளம் தன் பக்கம் யாராவது வருவார்களா என்ற ஆதங்கத்தில் துடித்துக்கொண்டிருந்தது போலும்!

"ஏம்'லெ அழுதே?" என்று கிழவன் கேட்டான்.

"அடிச்சுப் போட்டாரு!" என்றான் பையன், ஓட்டலை சுட்டிக் காட்டிக்கொண்டே.

சந்தைக்குச் சாமான் வாங்குவதற்குப் போய்க்கொண்டிருந்த ஒருவனும் நின்று கவனித்தான். அவன் தலையில் ஒரு கூடையை கவிழ்த்தியிருந்தான் பையன் உடம்பில் அவன் கண்கள் ஓடிக்கொண்டிருந்தன. பையனின் கோலம் எந்தக் கல் மனத்தையும் இளக்கிவிடும்.

"லேய்! நான் சொல்வது போலெ கேப்பியா?" என்றான் கிழவன்.

பையன் அழுகையைச் சற்று நிறுத்திக்கொண்டான்.

"அன்னா நிக்கான் பாரு, போலீசுக்காரன். அவன்கிட்டப் போயி சொல்லு. சும்மா அழுதுகிட்டு நின்னா முடியுமாலே, பயித்தியாரப் பயலெ!"

தலையில் கூடையைக் கவிழ்த்துக்கொண்டிருந்த மனிதன் குப்பென்று சிரித்தான். அவனுக்கு உலக விவகாரம் தெரியும் போலிருந்தது.

"வேய், போலீசும் படையும் இவனுக்காகவா இருக்கு? பொறுக்கிப் பயல்களை கவனிக்கவா அவங்க இருக்காங்க? என்னய்யா சொல்லுதீரு, பயித்தியம் புடிச்ச மனிசா!"

கிழவனுக்குச் சற்றுக் கோபம் வந்தது. இருந்தாலும் அவன் சொல்லுவது சரிதான் என்று பட்டது. அவனுடைய ஐம்பது வருட அனுபவத்தில் போக்கற்றுப் போனவர்களுக்குப் போலீஸ் வக்காலத்து வாங்கினதாகத் தெரியவில்லை.

சந்தைக்குப் போக வேண்டியவன் சந்தையைப் பார்த்துப் போய்விட்டான். கிழவன் வண்டிக்குள் போய்ப் படுத்துக் கொண்டான். பையனுக்கோ வெறும் ஏமாற்றம் தான் மிஞ்சிற்று. அவன் இன்னும் பலமாகக் கூக்குரல் போட்டு அழுதான். அடிபட்டிருந்த இடத்திலெல்லாம் லேசாக ரத்தம் கசிந்து நின்றது. தலையில் வீங்கியிருந்த இடம் அதன் பளபளப்பை இழந்து, நீலம் பாரித்து, கன்றிப் போய் விட்டது.

கூட்டம் சாரி சாரியாகப் போய்க்கொண்டிருந்தது. சிலர் நின்று விசாரித்தார்கள். இரக்கப்பட்டார்கள்; போய்விட்டார்கள்!

பொறுக்கி மண்ணில் புரண்டு அழுதுகொண்டிருந்தான்.

திடீரென்று ஒரு சந்திலிருந்து ஒருவன் பிரத்தியக்ஷமானான். திடகாத்திரமான சரீரம். இடுப்பு சுருங்கி, மார்பு நன்றாக விரிந்து கம்பீரம் கொடுத்திருந்தது. வயிரம் பாய்ந்த புஜங்கள். இடுப்பில் பச்சைக் கட்டம் போட்ட கைலியைச் சுற்றி, அதை உள்நிஜாரின் விளிம்பு தெரியும்படி தூக்கிக் கெட்டியிருந்தான். தலையில் முண்டாசு. காதில் பாதி குடித்துத் தீய்ந்து போயிருந்த கட்டைப் பீடித் துண்டு ஒன்றைச் சொருகி இருந்தான். முகத்தில் மொத்தமாக ஒன்றரைக் கண் தானிருந்தது.

பொறுக்கி அவனைக் கண்டதும் அவனிடம் ஓடினான். நம்பிக்கையின் ஒளி அவன் கண்களில் தெரிந்தது. பொறுக்கி அவனிடம் தன் பாஷையில் விஷயத்தைத் தாளித்துக்கொட்டினான். ஆனால் வந்தவன் விஷயத்தை உடனே புரிந்து கொண்டான். அவன் உதடுகள் துடித்தன.

இப்பொழுது அதே வர்க்கத்தைச் சேர்ந்த மற்றொருவன் எங்கிருந்தோ வந்து சேர்ந்தான். அடிபட்ட பொறுக்கியின் சமவயதுள்ள இரண்டு பொறுக்கிகளும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அடிபட்ட பொறுக்கி ஓவென்று அழுது கொண்டிருந்தான். உடம்பின் வலி சற்று தணிந்திருந்தாலும் மனவலி அதிகரித்துக்கொண்டே இருந்தது போலிருக்கிறது. மேலும் இப்பொழுது பதில் கேட்க, விசாரிக்க, ஆள் வந்திருக்கிறது. பதில் கேட்க வேண்டும்! அடிபட்ட எத்தனை பொறுக்கிகளின் சார்பின் பதில் கேட்க வேண்டியிருக்கிறது!

சிறிது நேரத்திற்கெல்லாம் ஓட்டல் முன் ஒரே கூட்டம். எங்கிருந்துதான் வந்து கூடினார்களோ? பொறுக்கிகள்! பொறுக்கிகள்!! பொறுக்கிகள்!!! பொறுக்கி வர்க்கமே திரண்டு விட்டது. அவர்களைச் சுற்றிலும் பாதசாரிகள்; வழிப்போக்கர்கள். எல்லோருடைய முகத்திலும் 'என்ன? என்ன?' என்ற கேள்விக் குறி.

ஒன்றரைக் கண்ணன் பலமான குரலில் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தான்.

"பாருங்கய்யா, பையன் முதுகைப் பாருங்கய்யா. அடியான அடியா இது?எருமை மாடு தாங்குமா? ஒங்களுக்கெல்லாம் கொளந்தெ குட்டி கெடையாதா? இவன் என்ன குத்தம் பண்ணிப்புட்டான் தெரியுமா? தொட்டியிலெ எச்சிலெ பொறுக்கிப்

போட்டான். என்ன அநியாயம் பாருங்கய்யா!''

கூட்டத்தின் இரக்க உணர்ச்சியைத்தட்டி எழுப்பி, தன் பக்கம் திருப்புவதற்குரிய ஏதோ ஒரு சக்தி அவன் முகபாவத்திலும், குரலிலும் இருந்தது. கூடியிருந்தவர்களும் மனிதர்கள் தானே!

கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த கிழவன் கரகரத்த குரலில் சொன்னான்:

''அக்குருமம்தான். பணக்கொழுப்பு. கையை மொறிச்சுப் போடணும்!'' ரத்தினச் சுருக்கமாகக்கிழவன் சொல்லி முடித்துவிட்டு, கூட்டத்தைச் சுற்றிப் பார்த்தான. எல்லோரும் முகபாவத்தினுலேயே அவன் கூற்றை ஆமோதித்தார்கள்.

இடுப்பில் கூடை வைத்துக்கொண்டிருந்த ஒரு கிழவி வருத்தப்பட்டாள்.

''என்ன அடி அடிச்சிருக்கான்? சண்டாளன்! கொளந்த குட்டி அத்தவன் போலிருக்கு! வெளங்கவா போருன்!''

கூட்டம் அதிகரித்துவிட்டது.

ஒன்றரைக்கண்ணன் அலறிக்கொண்டிருந்தான். அவன் கூப்பாடு போடுவதைப் பார்த்தால் காலம் காலமாக அடி வாங்கி, உதைபட்டு, அனுதையாகச்சந்து பொந்துகளிலிருந்து அழுது ஓலமிட்டு ஓய்ந்த, நூற்றுக்கணக்கான பொறுக்கிகளுக்கெல்லாம் சேர்த்துப்பதில் கேட்பது போலிருந்தது.

ஓட்டல் சர்வர் ஒருவன் வெளியே வந்து விசாரித்தான்; சமாதானம் சொன்னுன்.

''நீரு ஓம்ம சோலியப்பாத்துக்கிட்டுப்போம் வேய்! அடிச்ச ஆளுதான் வந்து சமாதானம் சொல்லணும்.''

ஒன்றரைக்கண்ணன் அலறினுன். கூட்டத்தில் அவனுக்கு நல்ல பின் பலமிருந்தது. பொறுக்கி மட்டும் விட்டு விட்டு அழுது கொண்டிருந்தான்.

இப்பொழுது ஓட்டலுக்குள் ஆள் நுழைய முடியாதபடி, கூட்டம் வாசலை அடைத்து விட்டது. ஓட்டலுள் இருந்தவர்கள் உள்ளேயே அடைந்துவிட்டார்கள். வெளியே வர வழி இல்லை.

ஒன்றிரண்டு போலீஸ் தொப்பிகளும் கூட்டத்திடையே தென்பட்டன. கூட்டத்தின் பலத்த அனுதாபத்தைத் தெரிந்துகொண்டு அவர்கள் வாய் திறவாமல் நின்று கொண்டிருந்தார்கள்.

ஹோட்டல் பட்டறையில் முதலாளி மகனைக் காணவில்லை. அவன் புழக் கடை வழியே நழுவி விட்டான்.

ஹோட்டல் சர்வர் ஒருவன் முதலாளி வீட்டுக்கு ஓடினுன். கையோடு அவரைக் கூட்டிக்கொண்டும் வந்து விட்டான்.

முதலாளி வந்ததும், கூட்டத்தின் மனப்பான்மையை தெரிந்துகொள்ளாமலே கூப்பாடு போட்டுப் பார்த்தார். ஒன்றரைக்கண்ணன் மசியவில்லை. இப்பொழுது அவனேடு ஒன்றிரண்டு பேர்களும் கூடச்சேர்ந்து கொண்டு வாதாடினுர்கள்.

முதலாளி போலீஸ் ஜவான்களைச் சாடை காட்டி விட்டு உள்ளே சென்ருர். அவர்கள் பின்னுல் போனுர்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஜவான்கள் திரும்பிவந்து ஒன்றரைக்கண்ணனை அதட்டினுர்

கள். பொறுக்கி வர்க்கமும் கூட்டமும் இப்பொழுது ஒன்று சேர்ந்துகொண்டது. வீறு கொண்டு எழுந்த ஆட்சேபக் குரலை அவர்களால் சமாளித்துக்கொள்ள முடியவில்லை. மேலும் விஷயம் பெரிய ரகளையாக வளர்ந்து விடக்கூடாதே என்று அவர்கள் அஞ்சினுர்கள். பொறுக்கிக்கு அவர்கள் பயப்படமாட்டார்கள். என்றாலும் பொறுக்கி வர்க்கத்திடம் சிறிது பயமிருந்தது. இப்பொழுது அது ஒன்று திரண்டு நிற்கிறது. ஒரே குரலில் பேசுகிறது. என்ன செய்ய முடியும்?

போலீஸ் ஜவான்கள் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரும்பியதும் கூட்டத்தின் பின் புறமிருந்து ஒலம் மெதுவாக கிளம்பிற்று.

''ஓ ஓ......ஓஓ......கூ ஊ கூ ஊ!''

ஆனுல் ஒன்றரைக்கண்ணன் பொறுப்புணர்ச்சியுடன் கை உயர்த்தி, வாயைப் பொத்திக் காட்டி அதை அடக்கினுன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் முதலாளி வந்தார். அவர் முகம் அவமானம் தாங்க மாட்டாமல் சிவந்து போயிருந்தது. அவர் குரல் சுருதி தாழ்ந்து ஒடுங்கிப் போய்விட்டது. அவருக்கு எப்படியாவது கூட்டம் கலைந்து விட்டால் போதுமென்ருகிவிட்டது. அவர் மெதுவாகத் தாழ்ந்த குரலில் பேசினுர். கலைந்து போகும்படி தாழ்மையாக வேண்டிக்கொண்டார். இப்படி ஒரு பொறுக்கியின் முன் தலை குனியவேண்டி வருமென்று அவர் கனவிலும் எண்ணியதில்லை. காலம் மாறிவிட்டது. 'கலி' முற்றிவிட்டது!

அவர் முகத்தைப் பார்த்து ஒன்றரைக்கண்ணன் கேட்டான்:

''இவன் திருடினுனு?''

''இல்லை'' என்ருர் முதலாளி.

''அல்வாவும் சிலேப்பியும் தின்னுபோட்டு துட்டுத்தராமெ நளுவிட்டானு?''

''இல்லை''

''பின்னே என்,வேய் இவனெ அடிச்சீரு?''

முதலாளி பதில் பேசவில்லை.

''எச்சில் தின்னதுக்கு அடியா?'' என்றது கூட்டத்திலிருந்து மற்ருெரு குரல்.

''எச்சில் இலை தின்னவனுக்குத்தான் சொந்தம். இவர் அதற்கும் சேர்த்துத்தான் காசு வாங்கி இருப்பாரே!'' மற்ருெரு குரல் பொருளாதார நுணுக்கத்தோடு பேசிற்று.

முதலாளி மெதுவாக ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து ஒன்றரைக்கண்ணன் முன் நீட்டினுர்.

ஒன்றரைக்கண்ணன் மறு நிமிஷம் அதை அவர் கையிலிருந்து பிடுங்கி வீசி எறிந்தான்.

''இப்படி ரூபாயை தந்து ஏமாத்திப் போடலாம்னு நெனைக்கவேண்டாம். இந்த ரூவாயை நம்பி எதை வேணும்னுலும் செய்யலாம்கிற திமிருவந்து போச்சுல்லெ? உம்ம மாதிரி ஒரு அம்மைதான்' வேய் இவனையும் பெத்துப் போட்டிருக்கா. இவன் உடம்பிலேயும் ரத்தம் தானே ஓடுது.வேய்,சின்னஞ்சிறுவயசிலெ நானும் பொறுக்கியாத் திரிஞ்சவன்

தான். இந்த ஓட்டல்'லெ எச்சில் பொறுக்கி ஒம்மெ கையாலெ அடி வாங்கி இருக்கேன். அது ஒமக்கு மறந்து போயிருக்கும். ஆனு எனக்கு மறக்கலெ. இண்ணைக்கு ஒம்ம மவன் இவனெ அடிச்சிருக்கான். அண்ணைக்கு நான் அடிபட்டு அளுதுக்கிட்டு ஓடினேன். இண்ணைக்கு அப்படியில்லெ.காலம் மாறிப் போச்சு. தெரிஞ்சுக்கிடும்!''

''பின் என்ன செய்யணும்னு சொல்லு?''

ஓட்டல் முதலாளி சாந்தமாக வழிக்கு வந்தார்.

''ஒம்ம மவனெ கூட்டிக்கிட்டு வாரும்'' என்ருன் ஒன்றரைக்கண்ணன்.

மகனை ஹோட்டல் பூராவும் தேடிஞர்கள். காணவில்லை. கடைசியில் எங்கிருந்தோ கூட்டிக்கொண்டு வந்தார்கள்.

''மன்னிப்புக் கேக்கச் சொல்லும் வேய்! ஒம்ம, மவனெ!'' ஒன்றரைக்கண்ணன் சொன்ஞன். சொல்லிவிட்டு கூட்டத்தைப் பார்த்து, ''நான் சொல்லுவது நியாயம் தானே?'' என்று வினயமாகக் கேட்டுக்கொண்டான். ''நியாயம் தான், நியாயம்தான்'' என்று குரல் எழுந்தது.

ஒன்றரைக்கண்ணன் சொல்லும் வாசகத்தை அதே பாஷையில் முதலாளி மகன் விக்கி விக்கித் திரும்பச் சொன்ஞன்.

கூட்டம் வேடிக்கை பார்த்தது.

அடிபட்ட பொறுக்கி சிரித்தான். ★

✸

யாருக்கு நோய்?

ஒருவனுடைய மனைவிக்குக் குணமில்லை. அவன் அந்த ஊரிலுள்ள ஒரு டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தான். மனைவி படுத்திருந்த அறைக்குள் டாக்டர் சென்ருர்; புருஷன் வெளியே காத்துக்கொண்டிருந்தான். நோயாளியைப் பரிசோதனை செய்ய உள்ளே சென்ற டாக்டர் சிறிது நேரத்தில் வெளியே வந்தார். வெளியே வந்து, புருஷக்காரனிடம் ''உங்களிடம் ஒரு ஸ்க்ரூ டிரைவர் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

அவனும் ஸ்குரூ டிரைவரை எடுத்துக்கொடுத்தான்; டாக்டர் மீண்டும் உள்ளே சென்ருர். சிறிதுநேரத்தில் மீண்டும் திரும்பி வந்து ''உங்களிடம் ஒருஉளியும் சுத்தியலும்இருக்குமா?''என்றுகேட்டார்.

புருஷன் அவற்றையும் தேடி எடுத்துக்கொடுத்தான்; டாக்டர் மீண்டும் உள்ளே சென்ருர்; இரண்டு நிமிஷத்தில் மீண்டும் வெளியே வந்தார்.''உங்களிடம் பற்றுக்குறடு இருக்கிறதா?'' என்றுகேட்டார்.

புருஷன் திடுக்கிட்டுவிட்டான். ''டாக்டர்! என் மனைவிக்கு என்ன உடம்புக்கு? இதையெல்லாம் எதற்குக் கேட்கிறீர்கள்?'' என்று பரிதவித்தான்.

'' அவளுக்கு என்ன நோயோ? அது இனிமேல் தெரியவேண்டும். இப்போது என் மருந்துப் பெட்டியைத் திறக்க முடியவில்லையே!'' என்று அங்கலாய்த்தார்.

கடல் தரும் செல்வம்

★

நா. வானமாமலை

"உப்பென்றும் சீனியென்றும் உள்நாட்டுச் சேலையென்றும் செப்பித்திரிவாரடி செய்வதறியாரடி!" என்று பாடிச் சென்றார் பாரதியார். செப்புவதோடு மட்டுமல்லாமல், செய்வதும் அறிந்து, வகை சொல்லும் கட்டுரை இது.

பண்டைத் தமிழர்கள் கடலில் இருந்து கிடைக்கும் மீன், சங்கு, பவளம், முத்து முதலிய பொருள்களை கடல்படு திரவியங்கள் என அழைத்தார்கள். கடலில் நீரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் உப்பை உணவுப் பொருள்களில் சேர்த்துப் பயன்படுத்தினார்கள். உப்பு உணவுக்கு ருசி கொடுக்கும் பண்டம். ஆகையால் "உப்பில்லா பண்டம் குப்பையிலே" என்ற பழமொழியும் தோன்றிற்று.

ஆனால் உப்பு ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத மூலப் பொருள் என்பது கடந்த இருநூறு வருஷ காலமாகத்தான் வெளியாயிற்று. உப்பிலிருந்து தொடங்கி நமது தினசரி நுகர்ச்சிக்குத் தேவையான நூற்றுக் கணக்கான பொருள்கள் செய்யப்படுகின்றன. உதாரணமாக, நீங்கள் இன்று காலையில் குளிக்கும் போது சோப்பு தேய்த்துக் கொண்டீர்களல்லவா? அதனைச் செய்ய உப்பிலிருந்து தயாரிக்கப்படும்சோடாக்காரம் தேவை. இதோ, இக்கட்டுரையை அச்சிட்டிருக்கும் தாளை உற்பத்தி செய்ய சோடாக்காரம் தேவை. கோடித்துணி பழுப்பு நிறமாயிருக்கிறதல்லவா? அதனை நிறம் போக்கி வெளுக்கவைக்க உப்பிலிருந்து கிடைக்கும் குளோரின் வாயுவை சுண்ணம்பில் கிரகித்துப் பயன்படுத்துகிறார்கள். முகம் பார்க்கவும், படங்களை அடைக்கவும், வளையல்கள் செய்யவும் இன்னும் எத்தனையோ காரியங்களுக்குப் பயன்படும் கண்ணாடியைச் செய்வதற்கும் சோடா உப்பு வேண்டும். இந்தச் சோடா உப்பு சாதாரண உப்பிலிருந்து தான் செய்யப்படுகிறது. நகரங்களில் நாம் குடிக்கும் குழாய்த் தண்ணீரில் ஒரு விதமான மருந்து நாற்றம்வருகிறதல்லவா? அதுநோய்க் கிருமிகளைக் கொல்வதற்காகப் பாய்ச்சப்பட்ட குளோரின் வாயு. இது உப்பிலிருந்துதான் தயார்செய்யப்படுகிறது.

தமிழ் நாட்டில் புனலூரிலும் வங்காளத்தில் டிடாகூரிலும் காகிதத் தொழிற்சாலைகள் உள்ளன. அவை ஆங்கில முதலாளிகளுக்குச் சொந்தம். ஒரு சில பங்குகளே இந்தியர்களுக்குச் சொந்தம். இவற்றில் எப்படி காகிதம் செய்கிறார்கள் தெரியுமா? காகிதம் செல்லுலோஸ்

என்ற பொருளால் ஆனது. அது மரத் தண்டுகளில் நிரம்ப உள்ளது. செல்லுலோஸோடு கோந்தும் சேர்ந்து இருக்கிறது. கோந்தைப் பிரித்தால், இழை இழையாக நனைந்த பஞ்சு மாதிரி செல்லுலோஸ் வெளிப்படும். இவ்வாறு பிரிப்பதற்கு ஒரு பெரிய கொதி பாத்திரத்தில் சோடாக்காரம் என்ற பொருளைத் தண்ணீரில் கரைத்து, மூங்கில் துண்டுகளை அக்கரைசலில் போட்டு, நீராவியின் அமுக்கத்தில் பல மணி நேரம் கொதிக்க வைப்பார்கள். கோந்து சோடாக் காரத்தில் கரைந்துவிடும். செல்லுலோஸ் திரி திரியாக வரும். அதை வடிகட்டிப்பிரித்து எடுப்பார்கள். அது அழுக்குநிறமாக இருக்கும். அதை வெண்மையாக்க குளோரின் என்ற வாயுவைப் பாய்ச்சுவார்கள். நிறம் நீங்கிய பின்னர், நீரில்கரைத்து, இயந்திரங்கள் மூலம் ஒரே திண்ணமாக வடிகட்டிகளில் கொட்டுவார்கள். வடிகட்டிகளின் மீது சூடான காற்றைச் செலுத்தி ஈரத்தைப் போக்குவார்கள். இப்பொழுது கிடைக்கும் தாளில் மை ஊறும். நுண்துளைகள் இருப்பதால்தான் அது மையை உறிஞ்சுகிறது. இதனைப் போக்க, இயந்திரங்கள் மூலம் ஒரு பசையைப் பூசி விடுவார்கள். இதுதான் நாம் உபயோகிக்கும் காகிதத்தின் பிறப்பு வரலாறு.

இத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்கள் எவை? மூங்கில். இது நம் நாட்டு மலைபடு செல்வங்களில் ஒன்று. ஏராளமாகக் கிடைக்கிறது. வேறு என்ன? சோடாக்காரம்; குளோரின். இவையிரண்டுமே கடல் நீரிலிருந்து தயாரிக்கப்படுபவை. கடல் நீரில் உப்பு இருக்கிறதல்லவா? இதில் இரண்டு தனிப்பொருள்கள் உள்ளன. ஒன்று சோடியம் என்னும் உலோகம்; மற்றொன்று குளோரின் என்னும் மஞ்சள் நீலநிற வாயு. கடல் நீரை எடுத்து அதன் வழியே மின்சாரத்தைக் கரித்தண்டுகள், இரும்புத் தண்டுகள் மூலம் செலுத்தினால் கரித் தண்டில் குளோரின் வாயுவும், இரும்புத் தண்டில் சோடியமும் தோன்றும்.

ஆனால் சோடியம் நீரில் கரைந்து, நீரிலுள்ள ஜலவாயுவை வெளியேற்றுகிறது. அப்பொழுது உண்டாகும் பொருள்தான் சோடாக்காரம். இது தண்ணீரில் கரைந்திருக்கும். நீரை ஆவியாக்கி சோடாக் காரத்தை ஸ்படிக ரூபத்தில் பெறலாம். சோடா தயாரிக்கக் கரியமல வாயுவை அடைத்து வைத்திருக்கிறார்களல்லவா? அது போன்ற சிலிண்டர்களில் வெளியேறும் குளோரினை அடைப்பார்கள்.

'ஒரு நாட்டினர் எவ்வளவு சுத்தமாக இருக்கிறார்கள் என்பதை அறிய அந்நாட்டினர் எவ்வளவு சோப்பு உபயோகிக்கிறார்கள் என்பதைப் பார்த்தாலே போதும்' என்று ஒரு ஆங்கில விஞ்ஞானி கூறுகிறார். நம் நாட்டில் கோடிக் கணக்கான டன்கள் சோப்பு விற்பனையாகிறது. சோப்புத் தயாரிக்கவும் சோடாக் காரம் தேவை. சோடாக்காரம், தேங்காய் எண்ணெய் போன்ற தாவர எண்ணெய் இவற்றின் ரசாயன மாறுதலால் சோப்பு தோன்று

கிறது. தாவர எண்ணெய்க்கு நம் நாட்டில் பஞ்சமா? இல்லை. சோடாக்காரம்?

சோடாக்காரம், குளோரின் இவற்றை கடல் நீரிலிருந்து பெறலாமென்று சொன்னேன் அல்லவா? நம் நாட்டில் 2500 மைல் நீளமுள்ள கடற்கரையிருக்கிறது. கடல் நீருக்கும் பஞ்சமில்லை. ஆனால் சோடாக்காரம் தயார் செய்யும் தொழிற்சாலைகள் நம் நாட்டில் மிகச் சிலவே உள்ளன. அவற்றுள் ஒன்று தமிழ் நாட்டில் மேட்டூரில் உள்ளது. இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் இன்னும் இரண்டு தொழிற்சாலைகள் கட்ட, திட்டமிடப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று தூத்துக்குடியில் திறக்கப்படும்.

இப்பொழுது நம் சோப்புத் தொழிலுக்கும், காகிதத் தொழிலுக்கும் தேவையான சோடாக்காரத்தை 'இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ்' என்ற ஆங்கிலத் தொழிற் ஸ்தாபனத்திலிருந்தும், 'டூபான்ட்' என்ற அமெரிக்க ஸ்தாபனத்திலிருந்தும் இறக்குமதி செய்கிறார்கள். அவை இந் நாட்டிலுள்ள சோப்பு, காகிதத் தொழிற்சாலைகளோடு இணைப்புள்ளவை. இந் நாட்டில் சோடாக்காரத் தொழில்வளர அந்நியத்தொழில் முதலாளிகள் முட்டுக்கட்டை போடுகிறார்கள். அவர்களோடு தொடர்புள்ள ஆங்கில, அமெரிக்க ரசாயனப் பொருள் உற்பத்தித் தொழில் ஸ்தாபனங்களுக்கு லாபம் வேண்டாமா? நம் நாட்டில் தொழில் வளர அவர்களுக்கு என்ன அக்கறை?

சென்ற வருஷம் இந்தியாவில் உற்பத்தியான சோப்பின் மதிப்பு 1545 லட்சம் ரூபாய். இதில் 1003 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சோப்பு 'சன்லைட்' சோப்புத் தொழிற்சாலைக்குச் சொந்தக்காரர்கான 'லீவர் சகோதரர்க'ளது தொழிற்சாலைகளில் உற்பத்தியானது. அதுபோலவே காகித உற்பத்தியில் பெரும் பங்கு வெள்ளைக்கார முதலாளிகளின் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்ததாகும். 'நியூஸ்பிரின்ட்' நம்நாட்டில் உற்பத்தி செய்யப்படவில்லை. மூலப் பொருள்களை நம் நாட்டில் வாங்கும் எண்ணமே அவர்களுக்கில்லை.

அவர்களது லாபத்தைக் கட்டுப்படுத்தி, நம் நாட்டிலேயே சோடாக்காரம் முதலிய மூலப் பொருள்களை வாங்கும்படி நிர்ப்பந்திக்கும்படியான சட்டம் கொண்டு வந்தால் நம் நாட்டில் சோடாக்காரம் தயாரிக்கலாம். அப்பொழுது உபவிளைவுப் பொருள்களாகக் கிடைக்கும் அநேக பொருள்களையும் நாட்டின் தொழிலபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம்.

நம் நாட்டின் கடல் படு செல்வத்தைப் பயன்படுத்த நல்லதொரு திட்டம் தேவை. நாட்டின் தொழில் வளர்ச்சியையே நோக்கமாகக்கொண்டதாக அத் திட்டம் இருக்கவேண்டும். அந்நிய நாட்டு முதலாளிகளின் லாப வெறிக்கு வேட்டைக்காடாக நம் நாட்டுத் தொழிலை நாம் விட்டுவிடக்கூடாது.

★

★ ஹங்கேரி நாட்டுச் சிறுகதை

ஏழு காசுகள்

ஸிக்மண்ட் மோரிக்

★

ஏழைகளுக்கும் கூட, சிரிக்கும் சக்தியை அருளிச் செய்த கடவுளின் கருணையே கருணை!

ஏழைக் குடிசைகளில் அழுகையும் கூக்குரலும் மட்டுமே கேட்கும் என்பதில்லை; அங்கும் கூட, வாய் நிறைந்த மனம் உணர்ந்த சிரிப்பொலியைக் கேட்க முடியும். அழுதுகொண்டிருப்பதைவிட, ஏழை மக்கள் அடிக்கடி சிரிக்கத்தான் செய்கிறார்கள் என்று கூடச் சொல்லலாம்.

ஏழைகளின் உலகைப்பற்றி எனக்கு நன்கு தெரியும். என் தந்தை ஸூ வம்சத்தில் பிறந்தவர். அவர் தம் வாழ்நாள் முழுவதும் அட்ட தரித்திரத்தில் தான் வாழ்ந்தார். அந்தக் காலத்தில், அவர் ஒரு தொழில் பட்டறையில் அன்றாடக் கூலியாளாக வேலை பார்த்தார். அந்தக் காலத்தைப் பற்றி அவர் என்றும்

> சிரிக்கவும் சிந்திக்கவும் தெரிந்தது மானிடச் சாதி. இந்தச் சாதியில் ஏழைகளும் கூடத்தான் சிரிக்கிறார்கள். ஆனால் அந்தச் சிரிப்பின் அர்த்தபாவம் எது?...
>
> வாழ்க்கையில் நிகழும் சின்னஞ் சிறு நிகழ்ச்சியைக் கொண்டு இந்த மகத்தான சிறுகதையை, இலக்கிய உலகிற்கே கிடைத்த அரிய சம்பத்தை உருவாக்கியுள்ளார், சிக்மண்ட் மோரிக் (1879—1942) என்னும் ஹங்கேரி நாட்டுக் கதாசிரியர்.

பெருமைப் பட்டுக்கொண்டதில்லை; யாருமே அந்தக் காலத்தைப் பற்றிப் பெருமைப்படுவதில்லை. உண்மையும் அதுதான்.

அந்தக் காலத்தில், அதாவது என் குழந்தைப் பருவத்தில், நான் சிரித்துக் களித்ததுபோல், என் ஆயுளில் என்றுமே நான் சிரித்துக் களிக்கப் போவதில்லை. இதுவும் உண்மைதான்.

என்னால் எப்படிச் சிரிக்க முடியும்? கன்றிச் சிவந்த கன்னங்களோடு, கலகலவென்று நகைக்கும் என் தாய், கண்ணில் கண்ணீர் முட்டி மோதிக் கரித்துத் தெறிக்கும் வரை குலுங்கக் குலுங்கச் சிரிக்கும் என் தாய், மூச்சைப் பிடித்துத் திணற அடிக்கும் இருமல் வரும் வரை, இடைவிடாது விழுந்து விழுந்து சிரிக்கும் என் அருமைத் தாய் என்னை விட்டுப் பிரிந்து சென்ற பின்னர், என்னால் எப்படித் தான் சிரிக்க இயலும்?

ஒரு நாள் மதியம் முழுவதும் நானும் அவளும் ஏழு செப்புக் காசுகளைத் தேடி வேட்டையாடிக்கொண்டிருந்தோம். அன்று என் தாய் சிரித்த சிரிப்பு இருக்கிறதே, அதுபோல் அவள் தன் ஆயுளில் என்றுமே சிரித்ததில்லை. நாங்கள் இருவரும் காசுகளைத் தேடினோம்; காசுகளைக் கண்டு பிடித்தும் விட்டோம். தையல் மெஷின் டிராயரிலிருந்து மூன்று காசுகளும், அலமாரியிலிருந்து ஒரு காசும் அகப்பட்டன; பிற காசுகளும் மிகுந்த பிரயாசைக்குப் பின்னர் எங்கள் கையில் சிக்கின.

முதல் மூன்று காசுகளையும் என் தாயே கண்டு பிடித்து விட்டாள். தையல் மெஷின் டிராயருக்குள்ளே இன்னும் ஏதாவது காசுகள் கிடக்கத் தான் செய்யும் என்று அவள் பெரிதும் நம்பினாள். அவள் துணிமணி தைத்துக் கொடுத்துக் கூலிபெறுவது வழக்கம். அந்தக் கூலிப் பணத்தை அவள் அந்த டிராயரில்தான் போட்டு வைப்பாள். எனக்கோ அந்த டிராயர் ஒரு வற்றாத செல்வச் சுரங்கமாகத்தான் காட்சியளித்து வந்தது; அந்த டிராயரிலுள்ள பணம் அள்ள அள்ளக் குறையாத செல்வம் என்றுதான் நினைத்து வந்தேன்.

ஆனால், என் தாயோ அந்த டிராயரிலுள்ள ஊசிகள், அங்குஸ்தான், கத்திரிக்கோல், துண்டுத் துணிகள், நூல் கண்டுகள், பொத்தான்கள் முதலிய எல்லாவற்றையும் வெளியே எடுத்து விட்டு, மேலும் மேலும் அந்த டிராயரைத் துழாவிக்கொண்டிருந்தாள். அந்த டிராயரிலுள்ள காசுகளைத் தேடிப் பிடிக்க, என் தாய் படும் சிரமத்தைக் கண்டு, எனக்கு வியப்பே ஏற்பட்டது. டிராயர் முழுவதையும் தடவிப் பார்த்துவிட்டு, அவள் வியப்புடன் என்னைப் பார்த்துச் சொன்னாள்:

"எல்லாம் எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டது போலிருக்கிறது!"

"யாரம்மா ஒளிந்துகொண்டார்கள்?"

"இந்தக் காசுகள்தான்!" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் என் தாய். அவள் தையல் மெஷின் டிராயரை வெளியே இழுத்தாள்.

"என் அருமைக் கண்ணு! இங்கே வாடா. இந்தத் துஷ்டக் காசுகளைத் தேடுவோம். அடா! குறும்புக்காரக் காசுகளே! எங்கேதான் ஓடிப்போனீர்களோ?" என்றாள் அம்மா.

தரையின்மீது குந்தி உட்கார்ந்துகொண்டு, அவள் அந்த டிராயரைத் தன்முன் வைத்துக் கொண்டாள். அந்தக் காசுகள் எங்கே வெளியே எகிறிக் குதித்துப் பறந்தோடிவிடப்போகிறதோ என்று அவள் பயந்துபோன மாதிரி எனக்குத் தோன்றியது. தொப்பியைக் கவிழ்த்தி வண்ணாத்திப் பூச்சிகளைப் பிடிப்பதுபோல், அவள் அந்த டிராயரை விருட்டென்று குப்புறக் கவிழ்த்தினாள்.

அவளுடைய செய்கையைக் கண்டு, என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

"அவை இங்கே, இதனுள்ளேதான் இருக்கின்றன" என்று கூறிக்கொண்டே அவள் உள்ளூரக் கிளுகிளுத்து நகைத்தாள். அந்த டிராயரை நிமிர்த்திக் கூடப்பார்க்காமல், "அவற்றில் ஏதேனும் தப்பித்தவறி ஒளிந்துகொண்டிருந்தால், அது இங்குதான் இருக்கவேண்டும்" என்றாள்.

அந்த டிராயரிலிருந்து பளபளக்கும் சிறு காசேனும் வெளியே நழுவி ஓடி விடாதபடி, நானும் தரைமீது அமர்ந்து உன்னிப்பாய்க் கவனித்துக்கொண்டிருந்தேன். காசு ஒன்றும் நழுவி ஓடக்காணோம். உண்மையைச் சொன்னால் அந்த டிராயருக்குள் காசுகள் ஏதாவது தப்பித்தவறி கிடக்கக்கூடும் என்று நாங்கள் இருவருமே நம்பவில்லை.

காசு வேட்டையாடும் எங்களின் சிறு பிள்ளை விளையாட்டை எண்ணி, நானும் என் தாயும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டோம்.

குப்புறக் கவிழ்ந்து கிடந்த டிராயரை நான் தொட்டுப் பார்த்தேன்.

"உஷ்! ஜாக்கிரதை! அந்தக் காசு எவ்வளவு துடியானது என்பது உனக்குத் தெரியாதடா! அது விரைவில் ஓடிப்போய்விடும்! உருண்டோடிப் போய்விடும்! அது உருண்டோடுவதை......." என்று என் தாய் எனக்கு எச்சரிக்கை செய்ய முனைந்தாள்.

நாங்கள் இருவரும் குலுங்கக் குலுங்கச் சிரித்தோம். ஒரு காசு எவ்வளவு லகுவில், எவ்வளவு சீக்கிரம் உருண்டோடிப் போய்விடும் என்பதை நாங்கள் அனுபவ பூர்வமாக அறிந்திருந்தோம்.

சிரித்து ஓய்ந்த பின்னர், நான் மீண்டும் அந்த டிராயரைத் திருப்பிப் போடுவதற்காக, கையை நீட்டினேன்.

என் தாய் மீண்டும் ஆச்சரியத்தோடு சத்தமிட்டாள். ஏதோ அடுப்புத் தீயில் கை பட்டுவிட்ட மாதிரி, நான் என் கையை விருட்டென்று பின்னுக்கிழுத்தேன்.

"அட என் ஊதாரிக் குட்டி! ஜாக்கிரதை! அந்தக் காசை வெளியே ஓட விட்டு விடாதே. டிராயருக்கடியில் கிடக்கும் வரையிலும் தானடா, அது நமது காசு! அது இன்னும் கொஞ்ச நேரம் அந்த டிராயருக்கு அடியிலேயே கிடக்கட்டும்! அதற்குள் திறந்து விட்டு விடாதே. அப்பாவின் துணி மணிகளை நான் துவைக்க வேண்டும்; துணி துவைப்பதற்கு சோப்பு வேண்டும்; சோப்பு வாங்குவதற்கோ குறைந்த பட்சம் ஏழு காசுகளாவது வேண்டும். ஏழு காசுக்குக் குறைந்தால் சோப்பு வாங்க முடியாது. என்னிடம் மூன்று காசுகள் இருக்கின்றன. இன்னும் நாலு காசுகள் தேவை. அவையும் இந்தச் சின்னஞ் சிறு வீட்டில் தான் இருக்கின்றன; எங்கோ கண்ணுக்குத் தெரியாத இடமாய்ப் பார்த்துக் குடியிருக்கின்றன. நாம் தொல்லை கொடுப்பது அவற்றுக்குப் பிடிக்கவில்லை! அவற்றுக்குக் கோபம் வந்து விட்டாலோ, அப்புறம் அவை நம் கையில் சிக்கவே சிக்காது! ஆமாம், ஜாக்கிரதை! இந்தப் பணம் இருக்கிறதே, அது ஒரு தொட்டால் சிணுங்கி. அதனோடு நாம் மிகவும் இதமாகப் பழகவேண்டும். மரியாதையோடு பழகவேண்டும். குமரிப் பெண்களைப்போல், அவையும் லகுவில் மனம் புண்பட்டுப் போய் விடும்! சரி. உனக்கு நல்ல பாட்டு ஏதாவது தெரியுமா? தெரிந்தால் பாடு. ஒருவேளை உன் பாட்டின் கவர்ச்சியில் ஈடுபட்டாவது, அந்தக் காசு வெளியே தலை காட்டட்டும்!" என்று அம்மா பேசினாள்.

இத்தனை பேச்சுக் கிடையிலும் நாங்கள் இருவரும் எத்தனை முறை சிரித்துக்கொண்டோம் என்பது ஆண்டவனுக்கே தெரியும். எல்லாம் அவ்வளவு வேடிக்கையாயிருந்தது.

"காசு மாமா வீட்டிலே
காட்டுத் தீ பிடிக்குது!
காசு மாமா ஓடிவா!
கணத்திலே நீ ஓடி வா!"

இந்தப் பாட்டைப் பாடிக் கொண்டே, நான் காசு மாமாவின் வீட்டை, அதாவது அந்த டிராயரைத் திருப்பிப் போட்டேன்.

அந்த டிராயருக்கடியில் ஏகப்பட்ட குப்பையும் கூளமும்தான் தென்பட்டனவே ஒழிய, ஒற்றைக் காசு கூடக் காணப்படவில்லை.

பிதுங்கிய உதடுகளோடு, என் தாய் அந்தக் குப்பை கூளங்களை அலசித் துழாவிப் பார்த்தாள். ஆனால் அதில் காசு மட்டும் அகப்படவில்லை.

"என்ன துரதிருஷ்டம்? நம்மிடம் ஒரு மேஜை கூட இல்லை. ஒரு மேஜை இருந்து, அந்த மேஜையின்மீது நாம் இதைக் கவிழ்த்துப் பார்த்திருப்போமானால், நாம் அந்தக் காசுக்குப் பெரும் கௌரவம் அளித்தவர்களாவோம். அப்படி அளித்தாலாவது, அந்தக் காசு நம்மீது கருணை கொண்டு நம் கண்ணில் தட்டுப்பட்டிருக்கும்!" என்று சொன்னாள் என் தாய்.

கீழே குவிந்து கிடந்த குப்பை கூளம் அனைத்தையும் ஒன்று கூட்டி, அவற்றை மீண்டும் அந்த டிராயருக்குள் அள்ளிப் போட்டேன். இதற்கிடையில் அம்மா ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டு விட்டாள். வேறு எங்கேனும் காசு போட்டு வைத்திருக்கிறோமா என்று அவள் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் சிந்தனையில் அப்படி ஒரு இடமும் தட்டுப் படவில்லை.

இதற்குள் என் மனத்தில் புதியதொரு சிந்தனை தட்டுப்பட்டது.

"அம்மா, அம்மா. ஒரே ஒரு காசு ஒரு இடத்தில் இருக்கிறது. அந்த இடம் எனக்குத் தெரியும், அம்மா!"

"எங்கேயடா, மகனே! வா, சீக்கிரம் பார்ப்போம். இல்லையெனில் அதுவும் பனிக் கட்டி மாதிரி உருகி ஓடிவிடப் போகிறது!"

"ஆமாம் அம்மா! கண்ணாடி அலமாரியிலுள்ள டிராயரில்!"

"அட, என் செல்லக்கண்ணு! இதை நீ அப்போதே சொல்லியிருக்கக்கூடாதா? இதற்குள் அது இறக்கை கட்டிப் பறந்து போயிருக்குமே!"

நாங்கள் இருவரும் எழுந்து கண்ணாடி அலமாரியை நோக்கிச் சென்றோம். அந்தக் கண்ணாடி அலமாரியின் கண்ணாடிச் சில்லுகள் வெகுகாலத்துக்கு முன்பே உடைந்து போய்விட்டன; ஆனால், அதன் டிராயருக்குள் நான் எதிர்பார்த்த இடத்தில் ஒரு செப்புக்காசு கிடந்தது. அதையும் நாங்கள் எடுத்துக்கொண்டோம். அந்தக்காசு அங்கே கிடக்கும் விஷயம் எனக்கு மூன்று நாட்களாகத் தெரியும். அந்தக் காசை அம்மாவுக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்ள நான் விரும்பினேன். எனினும் அதை எடுக்க மட்டும் எனக்குத் துணிவே வரவில்லை. அப்படியே துணிவுடன் அதை எடுத்திருந்தாலும், அதற்கு ஒரு மிட்டாய்தான் வாங்கித் தின்றிருப்பேன்.

"ஒரு மட்டும் நாலு காசுகள் கிடைத்து விட்டன. என் சின்னக் கண்ணு! நமக்கு வேண்டிய பணத்தில் நாம் பாதிக்கு மேல் சம்பாதித்தாயிற்று. இன்னும் மூன்றே மூன்று காசுகள்தான் தேவை. நாலு காசுகளை நாம் ஒரு மணி நேரத்துக்குள் கண்டு பிடித்து விட்டோம். எனவே மற்ற மூன்று காசுகளையும் மாலைக்குள் நிச்சயம் கண்டு பிடித்து விடுவோம். அப்படிக் கிடைத்து விட்டால், நான் துணி மணிகளை பொழுது சாய்வதற்குள் துவைத்து முடித்து விடுவேன். சரி, சரி. சீக்கிரம் தேடு. இந்தக் காசு அகப்பட்டதைப் போலவே, இந்த அலமாரியின் ஒவ்வொரு தட்டிலும் ஒவ்வொரு காசு அகப்படக்கூடும்!"

ஒவ்வொரு டிராயரிலும் ஒவ்வொரு காசுமட்டும் இருந்து விடுமேயானால்! அப்படிக் கிடைத்தால், அதுவே ஏராளம்! அந்த அலமாரி புதிதாக இருந்த

காலத்தில், அதில் எவ்வளவோ பொருள்களைப் பத்திரப் படுத்தி வைக்க முடிந்திருக்கும். எனினும், எங்கள் வீட்டிலோ அந்த அலமாரியில் அப்படி யொன்றும் சாமான்கள் குவிந்து கிடக்க வில்லை. ஆனால், இப்போதோ அந்த அலமாரி உபயோகமற்று, சிதைந்து சிதிலமாகி, ஒட்டை உடைசலாக, கரையான் அரித்த கட்டையாக மாறி விட்டது. அதில் ஒன்றும் ஆச்சரியப்படுவ தற்கில்லை.

என் தாய் அந்த அலமாரியி லுள்ள ஒவ்வொரு டிராயரைப் பற்றியும் உபதேசம் பண்ணத் தொடங்கினாள்.

"இந்த டிராயர் ஒரு காலத் தில் மிகுந்த பணக்கார டிராய யிருந்தது! இதில் என்றுமே ஒன் றும் இருந்ததில்லை! ....

"இந்த டிராயர் இருக்கிறதே— இது என்றைக்குமே கடன்கார டிராயர்தான்!.... அட, துஷ்டக் கார டிராயரே! உன்னிடம் கூட வா ஒரு காசு இல்லை? இந்த டிரா யரைப் பார்த்தாயா? இதில் ஒன்றுமே இருக்காது; ஏனெனில் இதுதான் நமது வறு மையைப் பாதுகாத்துக்கொண் டிருக்கிறது! ஏ, டிராயரே! உன் னிடம் வந்து இப்போதுதான் முதன் முறையாகக் காசு கேட் கிறேன். மரியாதையாக ஒரு காசு தந்துவிடு; இல்லையெனில் உனக்கு நான் என்றும் எதுவும் தரமாட்டேன்! ....

"பார்! இதில்தான் நிறையக் காசு இருக்கிறது!" என்று சிரித் துக்கொண்டே கூறினாள் என் தாய்; பின்னர் அந்த அலமாரி யின் அடித் தட்டிலிருந்த டிரா யரை வெளியே இழுத்தாள்; ஆனால் அந்த டிராயரிலோ அதன் அடிப்பலகையைக் கூடக் காண வில்லை.

அடிப்பலகையற்ற அந்த ஓட்டை டிராயரை எடுத்து, அவள் என் கழுத்தில் மாலை மாதிரி தொங்கவிட்டாள். பின்னர் நாங் கள் இருவரும் தரையிலே உட் கார்ந்து சிரியாய்ச் சிரித்தோம்.

"சிரித்தது போதும்!" என்று அவள் திடீரென்று சொன்னாள்: "நமக்கு இப்போதே பணம் கிடைக்கப் போகிறது, பார். உன் அப்பாவின் சட்டைப் பைக்குள் ளிருந்து நான் சில காசுகளைத் தேடி யெடுக்கிறேன் பார்!"

சுவரில் அறையப்பட்டிருந்த ஆணிகளில் அப்பாவின் துணி மணிகள் தொங்கிக்கொண்டிருந் தன. அதிசயத்திலும் அதிசய மாய், அப்பாவின் சட்டைப் பைக்குள் அம்மா கையைவிட்டு எடுத்ததுமே, அவள் கையில் ஒரு காசு சிக்கிக்கொண்டு வந்தது!

அம்மாவால் அவள் கண்களை நம்ப முடியவில்லை.

"பார்த்தாயா? காசு கிடைத்து விட்டது, பார்த்தாயா? சரி. இப் போது நம்மிடம் எவ்வளவு காசு சேர்ந்திருக்கிறது? இவற் றை எண்ணிப் பார்க்கக் கூடத் தொலையாது போலிருக்கிறதே! எத்தனை காசுகள்! ஒன்று— இரண்டு—மூன்று—நான்கு—ஐந்து! ஐந்து காசுகள்! ஆம். இன்னும் இரண்டே காசுகள்தான் தேவை. இரண்டு காசு என்ன பிரமாதம்?

ஒன்றுமில்லே. ஐந்து காசுகள் அகப்பட்டு விட்டபோது இரண்டு காசுகள் மட்டும் அகப்படாமல் போய்விடுமா?"

அவள் சட்டைப் பைகளே ஆர்வத்தோடு தேடித் துழாவினுள். ஆனல், பாவம்! அவற்றில் மேற்கொண்டு ஒற்றைக் காசுகூட அகப்பட வில்லே. அவளது தலே சிறந்த ஹாஸ்யப் பேச்சுக்கள் கூட, மேலும் இரண்டு காசுகளே வெளிக்கொண்டு வரவில்லே.

உணர்ச்சிக் கொதிப்பாலும் ஓயாத உழைப்பாலும் என் தாயின் கன்னங்கள் ஏற்கெனவே கன்றிச் சிவந்த ரோஜா மலர்களாகக் கனன்று விளங்கின.

அவள் வேலே செய்யவே கூடாது; செய்தால் உடனே அவளுக்கு உடம்புக்கு வந்து விடும். எனினும், இந்த வேலேக்கு விதி விலக்கு உண்டு. ஏனெனில் பணம் தேடும் வேலேயிலிருந்து எவரையும் தடுத்து நிறுத்தக் கூடாது.

மாலேப் பொழுதும் வந்தது; சென்றது. சீக்கிரமே இரவும் வந்து விடும். என் தந்தைக்கோ நாளே அவசியம் ஒரு சட்டை தேவை; ஆனல், சட்டையைத் துவைத்து வெளுக்கவோ வழியில்லே. சட்டையில் படிந்துள்ள எண்ணெய்ப் பிசுக்கை, வெறும் கிணற்றுத் தண்ணீரால் மட்டும் போக்கிவிட முடியாது......

என் தாய் திடீரென்று தன் நெற்றியிலேயே கையால் அறைந்து கொண்டாள்.

"நான் எவ்வளவு முட்டாள், பார்த்தாயா? நான் என் சட்டைப் பைக்குள்ளேயே இது வரை பார்க்க வில்லேயே. இப்போதுதான் அந்த ஞாபகமே வருகிறது. சரி, பார்க்கிறேன்!"

அவள் தன் சட்டைப் பையில் தேடிப் பார்த்தாள். அதிருஷ்ட வசமாக, அதிலும் ஒரு காசு அகப்பட்டது. ஆறுவது காசு!

நாங்கள் உத்வேக உணர்ச்சி பெற்ருேம். ஆம். இன்னும் ஒரே ஒரு காசுதான் குறை; ஒன்றே ஒன்றுதான் தேவை!

"உன் சட்டைப் பைகளேயும் காட்டு. ஒரு வேளே அவற்றிலும் கூட ஒரு காசு இருக்கலாம்!"

என் சட்டைப் பைகளா? அவற்றைக் காட்டுவதில் எனக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனல் அவற்றில் ஒரு செல்லாக் காசு கூட இல்லே.

மாலேயும் வந்தது.நாங்கள் இருவரும் அந்த ஆறு காசுகளே மட்டுமே சம்பாதித்திருந்தோம். எனினும் ஒற்றைக் காசு கூடக் கையில் இல்லாதது போன்ற மனநிலேயில்தான் நாங்கள் இருந்தோம். கடைக்கார யூதனே கடன் தரமாட்டான். அக்கம் பக்கத்து வீட்டாரோ? அவர்களும் எங்களேப் போலவே ஏழைகள். மேலும் அவர்களிடம் போய் ஒரு காசுக்காகக் கடன் கேட்க முடியாது.

எனவே எங்களுக்கு ஒரு வழியும் புலப்படவில்லே. பரிதாபத்துக்குரிய எங்கள் வறுமை நிலேயை மனத்துள் எண்ணி வாய் விட்டுச் சிரிப்பதைத் தவிர, வேறு வழியே இல்லே.

பின்னர், எங்கள் குடிசை வாசலுக்கு ஒரு பிச்சைக்காரன் வந்தான். பாடுவது போன்ற ராகக் குரலில் அவன் ஏதோ ஒரு நீண்ட பரிதாபகரமான பிலாக் கணத்தை முனகி முடித்தான்.

அதைக் கேட்டு, என் தாய் சிரியாய்ச் சிரித்தாள். மயக்கம் போட்டு விழுந்து விடுவதைப் போல், அப்படிச் சிரித்தாள்.

"அட, பாவி மனிதனே! எனக்கும் ஒரே ஒரு செப்புக் காசு தான் தேவை. இன்று மதியத்திலிருந்து அந்தக் காசைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். ஒரு சோப்புத் துண்டு வாங்க வேண்டும். அதற்கே இன்னும் ஒரு காசு குறைகிறது!" என்றுள் என் தாய்.

அந்தக் கிழட்டுப் பிச்சைக்காரன் என் தாயை வெறித்து நோக்கினன்.

"ஒரே ஒரு காசுதானு?" என்று கேட்டான் அவன்.

"ஆமாம்"

"நான் தருகிறேன்!"

"இதற்கு மேல் வேறு என்னதான் பாக்கி? பிச்சைக்காரனிடமிருந்தும் பிச்சை ஏற்பதைத் தவிர!"

"மகளே! பரவாயில்லை. ஒரு காசினுல் எனக்கு ஒன்றும் நஷ்டமேற்படப் போவதில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் ஒரே ஒரு பிடி மண்தான். என் மீது என்று ஒரு பிடி மண்ணைப் போட்டு மூடுகிறார்களோ, அன்றே என் கணக்கு வழக்கு எல்லாம் சரியாகிவிடும்!"

அவன் என் கையில் ஒரு காசை எடுத்துப் போட்டுவிட்டு, எங்களை வாழ்த்தியவாறே ஆடியசைந்து சென்று மறைந்தான்.

"நல்லவேளை. கடவுள் புண்ணியம்! அங்கே யாரும்..."

பின்னர் அவள் தன் பேச்சைச் சட்டென்று நிறுத்தி விட்டு, வாய்விட்டு உரக்கச் சிரித்தாள்.

"நல்லநேரத்தில்தான் பணம் சேர்ந்திருக்கிறது! எப்படியும் இன்று என்னுல் துணிமணிகளைத் துவைக்க முடியாது. இப்போதே பொழுது இருட்டி விட்டது. விளக்கேற்ற வேண்டும் என்றுலோ, அதற்கு எண்ணெய்யும் இல்லை!"

அவள் மீண்டும் சிரித்தாள். உரக்கச் சிரித்தாள். மூச்சுத் திணறும் வரை சிரித்தாள். சிரிப்பினுல் மூச்சு வாங்க முடியாமல் திணறினுள்; திக்கு முக்காடினுள். அந்தத் திக்கு முக்காட்டம் பயங்கரமானது! படு மோசமானது! தனது கைகளால் முகத்தை மூடிக்கொண்டே திக்குமுக்காடிய அவளை நான் தாங்கிப் பிடித்தேன்; அப்படிப் பிடித்த போது, என் கைகளில் ஏதோ வெதுவெதுப்பாகப் பொழிந்து வழிவது போலிருந்தது.

அது ரத்தம்; என் அருமைத் தாயின் அருமை ரத்தம்; புனித ரத்தம். ஆம். ஏழைகளிலும் கூட வாய் விட்டுச் சிரித்துக் குலுங்கும் சக்தி படைத்த சிலரில் ஒருத்தியான என் தாயின் ரத்தம்தான் அது! ★

முஜபர்ஜங் பகதூர் தெரு

ப. சீனிவாசன்

பட்டணத்திலே இரவு கூடப் பகல் போல இருக்கும் என்று சொல்வார்கள். ஆனால் முஜபர் ஜங் பகதூர் தெருவில் இரவு அசல் இரவாகவேதான் இருந்தது.

கட்டிலுக்குக் கட்டும் நாடாவைப்போல, அகலமில்லாத நீளத் தெரு அது. ஜன சந்தடியற்ற அந்தத் தெருவில் ஒரே ஒரு கனவான் மாத்திரம் 'பரும் நடையில்' வந்துகொண்டிருந்தார்.

திரைப் படத்தில் பயங்கரக் காட்சி வரப்போவதைத் தெரிவிக்கும் பின்னனி சங்கீதத்தைப் போல் அவருடைய செருப்போசை அந்த இடத்தின் நிசப்தத்தை நடுங்க வைத்தது. குஷியான ஹிந்துஸ்தானி மெட்டில் அவரது வாய் சீட்டியடித்ததும் லேசாகக் கேட்டது.

ஐந்தடி அகலமுள்ள முஜபர் ஜங் பகதூர் 'தெரு'வும், நாலடி அகலமுள்ள முஜபர்ஜங் பகதூர் 'சந்து'ம் ஒன்றையொன்று வெட்டித் துண்டாக்கிக் கொள்ளும் ஸ்தானத்தில் ஒரு மின்சாரக் கம்பம் நடுநாயகமாக நின்றது. அந்த விளக்கடியில் அந்தக் கனவான் தம் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி பன்னிரண்டு நாற்பது.

முஜபர்ஜங் பகதூர் தெருவிலேயே அவர் தொடர்ந்து நடந்தார். நாலடி நடப்பதற்குள் பின்னல் ஏதோ கடபுடாச் சப்தம் கேட்டு அவர் பீதியுடன் திரும்பிப்பார்த்தார்.

ஒரு ராப்பாடி ரிக்ஷாக்காரன் க்ஷயரோகியின் பிரேதம் உயிர் பெற்று எழுந்து வந்ததைப்போல் வந்துகொண்டிருந்தான். அவன் வற்றலாக இருந்தான். கிழிந்து ஒட்டுப் போட்ட கால் சட்டையும் பொத்தானில்லாத பிதிர்ந்த கோட்டும் அந்த எலும்புக் கூட்டில் தொங்கின. தானாக நடக்கத் திராணியில்லாமல் ரிக்ஷாவின் ஆதாரத்திலேயே அவன் தத்தித் தத்தி வந்துகொண்டிருந்தான்.

"ஸார், ஸார்! வாங்க ஸார்! ஏறுங்க ஸார்!"

> 'சாண் வயிறு'தான் எனினும் அதன் பிரசினை விண்ணையும் மண்ணையும் அளாவி நிற்கும் விசுவ ரூபமாக நிற்கும் போது—? அவன் முதலில் வேலை கேட்டான், பின்னர் பிச்சை கேட்டான். பிறகுதான் 'மாமா'வாக மாறத் துணிந்தான். அப்புறம்தான்?... அவன் செய்தது சரிதானு? தர்ம நியாயம்தானு? நியாயமில்லை என்று மறுத்துச் சொல்ல நமக்கு நாவுண்டா?...ஏன் இல்லை?...

"வேண்டாமப்பா. இன்னும் கொஞ்ச தூரம்தான் போகணும். நடந்தே போயிடுவேன்"

"பரவாயில்லே ஸார். ஏறுங்க ஸார். குடுத்ததைக் குடுங்க ஸார். இன்னிக்குப் பூரு, சவாரியே கெடைக்கலெ, ஸார். ஏறுங்க ஸார்!"

"வேண்டாமின்னு நீ என்னப்பா, இது!" என்று சற்றுக் கோபமாகச் சொல்லிவிட்டு, சிறிது விரைவாகவே அவர் நடந்தார். ரிக்ஷாக்காரனும் நாய்க்குட்டி போல் பின்னல் சென்றான்.

சிறிது தூரம் போவதற்குள் அவன் மீண்டும் "ஸார்!" என்று கூப்பிட்டான். "ஸார், காலையிலேயிருந்து நாஸ்டாக்கூடப் பண்ணலே ஸார். ஒரு அணா குடுங்க ஸார். ஒங்க பேரைச் சொல்லி சிங்கிள் டீ குடிப்பேன் ஸார். நீங்க நல்லா இருப்பிங்க ஸார். ஒரே அணா தர்மம் செய்யுங்க ஸார்!" என்று அழாக் குறையாகக் கெஞ்சிக்கொண்டே பின்னல் சென்றான்.

"என்னடா இது? மூச்சை வாங்றே? ரிக்ஷா வாண்டாமின்னு போவியா? தருமமாம் தருமம்! எங்கிட்ட சில்லறை ஒண்ணும் இல்லெ. போடா. போடான்னு!...." என்று கூறியவாறே முன்னிலும் துரிதமாக நடந்தார் அந்தக் கனவான்.

"ஸார், ஸார், மணியான உருப்பிடிங்க ஸார். எந்த வயசிலே வேணும்னுலும் இருக்கு, ஸார். எந்தச் சாதியிலே வேணுமின்னுலும் இருக்கு, ஸார். எந்த நிறத்திலே வேணுமின்னுலும் இருக்கு, ஸார். அடுத்த தெரு தான். 'சீப்ரேட்'தான் ஸார்!" என்று ரிக்ஷாக்காரன் குழைந்துக்கொண்டே அந்தக் கனவானை மேலும் பின் தொடர்ந்தான்.

"சீ! பொறுக்கிப் பயலே! என்னடா நினைச்சே நீ? போலீஸ்லே சொல்லி உன்னைச் செயில்லே வைக்காட்டிப்பாரு. சோமாறிக்கழுதை! திருட்டு ராஸ்கோல்!" என்று அந்தக் கனவான் படபடத்தார்.

"ஹூம்" என்று சோர்வுடன் முனங்கினன் ரிக்ஷாக்காரன்.

ஆத்திரம் காரணமாக அதிவேகமாய் நடந்தார் கனவான்.

வாயும் வயிறும்

"உண்டு கொழுத்து உறங்குவதைத் தவிர வேறு ஒரு வேலையும் செய்யவேண்டாத வர்க்கமாகக்கடவுளே ஒரு சில மனிதர்களைப் படைத்திருப்பாரேயானல், அவர் அவர்களுக்கு வாயை மட்டுமே படைத்திருப்பார்; கைகளைப் படைத்திருக்க மாட்டார். அது போலவே உழைத்துழைத்துப் பாடுபடுவதைத் தவிர, உணவருந்திப் பசியாற வேண்டாத கூட்டத்தாராகக் கடவுளே வேறு சில மனிதர்களைப் படைத் திருப்பாரே யானல் அவர்களுக்குக் கைகளை மட்டும்தான் கடவுள் கொடுத்திருப்பார்; வாயைப் படைத்திருக்க மாட்டார். இதுவே நம் நம்பிக்கை.

—ஆப்ரகாம் லிங்கன்

"டக்...டர்!" என்று சப்தம் கேட்டது. ரிக்ஷாவின் ஏர்க்கால் கீழே இறங்கி நின்று விட்டது. அடுத்த விநாடியில் அந்தக் கனவானின் மண்டையை ஒரு தடி தாக்கியது. உடனே அவருக்குத் தலை சுற்றியது. மறுவிநாடி அவரது நெஞ்சுக்கு நேரே ஒரு பிச்சுவாக் கத்தி மின்னியது....

தங்கத்தில் ஸ்வஸ்திக் செயின் போட்ட ஒரு ரிஸ்ட்வாட்ச், பார்க்கர் கோல்ட்கேப் பேனா ஒன்று, பக்கிங்ஹாம் மில் துணியில் தைத்த ஒரு புஷ்கோட், நோட்டுக்கள் சில்லறைகளுடன் சினையாக இருந்த நவீன பிளாஸ்டிக் மணிபர்ஸ் ஒன்று, குரோம் லெதர் செருப்பு ஒரு ஜோடி, ரோல்ட் கோல்ட் பிரேம் போட்ட அழகான மூக்குக் கண்ணாடி, லக்கிஸ்டோன் பதித்த கனத்த தங்கமோதிரம் .... ஒவ்வொன்றையும் அவராகவே எடுத்து ரிக்ஷாக்காரனுக்குக் கொடுத்தார். வேட்டியும் பாடியும் மாத்திரம் தமக்கு அவசியம் என்று அவர் நினைத்தார்; அவனும் அதை ஆட்சேபிக்கவில்லை.

கனவான் கொடுத்த சாமான்களைச் சுருட்டியெடுத்துக் கொண்டு, முஜபர்ஜங் பகதூர் தெருவிலிருந்து முஜபர்ஜங் பகதூர் சந்தை நோக்கி அந்த ரிக்ஷாக்காரன் பாய்ந்தான். துப்பாக்கிலிருந்து கிளம்பிய தோட்டாவைப் போல் நொடிப்பொழுதில் கண் மறைந்து போய் விட்டான்.

கலங்கிய மூளையுடன் தள்ளாடி நடந்தவாறு முஜபர்ஜங் தெருவின் மறுகோடிக்கு வந்து சேர்ந்தார் அந்தக் கனவான். ரிக்ஷாக்காரர்களை ஆங்கிலத்தில் சரமாரியாகத் திட்டிக்கொண்டிருந்தது அவரது வாய்! ★

○

சட்டம்!

"மகத்தான சமத்துவத்தை வழங்கும் சட்டம், பாலத்துக் கடியிலே தூங்குவது, தெருக்களிலே பிச்சை யெடுப்பது, உணவைத்திருடுவது முதலிய காரியங்களைச் செய்யவிடாமல், பணக்காரர்களை மட்டுமல்லாமல் ஏழைகளையும் கூடத்தான் தடை செய்கிறது!"

—அனதோல் பிரான்ஸ்.

"சட்டத்தை ஆள்பவர்கள் பணக்காரர்கள்; சட்டத்தால் அறைபடுபவர்கள் ஏழைகள்!"

—கோல்ட்ஸ்மித்.



ரத்த பாசம்

"நம்பி"

''யோவ், கண்டக்டர்! ஒரே ஒரு சீட்!''

''அவ்வளவுதான் ஸார். வேறே சீட் இல்லே... ரைட்! போட்டும்!''

பல்வேறு ஸ்தாயிகளில் இரைந்து சப்தித்துவிட்டு, 399 நெல்லை லாட்ஜ் ஸ்டாப்பிலிருந்து வேகமாகக்கிளம்பியது.

டிரைவர் சங்கரன்பிள்ளை போகிற போக்கிலேயே தலையை லேசாகத்திருப்பி கண்டக்டரைக் கூப்பிட்டார்:

''ஏ, பாண்டியன்! சிரீபுரம் இறக்கம் இருக்கா?''

''சிரீபுரம்! சிரீபுரம்!'' கண்டக்டர் குரல் கொடுத்தான். பிரயாணிகளிடம் எந்தவிதச் சலனமும் இல்லை.

''சரி,பின்னே போட்டும் வண்டி! அண்ணாச்சி, லேசாப் புடிச்சிப் போங்க!... யோவ்! யாரய்யா ஒரு டிக்கட் வாங்கலே?...35, 36, 37, 38—அண்ணாச்சி, வண்டியைக் கொஞ்சம் ஸ்லோ பண்ணுங்க!... உங்க டிக்கட்டை எடுங்க!... சரி சரி. நல்ல ஆள்தானய்யா! மூச்சைத் தொலைச்சிக் கேக்கிறேன். கம்முன்னு இருக்கீங்களே! சரி, பாளையங்கோட்டையிலே தானே ஏறினீங்க?''

''ஆமா!'' பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு தலையை அசைத்தது ஒரு சில்க் ஜிப்பா.

''எங்கே டிக்கட் எடுத்தீங்க?''

''திருநெல்வேலிக்கு!''

''ஜங்ஷனுக்கா? டவுணுக்கா?''

> ரத்த பாசம்! ரத்த சம்பந்தம் கொண்ட உடன் பிறப்புக்களை மட்டும்தானா இந்தப் பாசம் ஒன்று சேர்க்கிறது! நமது உடம்பில் ரத்தம் மட்டும்தானா ஓடுகிறது? உணர்ச்சிகள் ஓடவில்லையா? அவ்வாறு உணர்ச்சிகள் ஓடும்போது, உடன் பிறப்புக்களை மட்டுமென்ன, ஒரு வர்க்கத்தில் பிறந்தவர்களை, ஒரு நாட்டில் பிறந்தவர்களை, ஒரு உலகில் பிறந்தவர்களையும் அந்தப் பாசம் ஒன்று சேர்க்க இயலாதா?...

''ஒன்றரையணு டிக்கட் எடுத்தேன். பொருட் காட்சிக்குப் போகணும்!''

''அப்போ இன்னும் ஒண்ணரையணு எடுங்க...சரி சரி... வண்டி போட்டும்!''

கண்டக்டர் பாண்டியனுக்குத் தன்னை மீறிய சலிப்பு ஏற்பட்டது. ''இந்த எழவு எக்ஷிபிஷன் வந்தாலும் வந்தது; நம்ம வாணுளு அத்துப் போவும் போலிருக்கே! சேச்சே!'' என்று வாய் விட்டுக் கூறிக்கொண்டான்.

''எக்ஷிபிஷன் வந்தாலும் வந்தது; நம்ம வாழ்நாள் அத்துப் போவும்...'' இந்த வார்த்தைகள் சங்கரன் பிள்ளையின் மனத்தில் சுரீரென்றுதைத்தன. அவர் தமது கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி சரியாக ஐந்து நாற்பது.

''அஞ்சு நாற்பதாச்சி. இன்னம் இருபது நிமிஷப்பாடு. இதுதான் 'லாஸ்ட் டிரிப்!...'' என்று எண்ணியவாறு காரை ஓட்டிச் சென்ருர் டிரைவர்.

டிரைவர் ஸ்தானத்துக்குப் பின்புறத்து சீட்டில் அப்பொழுது எக்ஷிபிஷன் மகாத்மியம் பாராயணம் செய்யப்பட்டு வந்தது. வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு அரட்டை அடிக்கும் பேர்வழிகளைக் கண்டால் சங்கரன்பிள்ளைக்கு அறவே பிடிக்காது. ஆனுல், அன்று ஏனே அவர் தம்மையுமறியாமல் அந்தப் பாராயணத்தைக் காது கொடுத்துக் கேட்கத் தொடங்கிவிட்டார்.

கையோடுகைகோத்து, காதில் எதையுமே வாங்காமல் பஜாரிலே பவனிபோகும் செவிட்டு மன்னர்களுக்கு ஹார்ண் அடித்துப் பிரக்ஞை மூட்டுவது, பின்னுல் விரட்டி முடுக்கி ஊளையிட்டுக் கதறும் 'பிளஷர்' காருக்கு 'ஸைடு' கொடுப்பது, முக்கி முனகிக் கரகரக்கும் காருக்கு 'கியர்' மாற்றுவது, குறுக்கே பாய்ந்து தட்டுமறிக்கும் குருட்டு மட்டைகளுக்குக் 'கிளச்'சை மிதித்து பிரேக் பிடிப்பது, நடை சண்டிக் குதிரை வண்டிகளை முந்துவதற்காக, ஸ்டீரியங்கை வெட்டித் திருப்பி ஒடித்து முன்னேறுவது— இத்தியாதிக் கரண வித்தைகளை யெல்லாம் அவரது கையும் காலும் யந்திர கதியில் ஒழுங்காக நிறைவேற்றிக் கொண்டிருந்தன. பின் சீட்டில் எக்ஷிபிஷனைப் பற்றிய பல பேச்சுக்களும் அடிபட்டன. சங்கரன்பிள்ளைக்கு அந்தப்பேச்சை யெல்லாம் கேட்டபிறகு மனத்திலெழுந்தகேள்வி, அன்று நாடகத்துக்குக் கூட்டம்எப்படி இருக்கும் என்பதுதான்.

''ஹோல்டான் எக்ஷிபிஷன்!'' செவியைப் பிய்க்கிற மாதிரி கண்டக்டர் பாண்டியன் கத்திஞன். சங்கரன்பிள்ளையின் கால் அவரையறியாமலே கிளச்சை 'ஆப்' பண்ணி, பிரேக்கை மிதித்தது. எக்ஷிபிஷன் ஸ்பெஷல் ஸ்டாப்பிலே வண்டி நின்றது. இரண்டே நிமிஷத்தில் வண்டியே காலி!

''ரைட்! போலாம்'' என்று விசில் கொடுத்தான் கண்டக்டர். சங்கரன்பிள்ளை கியரைத் தள்ளினுர். அந்த 39-ம் வருஷத்து மாடல் கொரகொரத்து வேண்டா வெறுப்பாக எக்ஷிபிஷனைக் கடந்து சென்றது.

'நாமும் இந்த ஊரிலே வந்து நாலு வருசமாச்சி. இங்கெ வந்து ஒரு புள்ளையையும் பெத்தெடுத்து நெல்லையப்பன்னு பேரும் உட்டாச்சி. வருசா வருசமும் தான் பொருட் காட்சி நடக்கு. ஒரு நாளாவது அதுக்கு ஒழியிதா?... சேச்சே! என்ன புளைப்போ, என்ன இருப்போ? எனக்கும் அலுத்துப்போச்சிடியம்மா!' என்று பகவதி முந்திய நாள் வீட்டிலே முனகிச் சலித்துக் கொண்ட பேச்சு சங்கரன்பிள்ளையின் நெஞ்சில் இன்னும் ஒலி செய்து உறுத்தியது.

'வாஸ்தவம்தானே. அவளைச் சொல்ல என்ன இருக்கு? நானும் ஒரு மனுசனுட்டம்!... நாமாவது பஜார் கிஜார், சினிமா கினிமான்னாவது நாலுக்கு ஒண்ணையாவது பாக்க முடியுது. பாவம், பகவதி என்ன செய்வாள்? விடிந்தாப் பொழுது அடையிற வரையிலும் புள்ளைகளைக் கட்டி மாரடிச்சிக்கிட்டு, வீட்டுக்குள்ளேயே புழுங்கிக்கிட்டுத்தானே கிடப்பா. ஒரு தேரா, திருவிழாவா?' என்று தமக்குள் தாமே பகவதிக்காக அனுதாபப் பட்டுக்கொண்டார் சங்கரன் பிள்ளை...

பொதுவாக சங்கரன்பிள்ளை 'நல்ல மனுஷன்'; சொந்த உழைப்பிலே வாழும் மனிதன். பெண்டாட்டி, இரண்டு குழந்தைகள்—இவைதான் கண்கண்ட சொத்து. அவரது மனைவி பகவதியும் கட்டும் செட்டுமான பேர்வழிதான். இல்லையென்றால், அந்தத் 'தொள்ளாயிர ரூபாய்' டிரைவர் சம்பளத்திலே கடன் காட்சி இல்லாமல் காலம் தள்ளி இருக்க முடியுமா?

"ஒரு நாளும் பகவதி இப்படி வாய் விட்டுச் சொல்லியது கிடையாது. பாவம், அவளும் மனுஷிதானே! ஆசை இருக்காதா? ஊரோடே எல்லோரும் பொருட் காட்சிக்குப் போகிற போது அவள் மாத்திரம் எப்படி அந்த எட்டடிக் குச்சுக்குள்ளேயே குட்டி போட்ட பூனை மாதிரி சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பாள்?... அவளுக்கென்ன அப்படி 'தொண்ணூறும் பத்தும்' ஆகிவிட்டதா? 'என்னமோ பொருட் காட்சியிலே அப்படி என்னதான் அதிசயமிருக்கு?' என்று அவளுக்கும்தான் சபலம் தட்டாதா?"

சங்கரன்பிள்ளை மனைவியின் ஆசாபாசங்களைப் புரிந்து கொள்ளத் தெரியாத நபும்சகப் பிறவி அல்ல. 'எக்ஷிபிஷனுக்குப் போனால், போனோம் வந்தோம் என்று இழுத்தடித்துக் கொண்டு போய்வருவதிலே என்ன புண்ணியம்? நாலு பேரைப் போல, நாமும் இரண்டு சாமான் வாங்கினோம், நாடகம் பார்த்தோம் என்றிருக்க வேண்டாமா?' என்பதுதான் அவரது எண்ணம்; ஆசை. ஆனால் மாதா மாதம் 'துண்டு விழும் பட்ஜெட்'டான அவரது வருமானத்தில் அந்த ஆசையெல்லாம் நிறைவேறுமா? தேதியோ இருபத்தாறு. இரண்டுங் கெட்டான் தேதி. அவரிடம்தான் இல்லையென்றால், கண்டக்டர் பாண்டியனிடமாவது கேட்கலாமென்றாலோ, தேதி இருபத்தாறு. அவன் மட்டும் என்ன, பணத்தைப் 'பண்டுகட்டி' வைத்திருப்பானா?... இருந்தாலும் கேட்டுப் பார்க்கலாம்... கையிலிருந்தால்

வஞ்சகமில்லாமல் கொடுப்பான்...

''ஸ்டாப் ஓல்டான்!'' கண்டக்டரின் முரட்டுக் குரல் காரை மட்டுமல்ல, பிள்ளையவர்களின் சிந்தனைக்கும் 'பிரேக்' போட்டு நிறுத்தியது.

மணி ஐந்து ஐம்பது; இன்னும் பத்தே நிமிஷம்.

''வே, பாண்டியன். இது தானே 'லாஸ்ட் ட்ரிப்?''

''ஆமாமா. வளைய வளைய, செக்கு மாடு மாதிரி டவுணையும் ஜங்ஷனையும் சுத்தறதுன்னு?– காசை ஒழுங்காக் கொடுக்கானுகளா, வாங்குதானுகளா?... கார்'லெ ஏறினதுமே எக்ஷிபிஷன்லெ இறங்கிறதாகத்தான் நினைப்பு. இந்த இழவெடுத்த எக்ஷிபிஷன்லெ அப்படி என்னதான் இருக்கோ, தெரியலெ... சரி அண்ணாச்சி. ரைட்! போலாம்!''

சர்ச் டவரிலிருந்து திருநெல்வேலிக்குப் பாய்ந்தது பஸ். கடைசி ட்ரிப்!

'இருந்தால் வஞ்சகமில்லாமல் கொடுப்பான். கேட்டுத்தான் பார்ப்போமே!' என்று நினைத்தார் சங்கரன்பிள்ளை. மறுகணமே பாண்டியனை வாய்விட்டுக் கூப்பிட்டு விட்டார்.

''வே, பாண்டியன். இங்'னெ வா''

''என்ன அண்ணாச்சி விசயம்?'' கண்டக்டர் டிரைவர் அருகே பாய்ந்து வந்தான்.

''ஏ, நீ எக்ஷிபிஷன் பார்த்தாச்சா?... எப்படி இருக்காம்?''

''அன்னைக்கி நம்ம முத்தையா அண்ணன் வந்திருந்தாருல்லெ?''

''யாரு, பாண்டி?''

''அட. சீவலப்பேரி வண்டி எடுக்காரே. பதினேழு அம்பத்தாறு. லாண்டோ பாடி!''

''அவரா? சரி சரி.''

''அவருகூட போன நாயித்துக் கிழமையன்னிக்கி நாடகம் பார்த்தேன். ஆமா. நீங்க பாக்கலியா இன்னும்?''

''ஆமப்பா, ஊட்டிலே உங்க மதினிவேறே போகணும்ங்கா. கையிலே காசைத்தான் காணோம். எப்படியோ இன்னிக்கிப் படியை மிச்சம் பண்ணிட்டேன்.''

''போங்கண்ணாச்சி. நீங்க ரொம்பப் பிசினாறி. என்னமோ வருஷத்துக்கு ஒரு தரம் நடத்துதான். அதைப் பார்க்கவுமா, ஆயிரத்தெட்டு யோசனை?''

''நீ சொல்லுவே. எல்லாத்துக்கும் வேணுமில்லா. உனக்கென்ன,புள்ளையா குட்டியா?... மோரிஸ்மைனர் மாதிரி திரிவே, நம்ம பாடு அப்படியா?... இவன் குடுக்கிற கொள்ளைச் சம்பளத்திலே என்ன பண்றது? எல்லாம் இதுக்குள்ளே தானே வண்டி ஓட்ட வேண்டியிருக்கு!'

''அண்ணாச்சி, இன்னிக்கி 'ரத்த பாசம்' நாடகம். நாலு நாளா, போடு போடுன்னு போடுதானும். நேத்து நம்ம கோவன்னு பாத்துட்டு வந்தாராம்; ரொம்ப நல்லாயிருக்காம்.''

''நாளைக்கு எனக்கு 'ஆப்' தான். இன்னிக்குப் பாத்தா பாத்தபடி... ரூபாயில்லியே. பாண்டி, உங்கிட்ட ஒரு அஞ்சு ரூவா இருந்தா கொடேன். சம்பளத்திலே தந்திருதேன்.''

அதற்குள் பஸ் ஜங்ஷன் ஆர்ச்சுக்கு வந்துவிட்டது; ஸ்டாப்பில் வண்டி நின்றதும், எக்ஸிபிஷனுக்குச் செல்லும் கூட்டம் பஸ்ஸில் முண்டியடித்து ஏற முனைந்தது. கூட்டத்தைச் சமாளிப்பதற்காக, கண்டக்டர் பின்னால் ஓடினான். சங்கரன்பிள்ளையின் 'திட்டக் கடன் பிரேரபணை' ஒத்திப் போடப்பட்டது.

காரை விரட்டிக்கொண்டு வந்தார் சங்கரன்பிள்ளை. ஆனால் வந்த அவசரத்துக்குக் காணாது. லெவல் கிராஸ் ரயில்வே கேட் தவணை வட்டி கடன்காரன் மாதிரி வழியை மறித்து விட்டது. மணி ஆருகி விட்டது. சங்கரன்பிள்ளைக்கு 'சீட்'டில் இருப்பே கொள்ளவில்லை. ஆனால் அவர் அவசரம் ரயிலுக்குத் தெரிகிறதா? ஸ்டேஷனை விட்டுக் கிளம்பிய திருச்செந்தூர் ஷட்டில் வண்டி இரை தின்ற பாம்பு போல் இழுக்க மாட்டாமல் இழுத்துக் கொண்டு, லெவல் கிராசைச் சாவதானமாகத் தாண்டிச் சென்றது. டிரைவர் சங்கரன் பிள்ளை தலையை ஸ்டீயரிங்கின் மீது சாய்த்து எதிரே தெரிந்த விளம்பரபோர்டைப் பார்த்தார்

நெல்லை சுதேசிப் பொருட்காட்சி... ரத்தபாசம் நாடகம்... நடனம்... கிளி சர்க்கஸ்... மரணக்கிணறு.. உருகும்பெண்.. பொம்மலாட்டம்!...

சங்கரன் பிள்ளையின் கண்களில் ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை கண்ணில் படும் போர்டானாலும் அந்த நிமிஷத்தில் அந்த போர்டு அவருக்கு எவ்வளவோ விஷய விளக்கம் கொடுத்தது. பிள்ளையின் கண் ரேட் விவரத்தில் நிலைகுத்தியது. ரூ. 1. 2. 3. 4. 5. ... கட்டணம் மேலே மேலே சிவனாரின் முடியைக் காணச் சென்ற அன்னப் பட்சியைப்போல் முடிவே அற்று சென்றுகொண்டிருந்தது. டிக்கட் விவரத்தைக் கண்டதும், அவர் மனம் தமது குடும்ப பாரத்தை எண்ணிப் பார்த்தது. ''முழு டிக்கட் இரண்டு; 'வித்அவுட் டிக்கட்' இரண்டு-ஆக உருப்படி நாலுக்குப் போகவர ரூபாய் ஐந்து''க்கு அவர் மனம் வழி தேடித் தவித்தது.

ரயில்வே கேட் திறந்து வழி விட்டதும், கட்டுப்பட்டுக் கிடந்த திருநெல்வேலி நாகரிகம் மீண்டும் துரித கதி பெற்று இயங்கத்தொடங்கியது. 399ம் வீருப்புடன் உறுமி விட்டு, லெவல் கிராசிங்கை எகிறிக் குதித்து முன்வாங்கியது. 'ஸ்டாப் ஓல்டான்' போடாமலே, பஸ் நெல்லை லாட்ஜ் ஸ்டாப்பில் வந்து நின்றது.

சங்கரன்பிள்ளை தூக்குச் சட்டி, சிட்டுத் துண்டு, டிரைவர் லைசென்ஸ் சகிதமாக வாகனத்தை விட்டிறங்கினார்; இறங்கியதும் இறங்காததுமாகப் பாண்டியனுக்குக் குரல் கொடுத்தார்.

''என்ன பாண்டி? இந்த...'' என்று இழுத்தார் சங்கரன் பிள்ளை.

''நீங்க கேட்டதுதானே. அந்த வெத்திலை பாக்குக் கடைக்கு வாங்க. வாங்கித் தாரேன்.''

அந்த வெற்றிலை பாக்குக் கடைதான் டிரைவர்-கண்டக்டர்களின் உண்டியல் கடை. அங்கு டிரைவர், கண்டக்டர்களின் நாணயத்தையும் தாரதம்

மியத்தையும் பொறுத்து 'ஓ.டி.' வாங்கலாம். வட்டி விகிதம் அப்படி ஒன்றும் அதிகமில்லை. ரூபாய்க்கு நாள் ஒன்றுக்குக் காலணாதான் வட்டி. 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்ற தத்துவத்துக்கு விளைதார்த்தம் கற்பித்து வாழும் புண்ணிய வாளன் அந்தக் கடைக்காரன்.

எப்படியோ சங்கரன்பிள்ளையின் கைக்கு அன்று ஐந்து ரூபாய் கிட்டிவிட்டது.

ட்யூட்டி டிரஸ், கால்சராய், காக்கிச் சட்டை முதலியனவற்றைக் களைந்தார் சங்கரன் பிள்ளை. கழற்றக் கழற்ற உள்ளேயிருந்து வெள்ளைச் சட்டையும், வேட்டியும் தலைகாட்டியது.

"வாரேன் பாண்டி,...முத்தையாண்ணுச்சி. இன்வாய்ஸைப் பார்த்துக்கிடுங்க" என்று கூறியவாறு, புதிய டிரைவரிடம் 'சார்ஜை' ஒப்புக் கொடுத்து விட்டு, வீடு நோக்கி நடந்தார் சங்கரன்பிள்ளை.

2

சங்கரன்பிள்ளை குடும்பசகிமாகப் பொருட் காட்சிக்குப் புறப்பட்டுச் சென்றார்......

நாடகக் கொட்டகை வாசலில் சங்கரன்பிள்ளை ஒரு ரூபாய் டிக்கட் க்யூவில் நின்றுகொண்டிருந்தார்; ஸ்ரீமதி பிள்ளை இடுப்பிலே பாப்பாவோடும், பக்கத்திலே வாண்டுப்பயல் நெல்லையப்பனோடும் இரண்டு ரூபாய் க்யூவில் நின்றுகொண்டிருந்தாள். கையிலே யிருந்த பாம்பு பலூனை உருவி உருவி விட்டு நாராசமான சப்தத்தைக் கிளப்பிக்கொண்டிருந்தான், செல்வச் சிரஞ்சீவி நெல்லையப்பன். டிக்கட்டுகள் எடுத்து முடிந்தன. தரை வரிசையும் பெஞ்சு வரிசையும் சங்கமாகும் இடத்திலே பகவதியும் பிள்ளைகளும் பெஞ்சிலும், சங்கரன்பிள்ளை தரையிலுமாக இருந்து 'ரத்தபாசம்' நாடகத்தைக் கண்டு களித்தார்கள்.

நாடகம் முடிந்ததும், தூங்கிப்போன பிள்ளைகள் இருவரையும் ஆளுக்கொருவராகத் தூக்கிச் சுமந்துகொண்டு சங்கரன்பிள்ளை தம்பதிகள் வெளியே வந்தார்கள். வெளியே 'எக்ஷிபிஷன் ஸ்பெஷல் பஸ்'களுக்கு ஏகக்கூட்டம். கோட்டும் சூட்டும், சில்க் ஜிப்பாவும், கெண்டை வேட்டியும், ஜார்ஜெட் புடவையும், பங்களூர் சில்க்கும் கட்டியிருந்த நாகரிகம் எல்லாம் பஸ்ஸில் ஊசிமுனை இடமாவது கிடைத்துவிடாதா என்று நினைத்து, முண்டியடித்துக் கொண்டு, குருக்ஷேத்திர யுத்தம் நடத்திக்கொண்டிருந்தது. டிரைவர் சங்கரன்பிள்ளை அந்தக் குருக்ஷேத்திர யுத்தத்தில் கலந்துகொள்ள விருப்பமில்லாத விதுரராகி, ஆண்டவன் கொடுத்த காலும் கையும் இருக்கவே இருக்கிறது என்ற தெம்பில் நெல்லையப்பனைத் தோளில் சாய்த்துக்கொண்டு, பகவதி சகிதமாக, ஜங்ஷனை நோக்கிப் பொடி நடையாக நடக்கத்தொடங்கினார்.

செல்லும் வழியில் அவர் மனம் அன்றிரவு தாம் கண்டு வந்த நாடகக்கதையை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து அசைபோடத் தொடங்கியது.

"அண்ணன் தம்பி இருவரையும் ரத்தபாசம் சேர்க்கத்துணிந்தாலும், அந்தஸ்தும் போலிக்

கௌரவமும்அல்லவா குறுக்கே நிற்கிறது! பணம் பகட்டு அந்தஸ்து அதிகாரம் என்ற போர்வைக்குள்ளே தான் எத்தனை பித்தலாட்டங்கள்! ஆனால் அதேவேளையில் வறுமை, திருட்டு, கீழான வாழ்க்கை என்ற சாம்பலுக்குள்ளே நீறு பூத்த நெருப்பாய் எவ்வளவு மனிதத்தன்மைகுடிகொண்டிருக்கிறது! ரத்தபாசம்! ரத்தபாசம் ஒன்று மட்டும்தானா மனிதனைப் பிணைக்கிறது?......''

தோளில் சுமந்து கனக்கும் புத்திர சம்பத்தோடு, சங்கரன் பிள்ளை தமக்குத் தாமே விமர்சனம் செய்தவாறு நடந்து கொண்டிருந்தார்.

''என்ன அண்ணாச்சி, ரத்தபாசமா?'' என்று கேட்டுக் கொண்டே மற்றொரு'நடராஜா சர்வீஸ்' அவரை 'ஓவர்டேக்' பண்ணி, பக்கத்தில் வந்து சேர்ந்தது.

''யாரது? அடடே பாலுவா? என்னடே! நீ எங்கே போயிட்டுப் போறே? நீயும் ரத்தபாசம் தானா?'' என்று கேட்டார் சங்கரன்பிள்ளை.

''ஆமாமா. ரத்தபாசம்தான்! ஆனால், என் ரத்தபாசம் வேறெ விதம்!'' என்றான் பாலு.

''என்னடே, புதிர்போடுதே?''

''ஆமண்ணாச்சி.நம்ம ரத்தபாசம்வெறும் உடன்பிறந்த பாசம் இல்லே. இது அதையெல்லாம் விடப்பெரிய,பிரம்மாண்டமான பாசம்!''

''அட, நீ எங்கேதான் போயிட்டு வாரே?''

''நம்ம சங்கத்துக்குத்தான்!''

''ச்சூ!... சரி. உன் சங்கம் எந்தக் கதியிலே இருக்கு?''

''என்ன அண்ணாச்சி? என் சங்கமா? நம்ம சங்கம்னு சொல்லக்கூட உங்களுக்குப் பயமாயிருக்கா? இல்லே–கூச்சமாயிருக்கா?''

''நான் என்னப்பா — நான் என்ன அதுக்கு சந்தா குடுக்கனு? உன் சங்கத்துக்கு வாரனு, போறனு? எனக்குத்தான்இந்தச் சங்காத்தமே புடிக்காதே!''

''அதென்ன, அப்படி ஒரே போடாப் போடுதீக!''

''பின்னே என்னடே? முதல் போட்டவன் முதலாளி, நம்ம தொள்ளாளி. நாம அவனை என்ன செய்யக்கிடக்கு? உள்ள 'படி' ஒழுங்காக் கிடைச்சா சரிதான்னு நம்ம பாட்டுக்கு வண்டியை ஓட்டிக்கிட்டுப் போகாமெ, இப்படிச் சங்கம் கிங்கம்னு மக்கார் பண்ணி, வயித்திலே மண்ணை யள்ளிக் கொட்டிக்கிறதா?''

''ஏன் அண்ணாச்சி? முதல் போட்டாமட்டும் முதலாளியாயிட முடியுமா? நம்ம உயிரும் உடலும் ஓடாத்தேஞ்சு உழைச்சாத்தானே அவன் முதலே அள்ளிக் கட்டமுடியும்''

''அட சரிதாம்ப்பா. அவனுக்கு மரு கிடக்கு. நமக்கு விதிச்சது இவ்வளவுதான்.''

''அண்ணாச்சி, அவன் பணத்தை முதலாப் போடுதான்; நாம நம்ம உழைப்பை முதலாப் போடுதோம். இல்லையா? நம்ம உழைப்பை நாமே குறைச்சுப் பேசலாமா? ஸ்டீயரிங் அங்கே இங்கே லேசா இழுத்து வெட்டினா, அப்ப நம்மகதையும் வேறேதான்; அவன் காரு கதையும் வேறேதான். காரு ஓடுதின்னா என்னமோ எஞ்சினும்

பெட்ரோலுமா ஓடுது! நம்ம உடம்பிலே ஒழுங்கா ரத்தம் ஓடினுல்லே காரும், ஓடும்; கம்பெனியும் ஓடும்!'' என்று விளக்க முனைந்தான் பாலு.

''சரிதாண்டே. நீ சொல்றது வாஸ்தவம்தான்'' என்றுதம்மை மறந்தவராக ஆமோதித்தார் சங்கரன் பிள்ளை.

''இதைப் புரியவைக்கத்தான் அண்ணுச்சி, சங்கம். நீங்கதான் சங்கத்துக்குப்பக்கம்கூட வாற தில்லே!''

''நான்தான் எப்பவும் இருக்க னே. எல்லாம் நடத்துங்க. பாத்துக்கலாம்'' என்று 'சங்கப்' பேச்சுக்கு 'பிரேக்' போட்டார் சங்கரன்பிள்ளை.

இதற்குள் ஜங்ஷன் இந்துக் கல்லூரிவந்துவிட்டது.சங்கரன் பிள்ளை குடியிருப்பது சிந்துபூந் துறையில். எனவே மதுரை ரோட்டுத் திருப்பம் வந்ததும் ''அப்ப நான் வரட்டுமா பாலு'' என்றுகூறி விடைபெற்றவாறே திசை திரும்பினுர்.

மதுரை ரோட் குடைபிட் டைக் கடந்து மங்கம்மாள் சாலைக்குள் புகுந்ததும். ஸ்ரீமதி பிள்ளை தன் கணவனை நோக்கி ஆர்வத்தோடு கேட்டாள்:

''ஆமா. அவரு யாரு?''

''அவன் எங்க கம்பெனியிலே தான் இருந்தான். கொஞ்சம் ரோசக்காரன். ஒருநாள் மானேஜர் ஏதோ சொல்லாத வார்த்தையைச் சொல்லிப்பிட் டாருன்னு, இவன் கொஞ்சம் வாயைக் குடுத்திட்டான். அத னுலே வேலை போச்சி. அநி யாயம்தான்! இப்போ எங்கே யோ லாரி சௌர்வீஸிலெ வேலை பாக்கான். அத்தோடே இப் படி சங்கம் கிங்கம்னு வேறெ திரியுதான்!...'' என்று 'குலமு றை கிளத்தி'னுர் சங்கரன் பிள்ளை.

3

ஆப்' முடிந்தது. மறு நாள் காலை டிரைவர் சங்கரன்பிள்ளை வழக்கம் போல் கம்பெனிக்குப் புறப்பட்டார்.

''பகவதி! மத்தியானச் சாப் பாட்டைத் தங்கம்மாகிட்டெ கொடுத்து ஆர்ச் ஸ்டாப்புக்கு வரச்சொல்லு. இன்னைக்கு பதி னேழு தொன்னுத்தெட்டு. சமா தானபுரம் வண்டி!'' என்று கூறிவிட்டு, நல்ல சகுனத்தில் நடை இறங்கிச் சென்றுர்.

சங்கரன்பிள்ளை கம்பெனிக் குள் நுழைந்தார்; 1798 தென்வட லாக நின்றது. தோளில் கிடந்த துண்டை டிரைவர் ஸ்தானத் தில் மடித்துப் போட்டுவிட்டுத் திரும்பினுர்.

''வே! சங்கரம்பிள்ளை!'' மானேஜர் கூப்பிட்டார்.

''ஐயா!'' என்று பவ்வியமாக, உடலும் மனமும் வளைந்து வணங்க மானேஜர் அறைக்குள் நுழைந்தார் சங்கரன்பிள்ளை.

''என்னவே! முந்தா நாள் 399 தானே!''

''ஆமா!''

''சாயங்காலம் லாஸ்ட் டிரிப் பிலே என் இன்வாய்ஸ் எழுத லெ?''

''எழுதியிருப்-பே-னே!''

''என்னவே, எழுதியிருப் பனே!'' மானேஜரின் குரலில் உக்கிரம்குடிகொண்டது: ''நீரே பாரும். நல்லாக் கண்ணைத் துடைச்சிட்டுப் பாரும்!''

சங்கரன்பிள்ளை இன்வாய்ஸ் ஸைப் (டிக்கட் விற்பனை விவரம்) பார்த்தார். கடைசி ட்ரிப்பில் எழுதவில்லைதான்.

எக்ஷிபிஷன்போகவேண்டும்–பகவதி தவிப்பாள் — அஞ்சு ரூபாய் வேண்டும் — யாரிடம் கேட்பது? — பாண்டியனைக் கேக்கலாமா?— ரத்தபாசம்......

பாவம்! எக்ஷிபிஷனைப் பற்றிய எண்ணத்திலே அவருக்கு அன்று ஞாபக மறதி ஏற்பட்டு விட்டது. இன்வாய்ஸ் எழுதவில்லை. சங்கரன்பிள்ளை இன்னது சொல்வதெனத் தெரியாமல் திருகத் திருக விழித்தார்.

''ஒரு மாசம் ஸஸ்பெண்ட்!'' மானேஜர் தீர்ப்புக் கூறிவிட்டார்.

சங்கரன்பிள்ளையின் மயிர்க்காலெல்லாம் திடுக்கிட்டு நிமிர்ந்தன. கம்பெனி நிர்வாகம் துர்வாசமுனி சாபம்தான்; அதற்கு மாற்றே கிடையாது...

அந்த மாதச் சம்பளம் கணக்குத் தீர்த்துக் கையில்கொடுக்கப்பட்டது. கையிலே வாங்கிய பணத்தில் பாண்டியனுக்குக் கொடுக்க வேண்டிய ரூபாய் ஐந்தையும் கொடுத்துவிட்டு, 'ஸீட்'டிலே மடித்துப் போட்ட துண்டை மீண்டும் தோளில் எடுத்துப் போட்டுக்கொண்டு நடை இறங்கினர் டிரைவர் சங்கரன்பிள்ளை.

அன்று மத்தியானம் அவருக்கு ஆர்ச் ஸ்டாப்புக்கு சாப்பாடு வரவில்லை; அவரே சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்து விட்டார்.

மாலை வரையிலும் வீட்டுக்குள்ளேயே இன்னது செய்வதெனத் தெரியாமல் அடைபட்டுக் கிடந்த சங்கரன்பிள்ளை பொழுது சாயும் நேரத்தில் மனச் சாந்திக்காகவது கம்பெனிப் பக்கம் போய் நாலு சக ஊழியர்களைக் கண்டு வரலாம் எனக் கிளம்பிச் சென்ருர்.

அவர் கம்பெனி வாயிலுக்குச் சென்றவுடன், கம்பெனிக்கு எதிரே ஒரு போர்டு தொங்கியது; அதனருகே ஒன்றிரண்டு கம்பெனி ஒர்க்ஷாப் தொழிலாளிகள் நின்றுகொண்டிருந்தார்கள். சங்கரன்பிள்ளை அவர்களருகே சென்று எதிரே தொங்கிய போர்டைக் கவனித்தார்.

''சங்கரன்பிள்ளையை சஸ்பெண்ட் செய்யாதே! மீண்டும் அவரை வேலைக்கு எடு! 'கம்பெனி நிர்வாகம்' பற்றி சங்கக் காரியதரிசி பாலு பேசுவார். இடம்: ஆற்றுமணல்; நேரம்: இன்றிரவு 7 மணி–மோட்டார் தொழிலாளர் சங்கம்'' என்ற வாசகங்கள் காணப்பட்டன.

சங்கரன்பிள்ளை தம்மை மறந்தவராக அந்த போர்டிலுள்ள வாசகங்களைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தார்; மறுகணமே அவர் பாலுவைத் தேடி, சங்கக் காரியாலயத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்ருர்.

போகும் வழியில், அவர் மனத்தில் பாலு அன்றிரவு சொன்ன அந்த வார்த்தைகள், 'என் ரத்த பாசம் வேறுவிதம்!' என்ற வாசகம் மீண்டும் எதிரொலிப்பதுபோல் தோன்றியது. அதுமட்டுமல்ல, அந்த வாசகத்துக்குள் பொதிந்திருந்த அர்த்த பாவமும் அவருக்கு மெல்ல மெல்லப் புலப்படத் தோன்றியது!

★

நமது இலக்கியம்

தலைப்புக் கேள்வி வேடிக்கையாகப்படலாம். எனினும் அந்த 'வேடிக்கை'யினால், நம் நாட்டில் எப்படிப்பட்ட விபரீதங்கள் எல்லாம் நேர்ந்து வருகின்றன, தெரியுமா? எனவே இந்தக் கேள்விக்குச் சரியான விடையைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். கட்டுரையாளர் மொழியாராய்ச்சியில் மிகுந்த பயிற்சியுள்ளவர். அவர் தொடங்கிவைக்கும் இந்த விவாதத்தில் எவரும் பங்குகொள்ளலாம்; அடுத்த இதழில் இந்தக் கட்டுரையின் முடிவை மறுக்கும் கட்டுரை ஒன்றை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

மொழிகள் குட்டி போடுமா?

●

சடகோபன்

●

'சாந்தி' காரியாலயத்தில் ஆசிரியர் ரகுநாதனுடன் அன்பர்கள் சிலர் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் நானும் ஒருவன். பேச்சு மொழியாராய்ச்சித் துறையில் சென்று கொண்டிருந்தது. அப்போது, ஆசிரியர் ரகுநாதன் "மொழிகள் குட்டி போடுமா?" என்று ஒரு கேள்வியை எழுப்பினார். அத்துடன் "இது பற்றி விவாத அரங்கில் கருத்துக்கள் எழுத்து வாயிலாகத் தெரிவிக்கப்பட வேண்டும்; பிரபஸ்தர்கள் இதில் பங்கெடுக்க வேண்டும்" என்று விருப்பம் தெரிவித்தார்.

பிரபலஸ்தனாகும்படியான எந்த வேலையையும் நான் செய்திருப்பதாக இது வரை வெளியாகவில்லை. எனினும் மேலே கண்ட கேள்விக்கு 'ஆம்' என்று சொல்லும் கட்சியினனாக எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

'மொழிகள் குட்டி போடுமா?' என்பதை 'மொழி குட்டிகள் போடுமா?' என்றும் கேட்டுக்கொள்ளலாம் அல்லவா?

குட்டி என்றால் தாயில் சாயலையும் குணங்களையும் பலவகைகளில் பெற்று, சில வகைகளில் தனக்கே இயல்பாக அமையப் பெறும் மாறுபாடுகளை உடைய பிராணியே யாகும். அது தாயை விட அளவில் சிறுத்திருப்பதால் குட்டி என்கிறோம். பல மாறுபாடுகள் அதனிடம் காணப்பட்டாலும் அதைத் தாயின் குட்டி

என்றே கூறுகிறோம். தாய்க்கு எல்லாவிதத்திலும் சரிநிகர் சமானமாக உள்ள குட்டி மாறுதலே இயல்பாகக்கொண்டு வளர்ந்து வரும் இவ்வுலகில் எக்காலத்திலும் இருந்ததில்லை.

ஒரு மொழி ஈன்ற சேய் மொழியாக, மற்றொரு மொழி இருப்பது மேலே காட்டிய சான்றைப் போன்றதே யாகும். தாய் மொழியும் சேய் மொழியும் தத்தம் வழியில் வளர்ந்து பெரும் மாறுபாடுகள் தோன்றுகையில், அவை ஒன்றுக்கொன்று உடன் பிறந்த மொழிகளோ—அதாவது சகோதர மொழிகளோ—என்று சந்தேகம் ஏற்படக்கூடும். அவைகளுக்கு மூலமாகிய தாய்மொழி ஒன்று உண்டு என்று கருதி அதனைத் தேடத் தொடங்குவார் சிலர். அவ்விதம் தேடினுல் அவர்கள் வளர்ச்சி பெருது முதன் முதலில் தாய்மொழி இருந்த நிலையைக் கண்டறிந்து, அதுதான் இரு மொழிகளுக்குமே தாய் மொழி என்று சொல்வார்கள். இது நியாயமல்ல. ஏனெனில் இவ்வகையில் பார்த்தால், ஆங்கில மொழியும் அமெரிக்க மொழியும் சகோதர மொழிகள் என்றே சொல்லப்பட்டுவிடும்; பழைய கால ஆங்கிலம் மூலத் தாய் மொழி என்றுகருதப்படும். பழைய கால ஆங்கிலத்தையும் தற்கால ஆங்கிலத்தையும் தாய் மொழி, சேய் மொழி என்று பாகுபாடு செய்வது சரியல்ல. தற்போதுள்ள ஆங்கில மொழியை 'வளர்ச்சி பெற்ற ஆங்கில மொழி' என்பதே பொருந்தும்.

கானடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் தென் ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலுமாக, உலகில் பல்வேறு பாகங்களில் குடியேறிய ஆங்கிலேயர் தத்தம் பிரதேசத்தில் பேசும் ஆங்கிலம் மற்றப் பிரதேசத்தில் பேசப்படும் ஆங்கிலத்திலிருந்து மாறுபட்டிருப்பதைக்காண்கின்றனர்; சில நூற்றுண்டுகளில் அம்மாறுபாடுகள் மிகமிக வளர்ந்து அந்தந்தப் பிரதேசத்து ஆங்கிலம் ஒரு தனி மொழியாக, அந்தந்தப் பிரதேசத்தின் பெயரைக்கொண்டே அழைக்கப்படக்கூடும். அவ்விதம் ஆயின் அவற்றை 'மொழிக் குட்டிகள்' அல்லது 'மொழிச் சேய்கள்' என்று சொல்லலாம்.

நம் தேசத்துக்கு அன்னியர் தாம் 'இந்தியா' என்ற பெயரைத் தந்தனர். அதுபோலவே நமது மொழியாகிய தமிழை, 'தென்மொழி' எனப்படுவதை வட நாட்டு ஆரியரே 'திராவிடம்' என்றனர். மற்றப்படி நம் இலக்கியங்களில் 'தமிழ்' என்றே நமது மொழி குறிக்கப்படுகிறது. தமிழுக்கு முந்தி பழமை படைத்ததாக வேறு ஒரு மொழியின் பெயர் இந்தியாவின் தென் பகுதியில் இருந்ததாக நம் இலக்கியங்களில் காணப்படவில்லை. எனவே தமிழுக்குத் தாய் மொழியும் சகோதர மொழியும்இருந்ததாகவோ இருப்பதாகவோ கூறுவதற்கில்லை. தமிழ்மொழிக்குச் சேய் மொழிகள் தாம் உண்டு.தமிழகத்துக்கு எல்லை கூறப்படும் பழம் பாடல்களிலும் இலக்கியங்களிலும் தமிழகப்பிரதேசத்தில் வேறு மொழிகள் வழங்கியதாகவும்

விவாதத்தில் பங்கு கொள்ளவிரும்புவோருக்கு

● விவாதத்துக்குரிய விஷயத்தைப் பற்றிய தமது கருத்தை உதாரண பூர்வமாகவோ, மொழி இயல் ஆராய்ச்சியின் தர்க்க முறைமை மூலமோ விளக்குவதாக இருக்கவேண்டும்; விஷயத்துக்குப் புறம்பான சர்ச்சைகள் இருத்தல் கூடாது.

● சாந்தியின் ஆறு பக்கங்களுக்கு மேற்போகாது இருத்தல் வேண்டும்.

● கட்டுரைகளைப் பரிசீலனை செய்து, அவற்றைப் பூரணமாகவோ அல்லது பகுதிகளாகவோ நிராகரிக்கவும் அல்லது வெளியிடவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

● ஏற்றுக் கொள்ளப்படாதனவற்றைத் திரும்பப் பெற, போதிய தபால் முத்திரைகள் அனுப்புதல் வேண்டும்.

ஆசிரியர், '**சாந்தி**'

குறிப்பிடவில்லை. ஆனல், அதனுள் பல நாடுகள் இருந்தன என்று கூறப்படுகிறது. அந்நாடுகளுக்கே சிறப்பாக வளர்ச்சியடைந்த சொற்களைத் 'திசைச் சொற்கள்' எனப் பொதுவில் வழங்கி வந்தனர்.

தமிழின் சேய் மொழிகளான அல்லது மொழிக் குட்டிகளான மலையாளத்தையும் கன்னடத்தையும் தனி மொழிகள் என்றே, தமிழின் உடன் பிறந்த சகோதர மொழிகள் என்றே சொல்வது தவறு. தெலுங்கு முதலியனவும் அவ்வாறே. அதற்கான விளக்கம் பின்வருமாறு:

ஆதிகாலத்தமிழில் வினைச்சொற்களில் காலத்தைக் குறிப்பிட மட்டுமே இடைச் சொற்கள் (இடை நிலைகள்) உபயோகிக்கப் பட்டுள்ளன. பால், எண் முதலியவற்றைக் காட்டும் இடைச் சொற்கள் (விகுதிகள்) உபயோகிக்கப்படவில்லை. இவ்வாறு இருந்த ஒரு காலமும் உண்டு. இவ்வழக்கு பிற்காலத்திலும் உள்ளது.

உதாரணம்:

1. "ஒரு நுதல் வண்ணம் ஆகின்று" (நக்கீரர் எழுதிய திருமுருகாற்றுப்படை)

இதில் 'ஆகின்றது' என்பதில் உள்ள 'அது' என்ற விகுதி இல்லை; 'ஆகின்று' என்று மட்டுமே உள்ளது.

(2) "மெய்வேல் பறியா நகும்" (குறள்)

இதில் 'நகுவான்' என்பதில் என்பதில் உள்ள 'ஆன்' விகுதி இல்லை; 'நகும்' என்று மட்டுமே உள்ளது.

தமிழ் மொழியில் வினைகளுடன் காலம் காட்டும் இடை நிலைகளும், பால், எண் காட்டும் விகுதிகளும் பாமர வழக்கில் பெரும்பான்மையாக ஏற்கப்பட்டு,மொழி வளர்ந்தது. ஆனல் சேர நாட்டில், தமிழ் மொழி பால், எண் காட்டும் விகுதிகளை ஏற்காத நிலைமையே பெரும்பான்மைப் பாமர வழக்கில் ஏற்பட்டு வளர்ந்தது.

அதனால் நாம் 'போகின்றோம்' என்று கூறும் சொல்லை சேர நாட்டுமக்கள் 'போகின்று' என்று சொல்லி வந்து, இக்காலத்தில் 'போகுன்னு' என்று சிதைத்துச் சொல்லி வருகிறார்கள். நாம் 'ஒன்று' என்பதை அவர்கள் 'ஒன்னு' என்கிறார்கள். 'ஆனை' என்பதை 'ஆன' என்றும், 'இலை' என்பதை 'இல' என்றும் அவர்கள் சிதைத்துச் சொல்லி, அதை இலக்கண சுத்தமான 'மலையாள மொழி' அல்லது 'கோள மொழி' என்கிறார்கள்.

இறந்த காலத்தைக் குறிப்பிடும் சொற்களை நாம் 'போயி னேன், போயினாய், போயினான், போயினாள், போயிற்று, போயி னோம், போயினீர், போயின, என்று ஒவ்வொரு இடத்துக்குத் தக்கவாறு, நான், நீ, அவன், அவள், அவர், அது என்பதற் கேற்ப உபயோகித்து வந்திருக்கி றோம். அதாவது போ + இன் + ஏன் = போயினேன் என்று உருவாக்கி வந்திருக்கிறோம்.

ஆனால் மலையாள மொழி பேசுவோரோ எல்லா இடங்களி லும் 'போயி' என்றே எழுதுகி றார்கள். ('இன்' என்ற இறந்த கால 'இடை'யிலுள்ள 'ன்' என்ற எழுத்தையும் அவர்கள் சிதைத்து விட்டார்கள். அதாவது போ + இ = போயி என்று ஆக்கி விட்டார்கள்.

தமிழ்:

நான் போயினேன்
அவன் போயினான்

மலையாளம்:

ஞான் போயி
அவன் போயி

எதிர்காலம் அல்லது வருங் காலத்தைக் குறிப்பிடும் வழக்கும் தமிழிலும் மலையாளத்திலும் பின் வருமாறு உள்ளது.

தமிழ்

நான் போவேன்
நீ போவாய்
அவள் போவாள்
அது போகும்

மலையாளம்

ஞான் போகும்
நீ போகும்
அவன் போகும்
அது போகும்

பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல், உரிச்சொல் ஆகிய நான்குவகைச் சொற்கள், திணை, பால், எண், இடம், வேற்றுமை ஆகிய (பெயர்ச்சொல் ஏற்பவை யான) பிரிவுகள், வினைச்சொல் ஏற்பதாகவுள்ள நிகழ்வு, இறப்பு, எதிர்வு முதலிய மூன்று காலங் கள் முதலியவற்றில் மிகப்பெரும் பான்மையான ஒற்றுமை தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழி களுக்கும் இருப்பது தெளிவு.

தமிழ் மொழியில் சேர்ந்துள்ள வடமொழிச் சொற்களைவிட, மிக அதிகமான வடசொற்கள் (சம்ஸ்கிருதச் சொற்கள்) மலையா ளத்தில் சேர்ந்துள்ளன என்பதைத்தவிர, அந்தமொழியின் அடிப்படை அமைப்பு தமிழைப் பின்பற்றியே உள்ளது. தமிழ்ச் சொற்களும் சம்ஸ்கிருதச் சொற் களும் இல்லை என்றால் மலையாள மொழியே இல்லை.

'மலையாளம்' என்பது தென்னாட்டு மக்கள் 'கொடுத்த' பெயர். வடநாட்டவர் தமிழகச் 'சேரல்—சேரலர்—சேரன்' என்ற சொற்களிலிருந்து 'கேரளம்' என்ற சொல்லை உண்டாக்கி அளித்தனர். அந்தப் பெயரை மலையாளம் ஏற்றுக்கொண்டது. பழந்தமிழ் இலக்கியங்களில் 'கேரளம்' என்ற சொல்லே கிடையாது. எனவே மலையாள மொழி தமிழினின்றும் பிரிந்து பிறந்த தமிழின் சேய் மொழி அல்லது மொழிக்குட்டியாகும்.

தமிழ் ஈன்ற இம்மொழி தன் பிரதேசத்தில் தனி இயல்புகள் (உச்சரிப்பு முதலியனவற்றில்) பெற்று வளர்ந்து, வடசொல் மிகுந்தகாலத்தில், தனி எழுத்துக்கள் (அதாவது வடமொழியை உச்சரிப்பதற்கேற்றலிபி) புதிதாக அமைக்கப்பெற்றுத் தனிமொழியாயிற்று. ஆரம்ப காலத்தில் தமிழ் எழுத்துக்களே 'மலையாள'த்தின் எழுத்துக்களாகவும் இருந்து வந்தன. இப்போது மலையாளம் தனித்தியங்கும் வேறொரு தனி மொழியேயாயினும் அது தமிழ் மொழி ஈன்ற சேய்தான்; தமிழ் மொழியின் குட்டிதான். முதல் தனி மொழியல்ல. இந்த உண்மையை மூவேந்தர் காலத்திலும், முத்தமிழ்ச் சங்க நூல்களிலும் அம்மொழிபற்றிய குறிப்புக்கள் சிறிதும் இல்லாததிலிருந்தே லகுவில் தெரிந்துகொள்ளலாம்.

எனவே மொழிகள் குட்டி போடுமா என்ற கேள்விக்கு எனது பதில் 'போடத்தான் செய்யும்'என்பதே. தமிழ் மொழி ஈன்ற சேய்கள் தானே ஏனைய தென்னாட்டு மொழிகள்! ★

என்ன வயது?

ஒரு நாவலாசிரியர் இரவு இரண்டு மணி வரையிலும் தமது இருப்பிடத்தை விட்டு அகலாமல் தமது நாவலொன்றை எழுதுவதில் ஈடுபட்டிருந்தார். அவரது கைகளும் முகமும்கூடச் சோர்ந்து விட்டன. எனினும் அவர் எழுதுவதை நிறுத்திய பாட்டைக் காணோம்.

தூக்கம் கலைந்து எழுந்த அவரது மனைவி, "இன்னுமா தூங்கவில்லை? மணி இரண்டடித்து விட்டதே!" என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

"என்னால் இப்போது தூங்க முடியாது. என் கதாநாயகி 'வில்ல'னில் கையில் சிக்கிக்கொண்டு தவியாய்த் தவிக்கிறாள். அவளைக் காப்பாற்றுவதற்கு வழிகாண வேண்டும்!" என்றார் கதாசிரியர்.

"சரி, உங்கள் கதாநாயகிக்கு என்ன வயதாகிறது?"

"இருபத்திரண்டு!"

"பின்னே என்ன? விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கவாருங்கள். இருபத்திரண்டு வயசுப் பெண்ணுக்குத் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளவுமா சக்தியில்லை?" என்றாள் கதாசிரியரின் மனைவி!

★ இந்தியச் சிறுகதை

அன்பின் விலை

○

யஷ்பால்

○

பம்பாய் செளபாத்திக் கடற்கரை ரோட்டில் சில பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. ஒரு பெஞ்சின் முதுகு ரோட்டைப் பார்க்க இருந்தால் மறுபெஞ்சின்முதுகு சமுந்திரத்தைப்பார்க்க இருக்குமாறு தலை மாறிப் போடப்பட்டிருந்தன. அங்கு சூரியாஸ்தமனத்துக்குப் பின்னர் நடுராத்திரிவரையிலும் ஜனங்கள் உட்கார்ந்திருப்பார்கள். ரோட்டின் மீது பிரகாச ஒளி சிதறிநிற்கும் மின்சார விளக்குகளின் வெளிச்சத்தின் ஊடே மிதந்து செல்லும் மோட்டார்களையும், நடந்து செல்லும் மனிதர்களையும் பார்த்தவண்ணம் இருப்பார்கள் சிலர். சிலர் ரோட்டிற்கு முதுகைக்காட்டியவாறு, கடலை நோக்கி இருளில் கர்ஜித்து நுரைகக்கிச் சீறிப்புரளும் அலைக் கூட்டத்தில் கண்பதித்து அமர்ந்திருப்பார்கள்.

சிவம் ஏழரை மணிக்கு அங்கு வந்து சேர்ந்து, ஒரு பெஞ்சில் அமர்ந்தார். 'மலபார் ஹில்ஸி' லிருந்து இறங்கிவரும் மோட்டார்களின் மீது பார்வையைச் செலுத்தி யாரையோ எதிர்பார்ப்பவராய் ஒருமணி நேரமாக உட்கார்ந்திருந்தார். பின்னர் தெருவிளக்கின் பிரகாசத்தில் வெறுப்புற்றவராக 'ஸ்விம்மிங் கிளப்' பெஞ்சிற்குப் போய் இருட்டில் கடலை நோக்கிய வண்ணம் அமர்ந்தார். ஏகாந்தத்தை நாடி இவ்வாறு வந்து அமர்வது அவரது நடைமுறைப் பழக்கமல்ல; அன்றையதினம் வந்திருந்தார். அவ்வளவுதான்.

நகருக்குள் குடியரசு தினக் கொண்டாட்டத்தின் வாண வேடிக்கைகளின் முழக்கம் எதிரொலித்துக் கொண்டிருந்தது. வாணவேடிக்கைகளைக் காணப்போவதில் அவருக்கு விசேஷவிருப்பம்எதுவும் இல்லை. ஆனால் ஒரு நண்பர் அவரைக் கட்டாயப்படுத்தியிருந்தார். 'நீ ஏழரை மணிக்கு வா. நான் மலபார் ஹில்ஸிலிருந்து வண்டி எடுத்துக்கொண்டு வருகிறேன். வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன். போர்ட், கொலாபா பக்கமெல்லாம் சுற்றி வரலாம்' என்று சொல்லியிருந்தார்.

> நாட்டின் பல பாகங்களிலும் இன்று காணக்கூடிய சாதாரண நிகழ்ச்சிதான், இந்தக் கதா சம்பவம். எனினும் அந்தக் கதா பாத்திரத்தின் ஆசாபாசத்தையும் மனித இதயத்தையும்கதாசிரியர் எவ்வளவு சமத்காரமாகச் சித்தரிக்கிருர்! அன்புக்கு அவள் கொடுத்த பொருள் விலை மதிப்பற்றது தான்; ஆனல் விலை சாட்டுவதற்கு அதைத்தவிர அவளிடம் வேறு என்ன இருக்கிறது?......
>
> இந்தக் கதையை ஹிந்தியிலிருந்து தமிழாக்கித் தருபவர்: 'அசோகன்'

வருவதாகச் சொன்ன நண்பர் எட்டுமணி வரையிலும் வரவில்லை. அதனால் வெறுப் படைந்த சிவம் கண்கூசச் செய்யும் வேட்டுவெளிச்சத்திலிருந்து தப்புவதற்காக, இருட்டில் வந்து அமர்ந்தார். வீட்டுக்குப்போய்த் தான் என்ன செய்வது? போவதானாலும் யார் வீட்டுக்குச் செல்வது? எல்லோரும் வாண வேடிக்கை பார்க்கப் போயிருப்பார்கள். தன்னந்தனியாக இருந்து பொழுதைக் கழிப்பது என்பது அவருக்குப் பிடிக்காத விவகாரம். என்னென்ன விஷயங்கள் எல்லாமோ நினைவுக்கு வந்து அவரது மனப்பாரத்தை அதிகரிக்கச் செய்துவிடும். அந்த விஷயங்களைப்பற்றிச் சிந்திப்பதால்தான் என்ன பயன்?

எதிரே கடலலைகள் கர்ஜித்து எழுந்து மணற்பரப்புவரை மோதி, அதற்குச் 'சூ' காட்டி விட்டுப் பின் வாங்குவதைப் போல் நழுவிக்கொண்டிருந்தன. சில அலைகள் கர்ஜித்தெழுந்து, சமுத்திரத்தின் உயரத்தையே அதிகமாகக் காட்டி, பின்னர் தாழ்ந்து நுரைகளாக மாறி வடிந்து மறைந்தன. சிவம் யோசித்தார்; "இன்பமும் துன்பமும் அலைமோதும் இந்த உலகத்தில் எவ்வளவு தூரத்துக்கு முன்னேறிப் பின்வாங்கிப் போக முடியுமோ அவ்வளவு தூரம் மட்டுமே இந்த அலைகள் முன்னேறுகின்றன. ஆகையால் தான் அவை நிரந்தரமாகவும் இருக்கின்றன."

பழங்கால சம்பவங்கள் பற்றிய நினைவுகள் இதுமாதிரித் தான் தொடங்குகின்றன. அவரது வாழ்வில் ஒரே ஒரு முறைமட்டும் ஆரவார அலை எழுந்து மோதியிருக்கிறது அந்த அலை தன் பரிவாரங்கள் வாழும் சமுத்திரத்தைவிட்டு, மணற்பரப்பில் வெகுதூரம் முன்னேறிவந்து மோதி, பின்னர் திரும்பிப்போக வகையில்லாமல் உலர்ந்து மடிந்துவிட்டது. அவர் வாழ்வில் வந்து மோதிய அந்த அலைக்கு அத்தனை வேகம் இல்லாமல் போய்விட்டது. வேகம் மட்டும் இருந்திருந்தால் மற்றவர்கள் உள்ளங்களிலும் அலையெழுந்து மறையச் செய்து, மீண்டும் எழச் செய்து, ஒரு நியதிப் பிரகாரம் சுழலச்செய்திருக்கும். இவ்வாறெல்லாம் யோசிப்பதால் என்ன பயன்? அவர் மனம் ஏற்கெனவே கிழடுதட்டிப் போய்விட்டது.

பெஞ்சில் யாரோவந்து அமர்வதுபோல் தெரிந்தது. சிவம் கடைக்கண்ணால் கவனித்தார். ஒரு பெண் ஒரு சிறுமியுடன் வந்து அமர்ந்திருந்தாள். அவருக்கு அதைக் கண்டதும் சந்தோஷம் பிறந்தது. ஒரு பெண் அருகில் வந்ததும் புருஷர்களுக்கு இம்மாதிரி ஒரு உணர்வு ஏற்படுகிறது. அவள் கூட வந்த பதினொரு வயதுச் சிறுமி உட்காராமல் நின்றாள். சிவம் ஒன்றும் யோசிக்காமல் தாமே எழுந்து போயிருக்கலாம். ஆனால் அவரோ, "அவள்தான் எழுந்து போகட்டுமே. நான் தானே முதலிலிருந்தே இங்கு உட்கார்ந்திருக்கிறேன்!" என்று மனத்துள் சொல்லிக்கொண்டார்.

அந்தப் பெண் அந்தச் சிறுமியிடம் மெதுவாகப் பேசினாள். என்ன பேசுகிறாள் என்று காது கொடுத்துத் தெரிந்துகொள்ள அவர் முயலவில்லை. ஆனால் அந்

தப் பெண்ணுக்கு இருபத்தாறு வயதுதான் இருக்கும் என்பதை அவரால் கண்டுகொள்ள முடிந்தது. 'சே! ரொம்பவும்மோசமான நிலைமையை உண்டு பண்ணி விட்டாளே. எழுந்துதான் போகக்காணும். பக்கத்திலே பரிசயமில்லாத ஒருத்தி வந்து உட்கார்ந்திருக்கிறுள் என்பதையே மறந்துவிட்டு. இருந்து விடலாம் என்ருல் அதுவும் முடியவில்லையே!' என்று தமக்குள் அங்கலாய்த்துக்கொண்டார். சிவம்.

''என்ன? பேசாமலேதான் இருக்கப் போகிறீர்களா?'' என்ற கேள்வி எழுந்தது. தொனியில்வெட்கமும்மிடுக்கும் கலந்திருந்தன. அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். அவளது பார்வையோ சமுத்திரத்தின் பக்கமாக இருந்தது. வேறு யாரையும் சமீபத்தில் காணவில்லை. எனவே அவர் அவளை நோக்கித் தைரியமாகக் கேட்டார்.

''என்ன, என்னிடம் ஏதாவது சொன்னுயா?''

''உங்களிடம் இல்லையென்னுல் பின்னே வேறு யாரிடம்? இங்கே வேறு யார் இருக்கிருர்கள்?''

அவள் அவர்பக்கமாகத் திரும்பிப் பார்த்துவிட்டுப் புன்னகை புரிந்தாள்.

''என்னபேசுவது? விஷயம் எதுவும் இல்லை. என்னை நீ வேறு யாரோ என்று தவறுதலாக எண்ணிக்கொண்டு, அடையாளம் புரியாமல் பேசுகிருய். எனக்கு உன்னைப்பரிசயம் இல்லை'' என்ருர் சிவம். அவள் அவரது வார்த்தைகளைக் கேட்டுக் கலவரம் அடையவில்லை. அதனுல்தான் அவராலும் அவ்வளவு பேசமுடிந்தது.

''பரிசயமில்லாதவர்களோடு பேசமாட்டீர்களாக்கும்!'' என்று சொல்லிச் சிரித்தாள் அவள்.

''இல்லையே, நான் அப்படிச் சொல்லவில்லையே! பேசுவதற்கு ஒன்றுமில்லை என்றுதான் சொன்னேன்'' என்ருர் சிவம்.

''அப்படியானுல் இந்த இருளில் இப்படித் தனியாக வந்து உட்கார்ந்திருக்கக் காரணம்?'' என்று அன்புததும்பும் குரலில் கேட்டாள் அவள்: ''வியாகூலமடைந்தவர்களும், களைத்துப் போன மனிதர்களும் ராத்திரி வேளையில் இந்தமாதிரி இடங்களில் வந்து அமர்ந்து சம்பாஷித்து மனஆறுதல் அடைவது வழக்கம்!''

சிவத்தால் பதில் எதுவும் சொல்ல இயலவில்லை. ஆனுல் ஏகாந்தச் சூழ்நிலையில் கிடைத்த அந்தப் பெண்ணின் சிநேகத்தை அவர் துர்வழியில் ஆக்கிரமிக்க விரும்பவில்லை. அவள் ஆடையிலிருந்து எழுந்து பரவிய மணம் இனிமையாக இருந்தது. அவளது பேச்சின் மூலமும், அவளது பேச்சைக் கேட்பதற்காகப் பெஞ்சின்மீது சாயும்போது கண்ணில்பட்ட தோற்றத்தின் மூலமும் அவருக்குக்கடந்தகால ஞாபகங்களெல்லாம் நினைவுக்கு வந்தன. அந்தப் பழைய சம்பவம் அவர் மனக்கண் முன்னுல் சித்திரம் போல் காட்சியளித்தது......

அன்று அவர் பகற்பொழுது முழுவதையும் ஆவலுடன் துடிக்கும் இதயத்தோடு கழித்துவிட்டு, கடற்கரை 'காண்

டினில்' காத்திருந்து சாந்தியைச் சந்தித்தார்; அவளை அழைத்துக்கொண்டுசமுத்திரக் கரைக்கு வந்திருந்தார். கடற்கரைக் கும்பலின் மத்தியில், இதுபோன்ற ஒரு இடத்தை—எங்கு அமர்ந்தால் எவர் கண்களிலும் படாமல் இருக்க முடியுமோ அத்தகைய இடத்தைத் தேடி அமர்ந்தார். வீடு திரும்ப வேண்டும் என்று சாந்தி மிகவும் அவசரப்படுத்தியதால் அவர்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. ஒருவரோடு ஒருவர் கைகள் கோத்தவாறு ஒருவர்மேல் ஒருவர் கண்களைப் பதித்தவாறு அமர்ந்திருந்தனர். அந்த ஒரே நாளில் வாழ்க்கையின் இன்பம் முழுவதையும் கண்டு விட்ட மாதிரி இருந்தது அவர்களுக்கு...

''நீங்கள் சிகரெட் பிடிப்பதில்லையா?''

சிவத்தின் காதில் மேற்படி கேள்வி விழுந்ததும் அவரது மனக்கண்முன் காட்சி அளித்த சித்திரம் சிதைவுற்றது. பக்கத்தில் அமர்ந்திருந்த அந்தப் பெண்ணை அவமானப்படுத்த வேண்டும் என்ற உணர்வு பிறந்தது அவருக்கு.

''சிகரெட் குடிக்கும் பெண்ணும் நம்மிடையே இருக்கமுடியுமா?'' என்றார்.

சிறிது நேரத்தில் ''ஏன், நீங்கள் குடிக்கிறீர்களா?'' என்று கேட்டார் அவர். ஆனால் சிகரெட்டை எடுப்பதற்காக, அவர் பையில் கைவிட்டுதுழாவவில்லை.

''இல்லை நான் குடிப்பதில்லை, நீங்கள் குடியுங்கள். சிகரெட் வாசனை இதமாக இருக்கும் ... பக்கத்தில் யாரோ அமர்ந்திருக்கிறார்கள் என்ற நினைவை நிலைக்கச் செய்யும்'' என்று அவள் சிநேகபாவத்தோடு பதிலளித்தாள்.

தாம் சிகரெட் குடிப்பது இன்னொருவருக்கு இதமாக இருக்கும் என்பதைக் கேட்க அவருக்குச் சந்தோஷமாயிருந்தது. ஒரு ஆடவனின் அருகிலிருக்க வேண்டும் என்ற அந்தப் பெண்ணின் அபிலாஷையை அறிந்ததும், அவருக்கு அளவு கடந்த ஆனந்தம் உண்டாயிற்று. அதை மேலும் அதிகமாக்க எண்ணி, ஜேபியிலிருந்து சிகரெட்டை எடுத்தார். ''நீங்களும் குடித்தால் வாசனையுடன் ருசியையும் அனுபவிக்க முடியுமே'' என்றார்.

அவள் பெஞ்சில் சாய்ந்து வந்தனம் தெரிவிக்கும் தோரணையில் புன்னகை புரிந்தவாறு பதிலளித்தாள்: ''இல்லை, நீங்களே குடியுங்கள். நான் குடிப்பதில்லை. இன்னுமொரு கெட்ட பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வதில் என்ன பயன்? குடிக்கத் தொடங்கி விட்டால் அடிக்கடி அந்த நினைப்புத்தான் வரும்!''

அந்தப் பெண்ணின் சமத்காரம் நிறைந்த பேச்சு அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. புத்திசாலித்தனமும் பொறுப்புணர்ச்சியும் பொருந்திய ஒரு பெண்ணுடன் அமர்ந்து சம்பாஷித்தவாறே அவர் சிகரெட் குடிப்பதில் சாந்தியும் சந்துஷ்டியும் அடைந்தார். அத்துடன் அந்தக் குதூகல உணர்ச்சி, வியாகூலத்துடனும் பயத்துடனும் சாந்தியுடன் கழித்த அந்தப் பழைய மாலைப்பொழு

தைப்பற்றிய மனே ஓவியத்துடன் அவரைப் பின்னிப் பிணைப்பதுபோல் தோன்றியது.

''நீங்கள் சொல்வது சரிதான்'' என்று பதிலளித்து விட்டு, பின்னர் கேட்டார்: ''நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள்? இந்தப் பிரதேசம் முழுமையும் தங்களுக்குப் பழக்கம்தானே?''

''ஆமாம். கிராண்ட் ரோட் பாலத்துக் கருகில்!'' என்றாள் அந்தப் பெண்.

''உங்கள் வீட்டில் வேறு ஆட்களும் இருப்பார்கள், இல்லையா?''

''ஆம்.இருக்கிறார்கள்.''சமுத்திரத்தை நோக்கியவாறு அவள் பதிலளித்தாள்: ''வீட்டில் எல்லோரும்தான் இருக்கிறார்கள்.''

''அப்படியானால் இந்த இரவு நேரத்தில் எப்படி தன்னந் தனியாக வந்தீர்கள்?''

''தனியாக வர நேர்ந்தால், தனியாகத்தானே வரவேண்டும்? வேறு என்னசெய்வது? உட்கார்ந்து உட்கார்ந்து உள்ளேயே எப்படித்தான் காலத்தைக் கழிப்பது?''

ஈரமே மணலில் கண்பதித்து கால் செருப்புகளால் மணலைக் கிளறியவாறு அவள்பதிலளித்தாள்.

பம்பாயில் மில்லில் வேலை செய்யும் பெண்களைப்பற்றி அவர் எவ்வளவோ விஷயங்கள் கேள்விப்பட்டிருக்கிறார். எனவே சிகரெட் புகையை உறிஞ்சியவாறே அவர் யோசித்தார். நிலைமையின் தன்மையை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

''இங்கே உட்கார்ந்து என்ன செய்யப்போகிறீர்கள்? சற்று உலாவப் போய்விட்டு வரலாமே!'' என்றாள் அவள்.

''எங்கே? வாணவேடிக்கை பார்க்கவா?'' என்று கூறியவாறேகிளம்பத் தயாரானார் அவர்.

''வாண வேடிக்கையில் என்ன இருக்கிறது?''

அவள் ஏதோ ஒரு முடிவுடன் வந்திருப்பவளாகவே தோற்றினாள். அதை வெளிப்படுத்தும் முறையில் பேசவும் பேசினாள்: ''கிளம்புங்கள். உங்கள் வீட்டில் இடமிருந்தால் அங்கே போவோம். இல்லையென்றால் என் வீட்டுக்கு வாருங்கள்!''

அவள்சுலபமாகத் தன் நோக்கத்தைத் தெரிவித்து விட்டாள்.

வாயருகே சிகரெட்டைக் கொண்டுபோன சிவத்தின் கரம் தாழ்ந்தது. இருபது வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் அவரது நினைவுக்கு வந்தது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயன்ற முயற்சியும் வீணாயிற்று. அவர் கண்களில் முன்னால் அந்தச் சம்பவம் பளிச்சிட்டது. குழப்பத்திலும் வியாகூலத்திலும் செய்யத் துணிந்த ஒரு அசட்டுத் தனமான காரியம் அது! சாந்தியும் அவரும் விவாகம் செய்துகொள்வதற்கு அவரது தந்தை இடையூறாக இருந்து வந்தார். எனவே அவர் தம் வீட்டை விட்டு வெளியேறி தனியறை ஒன்றை வாடகைக்கு எடுத்து அதில் வசித்து வந்தார். ஒரு நாள் அவரது அறிவு காதல் பிரவாகத்தில் ஆழ்ந்தமிழ்ந்து விடவே அவர் சாந்தியைத் தமது அறைக்குக் கூட்டிப் போனார். சகலத்தையும் மறந்து இன்பலாஹிரியில்பொழுதைக் கழித்த அவர்களுக்கு கடியாரத்தின்

மீது கவனம் செல்லாததில் வியப்பில்லை. நடுச்சாமத்துக்கு அப்புறம்தான் நேரம், காலம் பற்றிய உணர்வே அவர்களுக்கு வந்தது. "அட, இப்போ என்ன செய்வது?" என்று சாந்தி நடுங்கினாள். பயத்தால் வெளிறிய அவள் முகத்தைப்பார்த்த சிவம் சொன்னார்: "என்னவோ நடந்தது நடந்தாயிற்று. இனி நீ வீட்டிற்குப் போக வேண்டாம். இன்று முதல் நாம் இருவரும் ஒருவர்." வரும் விளைவுகள் எல்லாவற்றையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தார் அவர். "இல்லை. அதெப்படி முடியும்?" என்றாள் சாந்தி. அவர் வேண்டுகோளுக்கு சாந்தி இணங்கவே இல்லை.

சிவம் சாந்தியை அவள் வீடுவரையிலும் கொண்டுவிட்டு விட்டு வரப்போனார். வெட்டக் கொண்டுபோன ஆடு போல் சாந்தி நடந்தாள். பின்னால் தங்கி விடவும் அவளுக்கு மனமில்லை. தெருவின் முனைக்கு வந்ததும் தாம் திரும்பிப் போவதாக அவர் சொன்னபோது அவள் கடைசி முறையாகப் பார்த்த அந்தப் பார்வை—!

பின்னர் என்ன நடந்தது? எல்லாம் அனுமானத்தின் மூலம் அறிந்த விஷயம்தான். ஒருநாள் பொழுது பூராவையும் ஒரு கணம் ஒரு யுகமாகக் கழித்து விட்டு, அவர் சாந்தி வசித்து வந்த பிராந்தியத்துக்குப் போனார். ராத்திரி இருளில் நாலாவது மாடியிலிருந்து கீழே தவறி விழுந்ததன் காரணமாக அவள் இறந்து விட்டாள் என்ற செய்தியைக் கேட்டறிந்தார். அவளது பாடையைச் சிலர் தூக்கிக்

நன்றி

தமிழர்தம் பெருநாளாகிய பொங்கல் தினத்தன்று பொங்கல் வாழ்த்து அனுப்பிய சகல நேயர்களுக்கும் ஏஜண்டுகளுக்கும் எமது மனமார்ந்த நன்றி

ஆசிரியர், 'சாந்தி'

கொண்டு போனார்கள்......

தன் பிதாவின் அநியாயமான விரோதத்தின் காரணமாக ஏற்பட்ட அந்த இரவின் தவற்றுக்குப் பிராயச்சித்தமாக, அவர் தம் வாழ்க்கையை விரக்தியுடன் கழித்து வந்தார். இருபது வருஷங்கள் என்ற நீண்ட நெடுங்காலம்கூட, அந்த நினைவை மழுங்கடிக்கவில்லை.

எனவே நாகரிகமும் புத்திசாலித்தனமும்நிறைந்தவளாகத் தோற்றும் ஒருத்தியுடன் இரவில் அவள் வீட்டுக்குப் போகலாம் என்பதை அறிந்ததும் அவர் மனம் சிறிதே கலவரமடைந்தது.

"உங்கள் வீட்டிற்கா?" என்றார் அவர்.

"ஆமாம். அங்கு உங்களுக்கு ஒரு தொந்தரவும் இருக்காது" என்று அவரை ஆசுவாசப்படுத்தும் வகையில் சொன்னாள் அவள்: "இங்கே பெஞ்சில் அமர்ந்திருக்கிறீர்கள். அங்கே இதைவிடச் சௌகரியமாயிருக்கும். கட்டில் மெத்தை எல்லாம் உண்டு. இரவு முழுவதும் அங்கேயே தங்கலாம்."

அவளது அத்தகைய அன்பிற்குப் பின்னால் ஏதேனும் ஏமாற்று வலை விரிக்கப்பட்

டிருக்குமோ என்ற எண்ணம் எழுந்தது. அவருக்கு. அந்த வலேயில் விழாமல் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துடன் அவர் கேட்டார்: ''என் சுக சௌகரியம் பற்றியெல்லாம் உங்களுக்கு ஏன் இவ்வளவு கவலே? அதனால் உங்களுக்கு என்ன லாபம்?''

''லாபம் என்னவா?'' அந்தப் பெண் நாணத்தோடு பதிலளித்தாள்: ''தாங்கள் போகும் போது நாலேந்து ரூபாயாவது கொடுக்கமாட்டீர்களா?''

'வேசைதானு இவள்?' மனச் சோர்வடைந்துவிட்டார் அவர். ஏமாற்று வேலே எதுவும் நடைபெருது என்பதை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது அவருக்கு. எனவே தடைபடும் குரலில் கேட்டார்:

''நீங்கள்—உங்கள் வீட்டில் இன்னும் பலர் இருப்பதாகக் கூறினீர்களே. அவர்கள் தடை எதுவும் சொல்ல மாட்டார்களா?''

''தடை சொல்பவர்கள் வருத்தப்பட்டுப் பயன் என்ன? என் கணவர் வீட்டில் சண்டை பிடித்துக்கொண்டு, என்னேயும் அழைத்துக்கொண்டு, இங்கு வேலே தேடி வந்தார். இங்கு என் சகோதரி வீட்டில் தங்கினேம். அவர்கள் ஐந்து வருஷமாக இங்குதான் இருக்கிருர்கள். என் கணவர் மூன்று மாத காலம் சுற்றியலேந்தும் ஒரு வேலேயும் கிடைக்காததால் ஊருக்குத் திரும்பிப் போய்விட்டார். அங்கிருந்து எனக்கு வாடகைப் பணம் அனுப்புவதோடு என்னே மறந்து விட்டார். என் சகோதரி புருஷன் நாலு வருஷமாக வேலே தேடுகிருர். அவருக்கும் கிடைக்கவில்லே. என்ன செய்வது என்று தெரியாமல், மூன்று நாள் பட்டினியோடு வீடு திரும்பிவந்தார். பின்னர் புறப்பட்டுச் சென்றவரை இன்று வரையிலும் திரும்பக்காணேம். இந்தச் சிறுமியைத் தவிர, என் தமக்கைக்கு இன்னும் இரண்டு குழந்தைகள். நாங்கள் என்னதான் செய்வது? எங்கள் உடலேத் தவிர, எங்களிடம் வேறு என்ன இருக்கிறது?''

சிவத்தால் பதில் எதுவும் சொல்ல முடியவில்லே. அவர் எழுந்து நடந்தார். இவளே நாம் வேசி என்று எண்ணினேமே என்று அவர் மனம் குழம்பியது. வயிற்றுக்கு உணவு வாங்கிக் கொடுக்க அவளிடம் காசில்லே. ஆனால் அன்பிற்குக் காணிக்கையாக அவள் கொடுக்கும் விலேயோ—? ★

சந்தா விபரம்

தனிப் பிரதி ரூ. 0–6–0

ஆறுமாதச்சந்தா ரூ. 2–4–0

ஆண்டுச் சந்தா ரூ. 4–8–0

○

ஆறுமாதத்திற்குக்குறைந்த சந்தா கிடையாது.

சந்தாதாரர்களுக்குத் தபால் செலவு இனம்.

○

நிர்வாகி, ''சாந்தி''
81, ஹைரோடு,
திருநெல்வேலி ஜங்ஷன்.

சென்னையிலே சீனம் கண்டோம்!

○

"எஸ். ஆர்."

○

சீனு என்றால்—

சின்ன வயதிலே நாம் சுட்டுத் தள்ளிய சீனப்பட்டாசுகள், நமது நாட்டில் மூட்டை தூக்கிகளாக வந்து, சீனர்கள் விற்று வந்த சீனத்துச் சல்லாப் பட்டு, எங்கோ எப்போதோ சர்க்கஸ் காட்சியில் கண்ட சீன நாட்டினரின் பெயர்பெற்ற கைக்கரண ஜாலவித்தைகள், 'அபினிவாலாக்களின் தேசம்' என்று பள்ளியாசிரியர்கள் கற்றுத் தந்த பழம் பாடம், 'ஆசியாவின் நோயாளி' என்று அரசியல் வாதிகள் சீன நாட்டுக்கு அளித்த இடுகுறிப் பெயர் —இவை போல்வனதான் நமக்கு ஞாபகம் வருவது வழக்கம்.

நமது அண்டை நாடான, அகில உலகத்திலும் ஏராளமான மக்கள் தொகுதியைக் கொண்ட மாபெரும் நாடான சீனாவைப் பற்றி நாம் நன்கு அறிந்துகொள்ளாமல் போனதற்குக் காரணம் என்ன? நம்மை ஆண்டு வந்த வெள்ளையர்கள் ஆசிய நாடுகளுக்கிடையே ஒற்றுமையும் நல்லுறவும் ஏற்படாவண்ணம் அந்த நாடுகளுக்கிடையே பல்வேறு 'இரும்புத்திரை'களை இட்டிருந்தார்கள். எனவே நமது நாட்டு மக்கள் தமது சகோதர நாடுகளின், நாட்டு மக்களின் கலாசார மேம்பாட்டையோ, இலக்கிய சாதனைகளையோ, இதயத்தையோ நன்கு உணரமுடியாது போயிற்று. ஆனல் அந்தத் திரைகள் இன்று கிழிந்து போய்விட்டன. இமயத்தின் கொடுமுடியையும் தாண்டி இந்தியாவும் சீனவும் கைகள் கோக்கின்றன; இரு நாட்டு இதயங்களும் சகோதர வாஞ்சையோடு சங்கமமாகத் தொடங்குகின்றன. ஆசிய நாடுகளுக்கிடையே உள்ள நல்லுறவும் நேச பாசமும் மேலும் மேலும் வலுப்பெறத் தொடங்குகின்றன.

இந்த உண்மையைத்தான் சமீபத்தில் நமது நாட்டுக்கு, நமது தமிழ் நாட்டின் தலை நகரமான சென்னைக்கு விஜயம் செய்த சீனக் கலைஞர்களின் வருகை

> புத்தாண்டு பிறக்கவிருந்த புனித வேளையில் சென்னைக்குச் சீனக்கலைஞர்கள் வருகை புரிந்து தமது கலா நிகழ்ச்சிகளை அரங்கேற்றிக் காட்டினர்கள். புத்தாண்டு உதயமாயிற்று. நமது நெஞ்சிலும் அவர்களின் வருகை புதிய ஒளியை ஏற்றிவைத்தது. பண்டுதொட்டு சீன நாட்டுக்கும் நமக்குமுள்ள பரம்பரைத் தொடர்பைப் புதிப்பித்துக்கொள்ளவும், வலுப்படுத்திக் கொள்ளவும் வேண்டிய உணர்வையும் அவசியத்தையும் நம் இதயத்தில் உருவேற்றியது.
>
> சீனக்கலைஞர்களின் கலா நிகழ்ச்சியை நேரில் கண்டுவந்த நமது நிருபர்தரும் விவரங்களே இந்தக் கட்டுரை.



சீனக் கலைஞர்களுக்கு சென்னையில் வரவேற்பு

நமக்கு எடுத்துக் காட்டியது; சீன மக்களின் புராதனமான கலா சிருஷ்டிகளையும் கலாசார வளர்ச்சியையும் நம்முன் நிதர்சனமாகச் சித்தரித்துக் காட்டியது; அது மட்டுமல்ல, மேல் நாட்டுக் கலை என்ற பெயரால் அரங்கேறி வரும் ஆபாசங்களையே சினிமாவிலும் நேரிலும் கண்டு கண்வலி எடுத்துவிட்ட ரசிகர்களுக்கு இந்த விஜயம் ஒரு நல்விருந்தாகவும், அலுத்துச் சாம்பிப்போன மனத்திற்கோர் அரு மருந்தாகவும் விளங்கியது.

அன்று திருவல்லிக்கேணி கலா மண்டபம் விசேஷ சிரத்தையுடன் அலங்காரம் செய்யப்பட்டுக் கண் கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தது. வானத்து நட்சத்திரக் கூட்டமெல்லாம் சீனக் கலைஞர்களின் விஜயத்தைக் காண இறங்கி வந்துவிட்டனபோல் அந்தர வெளியெங்கிலும் விளக்குகள் சுடர்விட்டன; சுற்றுமுற்றும் நின்ற மரங்களில் கூட விளக்குகள் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தன; எங்கு பார்த்தாலும் விளக்குகள்; விளக்குகள்! அந்த ஒளிப் பிரவாகத்தினூடே நடுநாயகமாக விளங்கிய கலா மண்டபத்தின் மீது சீனக் கலைஞர்களின் அரிய புராதன நாட்டியக் கலைகள் பலவும் அரங்கேறின. அந்தக் கலா நிகழ்ச்சிகளைச் செய்து காட்டி, சீனக்கலைஞர்கள் சென்னை ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களையும் பெற்றார்கள்; சென்னை ரசிகர்கள் உவந்தளித்த பரிசுகளைப் பெற்றார்கள்; போகும்பொழுது அவர்கள் மனத்தையும் கொள்ளை கொண்டு போய்விட்டார்கள்!

"அருணன் உதித்தனன்!
அம்புஜம் விண்டது!"

முதன் முதலில் தாமரை நடனம் நடைபெற்றது.

திரை உயர்ந்ததும் மெல்லிய நீலத் திரையின் பின்னணியிலே பனிபோன்ற தூய வெண்ணிற உடை உடுத்திய சீனத்துச் சிங்காரிகள் தாமரையின் நடுவே நின்றவாறே வந்தார்கள். இல்லை—நீர்மேல் தோணி செல்வதுபோல் ஒழுகி வந்தார்கள். "என்ன இது? கால்கள் அசையவே இல்லையே. மந்திர ஜாலமோ?" என்று ரசிகர்கள் வியந்தார்கள். ஆமாம், கால்களுக்குச் சற்றும் அசைவே இல்லை! — அதாவது கால்களின் அசைவு வெளியே தெரியாவண்ணம் அவர்களின் பாதத்தைச் சுற்றி ஒரு வளையம் இருந்தது. அந்த வளையம் அவர்களது அசைவுக்கேற்றவாறு அவர்கள் கூடவே மிதந்து சென்று, கால்களின் இயக்கத்தைத் திரையிட்டு மறைத்து, மிதந்து வருவது போன்ற ஒரு பிரமையைச் சிருஷ்டித்தது. எனவே அந்தத் "தாமரை மலர்கள்" தமது கால்கள் அசையாமலே ஒயிலாகச் சுற்றிச் சுற்றி வந்து உல்லாச நடனம் ஆடின. கால்களில் சக்கரங்கள் இணைத்திருப்பதுபோல் அவர்கள்சுற்றிச் சுழன்ற காட்சி ரசிகர்தம் மனத்தை விட்டு என்றும் அகலாது.

"ஒபேரா" நடனம்.

சீனதேசம் ஒபேரா (OPERA) என்னும் கதாசங்கீத நாட்டியக் கலையில் மிகவும் பிரசித்தம் வாய்ந்தது. அன்றைய நிகழ்ச்சிகளில் பல நூற்றுண்டுகளாகப் பயின்று பழகி மெருகேறிய ஒபேராக்களின் சில பகுதிகள் நடித்துக் காட்டப்பட்டன. இந்த ஒபேராக்களின் பேசும் முறையும் அபிநயமும் நம் நாட்டுக் "கதகளி" யை ஒத்திருந்தது.

நோய்வாய்ப் பட்டிருக்கும் தன் கணவனுக்காக ஒரு பெண் மூலிகை பறிக்கச் செல்கிருள். பல வீரர்கள் சேர்ந்து அவளை விரட்ட முனைகிருர்கள். அந்தப் பெண்ணே அத்தனை பேரையும் எதிர்த்துச்சமாளிக்கிருள். இந்தப் பெண்ணின் அதிசயத்தக்க வீர உணர்ச்சியைக் கண்டு அவர்கள் தலை வணங்கி மூலிகையைக் கொடுத்தனுப்புகிருர்கன்.

இக்கதையை நாட்டியமாக ஆடிக்காட்டினுர்கள்.

மூலிகை பறிக்க வந்த பெண்ணை விரட்டுவதற்காக ஒரு வீரன் தன் கையிலிருந்த சிறு கழியை அவள்மேல் விட்டெறிகிருன். பெண் சுற்றிச் சுழன்று வருகையிலேயே அதைக்காலால் தட்டுகிருள். கழி விண்ணென்று தெறித்து, கழியை எறிந்த வீரன் கைக்கே திரும்பச் செல்கிறது. பின்னுல், இரண்டு பேர்கள் கழியை வீசுகிருர்கள். அதையும் அப்பெண் காலால் தட்டி வந்த இடத்திற்கே அனுப்புகிருள். இதுவே பெரிய ஆச்சரியத்தைஉண்டு பண்ணிற்று. ஆனுல்போகப்போக அப்பெண் தன்னைத் தாக்குவதற்காக ஏழெட்டு வீரர்கள் விட்டெறியும் கழிகளையும் திரணமாக மதித்து நாட்டியரீதியில் வலதுகாலாலும் இடதுகாலாலும் மாற்றி மாற்றித்தட்டுவதையும், வீரர்கள் அதை பிடித்துக்கொண்டு மீண்டும் எறிவதை

யும் கண்டு ரசிகர்கள் கல்லாய்ச் சமைந்தார்கள்.

"பட்டுப் பூச்சியை எட்டிப் பிடித்தல்"

மற்ருெரு சிறு நடனம். சில பெண்கள் தேயிலைப் பறிக்கப் போகிருர்கள். வீடு திரும்பும் வேளையில் ஒரு பெரிய பட்டுப்பூச்சியைப் பார்க்கிருர்கள். அதைப் பிடிக்க முயலுகிருர்கள். பட்டுப் பூச்சியோ அவர்கள் மனத்தை கொள்ளைகொண்டுவிட்டு, கைக்குள் சிக்காமல் சுற்றிச் சுற்றி வந்து அத்தனை பெண்களையும் திணற அடிக்கிறது. இதில், காகிதத்தால் செய்த பட்டுப் பூச்சியொன்றை வளைந்து துவளும் கொடி போன்ற நீண்ட கழியோரத்தில் இணைத்துக்கொண்டு, நாட்டியக்காரனொருவன் தோன்றுகிருன். சிறகின் சிறு சலனத்துடன் பட்டுப் பூச்சி ஓர் இடத்தில் அமருவதும் ஒரு பெண் பம்மிப் பதுங்கி வந்து பிடிப்பதற்காக கை நீட்டுகிறபொழுது, விண்ணென்று மேலே பறப்பதும் எவ்வளவு அழகாக இருந்தது! ரசிகர்களின் மனமும் அந்தப் பட்டுப் பூச்சியுடன் இணைந்து மேலே சென்றது. இப்படி ஒவ்வொரு பெண்ணும் பட்டுப் பூச்சியைப் பிடிக்கமுயன்று தோல்வியுறுகிருள். பட்டுப் பூச்சியை இணைத்திருக்கும் கழியைப் பிடித்துக்கொண்டிருக்கிற நாட்டியக்காரனின் கை எவ்வளவு அருமையான சாதனைகளை செய்து காட்டியது! கடைசியில், பட்டுப் பூச்சி உள்ளே சென்று மறைந்ததும் 'என் தான் பட்டுப் பூச்சி உள்ளே சென்றதோ' என்று எண்ணம் ஓடியது. அந்தப்பட்டுப் பூச்சிக்காரனை கரகரவென்று இழுத்துக்கொண்டு வந்து மீண்டும் அந்தப் பெண்கள்முன் விடுவோமா என்றே தோன்றிற்று!

"தாத்தாவும் பேத்தியும்"

'தாத்தாவும் பேத்தியும்' என்ற நிகழ்ச்சிதான் ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தது. ஒரு சிறுபெண் தனது தாத்தாவின் முதுகில் சவாரிசெய்து கொண்டு பட்டணம் பார்க்கக் கிளம்புவதைச் சித்தரிக்கும் நிகழ்ச்சி இது. இந்த நிகழ்ச்சியில் தாத்தாவும் பேத்தியுமாக ஒரே ஒரு பெண்தான் மேடைக்கு வந்தாள். நமது நாட்டிலுள்ள 'பொய்க்கால் குதிரை' ஆட்டத்தின் கலை நுணுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது தான், இந்தக் கலா சிருஷ்டி. எனினும், அந்த நுணுக்கத்தை ரசிகர்கள் அவ்வளவு லகுவில் அறிந்து கொள்ள இயலவில்லை. அந்தப்பெண் தனது வயிற்றேடு தாத்தாவின் கூன்விழுந்த உடம்பு போன்ற பொம்மை ஒன்றைச் சேர்த்துக் கட்டியிருந்தாள். முதுகுப்புறத்தில் குழந்தையின் சிறிய கால்களின் பொம்மை உருவம்; அந்தக்கால்கள் தாத்தாவின் கைகளின் ஆதாரத்தில் நின்றன. பெண்ணின் மேல்உடம்போடு குழந்தையின் கால்களையும், தாத்தாவின் பொம்மை உடம்போடு பெண்ணின் கால்களையும் இணைத்துப் பார்க்கும்போது, கூன்விழுந்து தள்ளாடிப்போன தன் தாத்தாவின் முதுகில் அவருடைய பேத்திக் குழந்தை

'குதிரையேறி'க் கொண்டு உட்கார்ந்திருப்பது போன்ற பிரமையே ஏற்பட்டது.

இந்த நிகழ்ச்சியை செய்து காட்டிய பெண் தன்னுடைய பயிற்சித்திறமையினால் நம் கண்களை ஏமாற்றுகிறாள். தாத்தா தள்ளாடித் தள்ளாடி நடப்பதும், அடிக்கொருதரம் முதுகிலிருந்து நழுவும் குழந்தையைத் தூக்கித் தூக்கி வைத்துக் கொள்வது போல் காட்டுவதும், தத்ரூபமாக இருந்தது. என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒருவர் கடைசி நிமிஷம் வரை உயிருள்ள கிழவரின் முதுகில் தான் ஒரு குழந்தை உட்கார்ந்து கொண்டிருக்கிறதென்று வாதாடிக்கொண்டிருந்தார்.

கடைசியில் திரை விழுந்ததும் அந்த அபாரமான சாதனையைச் செய்து காட்டிய பெண், தாத்தாவின் பொம்மை உருவத்தையும் குழந்தையின் சின்னஞ்சிறு கால்களையும் கைகளில் வைத்துக் கொண்டு, சபையோரின் முன் வந்து வணக்கம் செலுத்திய பொழுதுதான் பலருக்குச் சந்தேகம் நிவர்த்தியாயிற்று!

இருட்டில் நடந்த யுத்தம்!

அடுத்தபடியாக, இரண்டுவீரர்களுக்குள் ஏற்படும் போரின் பகுதி நடித்துக் காட்டப்பட்டது. இந்த இரு வீரர்களும் இருட்டில் ஒருவரை யொருவர் சந்தித்துப் போர்புரிவதாகக் கதை. ஆனால், உண்மையிலேயே இருட்டில் சண்டையிட்டால், பார்க்கிறவர்கள் வீரர்களைப் பார்க்க முடியுமா? எனவே அவர்கள் இருட்டில் சண்டையிடுவது போன்ற ஒரு பிரமைச் சூழ்நிலையைச் சிருஷ்டித்து, நல்ல வெளிச்சத்திலேயே சண்டையிட்டார்கள். அவர்கள் சண்டை போடும் முறையிலிருந்தே ரசிகர்கள் வெளிச்சத்தை மறந்து, "இருட்டில் நடந்த" அந்த வாட்போரை ரசிக்கத் தொடங்கிவிட்டார்கள். இந்த வீரர்கள் கரணம் போட்டுக் கரணம் போட்டுச் சண்டை செய்தார்கள். ஒவ்வொரு முறையும் கரணம் போட்டுக் கொண்டே மேடைக்கு வந்தார்கள். அவர்கள் கரணம் போட்டுக்கொண்டு முன்னால் வருவதைப் பார்த்ததும், அன்றைய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த மைசூர் ராஜப் பிரமுகரின் மடியிலே வந்து குதித்து விடுவார்களோ என்று எண்ணினேன். நல்ல வேளையாக அப்படியொன்றும்நேரவில்லை. அன்று அவர்கள் போட்ட கரணவித்தைகளைக் கண்டிருந்தால் 'கரணம்' போடுபவர்களில் ஈடு இணையற்ற நமது இந்திய நாட்டின் அரசியல் தலைவர்கள்கூட வெட்கித் தலை குனிந்திருப்பார்கள்!

"புள்ளினம் ஆர்த்தன!"

இந் நாடக நிகழ்ச்சிகளும் இடை இடையே சங்கீத நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அதில் முக்கியமாக குறிப்பிடவேண்டியது ஒரு நாட்டுப்பாடல்.

வஸந்தகாலம் மலர்ந்து விட்டது. பல்வேறு பறவைகள் சப்த ஜாலங்களை எழுப்பி வஸந்த

காலத்தை வரவேற்கின்றன. இப்பொருள் கொண்ட நாட்டுப்பாடல் ஒன்று வாசிக்கப்பட்டது. பாட்டின் இடையே சகலவிதமான பட்சிகளின் குரல்களையும் வாசித்துக்காட்டி பிரமிக்கச் செய்தார்கள், வாத்தியக்காரர்கள். பட்சிகள்கூட இதைக்கேட்டிருந்தால் கட்டாயம் ஏமாந்து போயிருக்கும். வேய்ங்குழல் ஊதி, கண்ணன் பசுக்களை வரவழைப்பான் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த நிகழ்ச்சி மட்டும் பகல் வேளையில் நடந்திருக்குமென்றால் சென்னையிலுள்ள சகல பட்சிவகைகளும் கலாமண்டபத்தில் கூடியிருக்கும் அந்தச் சங்கீத வித்துவான் சீனாவுக்கு திரும்புகிற பொழுது கூடவே சென்றாலும் சென்றிருக்கும்.

பொதுவாக, சீன தேசத்துப் புராதன சங்கீதம் ரசிகர்களைக் கவர்ந்தது என்று சொல்ல முடியாது. சீனப் புராதன சங்கீதத்துக்கு மேல் நாட்டுச் சங்கீதத்தின் சாயை இருக்கிறது என்றே சொல்ல வேண்டும். எனினும் நாட்டுப் பாடல்கள் பலவும் ரசிக்கத்தக்க முறையில் இருந்தன.

சுருக்கமாகச் சொன்னால், சீனக் கலைக் கோஷ்டியாரின் நிகழ்ச்சிகளைப்பார்த்தவர்களுக்கு வெளி நாட்டிலிருந்து வந்த கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளைப் பார்ப்பது போன்ற வேற்றுமை ஏற்படவே இல்லை. நமது கலையின் ஒரு புராதனப் பிரிவைப் போலவே எண்ணி ரசிகர்கள் இவற்றைக்கண்டு களித்தார்கள்.

கலாமண்டபத்தில் அன்று கூடியிருந்த ரசிகர்கள் பொழுது போக்கிற்காகவோ, வெறும் கலை ஆனந்தத்திற்கு மட்டுமாகவோ டிக்கெட்டு வாங்கி உள்ளே நுழைந்தவர்களல்ல. சீன மக்களிடத்தில் தங்களுக்கு வளர்ந்து வரும் நட்புறவைக் காட்டுகிற முறையில், அவர்களைக் கௌரவித்து வணக்கம் செலுத்துவதற்காகவேகூடினார்கள் என்றுதான் எண்ண முடிந்தது. நிகழ்ச்சி முடிவுற்றதும், 'இவர்களும் நாம்வர்கள் தானே' என்ற எண்ணம் தான் மேலோங்கி நின்றது. சீனக்கலைக் கோஷ்டியின் இந்திய விஜயத்தின் மிகவும் வெற்றிகரமான அம்சம் இது.

சீனக்கலை நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் லளிதபாவங்களை விட உடல் அப்பியாசமும், அரிய பயிற்சித்திறமையுமே மேலிட்டு நிற்கிறது. அவர்களுடைய கலை நிகழ்ச்சிகளில், அவர்கள் தேர்ந்தெடுக்கும் கதையம்சங்களில், ஒரு எளிமை இருக்கிறது; எந்தவிதமான சிக்கலும் இல்லை.

மற்றொரு முக்கியமான விஷயம். மேல் நாட்டு நாட்டிய அரங்குகளில் நாம் காணும் "துணிப்பஞ்சம்" இவர்களிடம் இல்லை. மனோவிகார காமவக்கரிப்புகள் இல்லை. கீழ்த்தரமான எண்ணங்களைத் தூண்டும் காமக்கலை விவகாரங்கள் எதுவும் இல்லை. இது ரசிகர்கள் மட்டுமல்ல, சென்னை சினிமாக் கலைஞர்கள், முக்கியமாக நடிகைகள், டைரெக்டர்கள் முதலியோர் கவனிக்கவேண்டிய விஷயம்.

இந்தியாவிற்கு விஜயம் செய்த சீனக் கலாநிகழ்ச்சி சீனவின் தொன்மையான கலாசார பாரம் பரியத்தை நாம் உணர்ந்து கொள்ளுவதற்குரியசாளரமாகப் பயன் பட்டது. அத்துடன் நமது தொன்மையான பழங்கலைகளை நாம்எவ்வாறு போற்றி வளர்க்க வேண்டும் என்பதையும், இன்று அவை நசித்துக்கொண்டு வருகின்ற நிலைமையைப் பற்றிய உணர்வையும் நமக்குக் கற்றுக் கொடுத்தது.

சீனக் கலைஞர்கள் இந்திய நாட்டில் சென்றவிடமெல்லாம் ஒரு செய்தியைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள்:

" இந்தி—சீனி—பாயி பாயி! "

ஆம், இந்தியரும் சீனரும் 'பாயி' கள் தான், சகோதரர்கள் தாம்! இல்லையா? ★

●

எது காரணம்?

மதுவிலக்கை ஆதரித்துப் பேசும் ஒரு பிரசங்கி குடியின் கேடுகளை விளக்கியதோடு, குடிப் பழக்கத்துக்கு ஆளாகாதிருந்த காரணத்தால், தாம் எவ்வாறு வாழ்க்கையில் முன்னேற முடிந்தது என்பதைப் பின்வருமாறு எடுத்துக் கூறினர்:

"எங்கள் காரியாலயத்தில் எனது பகுதியில் இப்போது நான் தான் தலைமை அதிகாரி. இரண்டு வருஷங்களுக்கு முன்னர் அதே பகுதியில் என்னிலும் மேலான பதவியில் இரண்டு பேர் இருந்தார்கள். ஆனல் அவர்களில் ஒருவர் குடிப் பழக்கத்தின் காரணமாக, வேலையை விட்டு நீக்கப்பட்டார். இன்னெருவர் குடித்துவிட்டுக் கலாட்டா செய்த காரணத்தால் சிறைத் தண்டனை பெற்ருர். இவர்களுக்கு இந்தக் கதி நேர்வதற்குக் காரணம் என்ன? அமிதக் குடிப் பழக்கம் தானே! இப்போது நான் உங்களைக் கேட்கிறேன் நான் பதவி உயர்வு பெற்றதற்குக் காரணம் என்ன?"

கூட்டத்திலிருந்து ஒருவன் பதிலளித்தான்: "குடிதான் காரணம்! அவர்கள் இருவரும் குடித்துப் பழகியிராவிட்டால், உங்களுக்குப் பதவி உயர்வு எப்படிக் கிட்டும்?"

●

யார் சோம்பேறி?

சோம்பேறி! பிச்சைக்காரன் மாத்திரம்தான சோம்பேறி? பணம் வைத்துக்கொண்டு வயிறு நிறையத் தின்று யாதொரு தொழிலும் செய்யாமல் தூங்குவோரை நாம் சீர்திருத்திவிட்டு, அதன் பிறகு ஏழைச் சோம்பேறிகளைச் சீர்திருத்தப் போவது விசேஷம்.

— பாரதி

மருதுபாண்டியர்

●

ரகுநாதன்

●

'சாந்தி'யின் முதல் இதழில் நீங்கள் ''கட்டபொம்முதுரை கதை''யைப்பற்றிப் படித்திருப்பீர்கள். நாடு பிடிக்க வந்த வெள்ளையரை எதிர்த்து விடுதலை முழக்கம் ஆர்த்த பெருவீரன் கட்டபொம்மு. அந்த வீரத் தமிழனை 1799-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் தேதியன்று தூக்குக்கயிற்றில் தொங்கவிட்டுக் கொன்றனர் வெள்ளை வெறியர்கள். அத்துடன் கட்டபொம்முவின் தம்பி ஊமைத்துரை முதலிய வீரர்களைப் பாளையங்கோட்டைச் சிறையில் விலங்கிட்டுப் பூட்டினர், பரங்கியர்கள். 18-ம் நூற்றாண்டு பிறப்பதற்குள்ளாகவே, வெள்ளையர்கள் நமது நாட்டைப் பரிபூரணமாக அடிமைகொண்டு விட்டதாக மனப்பால் குடித்தார்கள். கட்டபொம்முவின் வீழ்ச்சியோடு தமது ஆதிபத்தியம் இந்திய நாடெங்கிலும் எந்தவித எதிர்ப்புமின்றி நிலைத்து விட்டது என்று கருதினார்கள். எனவேதான் கட்டபொம்முவைத் தூக்கேற்றிக் கொன்ற காதகனான மேஜர் பானர்மன் தென்னாட்டில் '' கலகக்காரர்கள் '' யாவரும் ஒழிந்து, '' அமைதி '' நிலவிவிட்டதாகப் பெருமிதம் கொண்டான். அந்தப் பெருமிதத்தின் போதையோடு, அவன் தன் தாய் நாடான ஐரோப்பாவுக்கு ''வெற்றி வீரனாக''த் திரும்பிச் சென்றான். ஆனால் 19-ம் நூற்றாண்டின் தொடக்க காலமே வெள்ளையரின் பகற்கனவைச் சிதறவடித்தது!

பாளையங்கோட்டைச் சிறையில் அடைபட்டுக் கிடந்த பாஞ்சாலங் குறிச்சி வீரர்கள் 1801-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ம் தேதியன்று சிறைக் கதவுகளை உடைத்தெறிந்து விட்டுத் தப்பி விட்டார்கள். சிறை மீண்ட ஊமைத்துரையும் அவனது சகாக்களும் இரவோடு இரவாய் பாஞ்சாலங் குறிச்சியை நோக்கிப் பயணமானார்கள். பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைப் புதுப்பித்து, மீண்டும் போர்க்கொடி ஏந்தி, வெள்ளை ஆதிக்க வெறியர்களை எதிர்க்க முனைந்தார்கள். மீண்டும் ஆதிக்க வெறியர்களுக்கும் சுதந்திர வீரர்களுக்கும் பெரும்போர் மூண்டது. இந்தப்

போரில் பாஞ்சாலங் குறிச்சியினர் காட்டிய வீரமும் தீரமும் அளவிடற்கரியவை. வெள்ளையரின் வசம் இருந்த தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் முதலிய பேரூர்களையும் சில சிற்றூர்களையும் கூட, பாளையக்காரர்கள் கைப்பற்றினார்கள். அதுமட்டுமல்ல, வெள்ளையரின் படையைப் பாளையங்கோட்டையை நோக்கிப் பின்வாங்கி ஓடவும் வைத்தனர். ஊமைத்துரையின் தலைமையில் நிகழ்ந்த இந்த வீரப் போராட்டம் கட்டபொம்முவின் போர்த்திறனையும் தீரத்தையும் கூட, பல வகையில் மிஞ்சுவதாயிருந்தது. இவ்வாறாக வெள்ளையர்களைச் சுமார் மூன்று மாதகாலம் எதிர்த்துப் போராடினார்கள், பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர்கள்.

எனினும் நாடெங்கிலும் தமது ஆதிக்கத்தை நிறுவி, பல்வேறு கைக்கூலிப் பட்டாளங்களையும், ''ராஜா விசுவாச சீலர்'' களையும் சம்பாதித்தும், நவீனமான போர்க் கருவிகளின் பலத்தைத் துணைகொண்டும் நின்ற வெள்ளையர்களை எதிர்த்து அந்த வீரர்கள் எத்தனை நாட்கள்தான் தன்னந்தனியராகப் போரிட முடியும்? 1801-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதியன்று பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை வெள்ளையரின் வசப்பட்டது. கோட்டை பிடிபட்டவுடன் ஊமைத்துரையும் அவனது சகாவான சிவத்தையாவும் வேறு பல வீரர்களும் கோட்டையை விட்டு வெளியேறினார்கள். அப்போதும் வெள்ளையரின் தாக்குதல் நடந்தது. கோட்டைக்கு வெளியே நடந்த யுத்தத்தில் காயம் பட்டுச் சாய்ந்தான் ஊமைத்துரை; எனினும் வெள்ளையரின் கையில் அவன் பிடிபடவில்லை. தேச பக்தி மிகுந்த மாதர்கள் சிலர் அவனைக் காப்பாற்றினார்கள். வெள்ளையரிடம் பிடிபடாதவாறு ஊமைத்துரையும் சிவத்தையாவும் தப்பி விட்டார்கள்.

ஆம். தப்பிவிட்டார்கள்! ஆனால், தப்பித்து எங்கே செல்வது? எட்டயபுரத்தானோ எதிரிகளின் தாசானுதாசன் ஆகிவிட்டான்; நாகலாபுரத்துச் சௌந்தர பாண்டியனோ ஏற்கெனவே பிடிபட்டுக் கொலையுண்டு விட்டான்; புதுக்கோட்டைத் தொண்டைமானோ கட்டபொம்முவைக் காட்டிக் கொடுத்து, 'புண்ணியம்' சம்பாதித்திருந்தான்; ராமநாதபுரம் சேதுபதியோ வெள்ளையர்களுக்கு ஆதரவாக நின்றதோடு, வெள்ளை அதிகாரிகளின் தலைமைக் காரியாலயத்துக்கே தனது தலைநகரிலுள்ள 'ராமலிங்க விலாச'த்தை ஒதுக்கிக் கொடுத்து விட்டான். பிறந்து வளர்ந்த நாட்டிலே எங்கு பார்த்தாலும் அன்னியரின் ஆதிக்கம்; அன்னியரின் கையாட்கள்; தேசத் துரோகிகள்! சொந்த நாட்டைக் காக்கப் போராடிய சுதந்திர வீரனுக்கோ எங்கு செல்வது என்பது பிரசினை! இந்தச் சந்தர்ப்பத்தில் ஊமைத்துரை உதவி நாடிச் செல்லக்கூடிய ஒரே இடமாக விளங்கியது சிவகங்கைச் சீமை; அங்கு அவனை அன்புடன் வரவேற்று ஆதரிக்கத் தயாராயிருந்தவர்களே மருது பாண்டியர்.

மருது பாண்டியர் என்று பொதுவில் அழைக்கப்பட்ட சின்ன மருது, வெள்ளை மருது என்ற இரு சகோதரர்களும் அப்போது

சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்தார்கள். இவர்களில் மூத்தவன் வெள்ளை மருது; இளையவன் சின்ன மருது. கட்டபொம்மு சகோதரர்களைப் போலவே இந்த இரு சகோதரர்களும் வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் பெரும் வீரம் விளைத்தவர்கள். தென்னாட்டுச் சரித்திரத்தைப்பற்றி எழுதும் ஆசிரியர்கள் பலரும் கட்டபொம்மு ஊமைத்துரை முதலியோர்தான் வெள்ளையரை எதிர்த்த கடைசி வீரர்கள் என்று எழுதுகிறார்கள். பாளையக்காரர்கள் என்று பார்த்தால் பாஞ்சாலங்குறிச்சியார்தாம் அவ்வாறு போரிட்ட கடைசிப் பாளையப்பட்டுக்காரர்கள். எனினும் வெள்ளையரின் ஆதிக்கத்தைக் கடைசி வரையிலும் எதிர்த்து நின்ற வீரர்கள் மருது சகோதரர்கள்தாம். இவர்களது மரணத்துக்குப் பின்னர்தான் வெள்ளையரின் ஆட்சி இந்த நாட்டில் பரிபூரணமாகக் காலூன்றி நிலைத்தது. இப்பேர்ப்பட்ட வீரர்களின் சரித்திரம் இன்று கட்டபொம்முவின் சரித்திரம் பிரசித்தமடைந்துள்ள அளவிற்கு பிரபலமடையவில்லை. அதுபோலவே கட்டபொம்முவைப்பற்றி பல்வேறு முழுநீள வீரகாவியங்களும் நாட்டுப் பாடல்களும் தோன்றியுள்ளதைப்போல், இவர்களைப்பற்றி அவ்வாறான முழுநீள நாட்டுப் பாடல்களோ, காவியங்களோ தோன்றவில்லை. இதுவும் நமது துர்ப்பாக்கியம் என்றே சொல்லவேண்டும். மருது பாண்டியரைப்பற்றி சிவகங்கைப் புலவர்கள் ஓரிருவர் பாடிய தனிப்பாடல்களையும், சிவகங்கைச் சீமையில் வழங்கிவரும் சிற்சில உதிரி நாட்டுப் பாடல்களையும் தவிர, வேறு பாடல்கள் இல்லை. இந்த நாட்டுப் பாடல்களையும் இதுவரை யாரும் முறையாகச் சேகரிக்க முனையவில்லை. இந்த மாதிரியான நாட்டுப் பாடல்களைச் சேகரிப்பதன்மூலம் மருது சகோதரர்களின் குணும்சங்கள் பலவற்றையும், சரித்திரம் கண்டறியாத பல்வேறு உண்மைகளையும் நாம் கண்டறிய முடியும்.

மருது பாண்டியரைப்பற்றித் தனிப்பட நாட்டுக் காவியங்கள் எதுவும் இல்லையென்றாலும்கூட, 'கட்டபொம்மு சரித்திரக் கும்மி' ஏட்டுப் பிரதியில் இவர்களது போராட்டத்தைப் பற்றிய வரலாறு ஓரளவு காணப்படுகிறது. 'கட்டபொம்மு சரித்திரக் கும்மி'யில் காணப்படும் வரலாற்றை, என்னிடமுள்ள ஏட்டுப் பிரதிகளின் துணைகொண்டு, ஓரளவு அறிமுகப்படுத்தி வைப்பதே எனது முதல் நோக்கம்; சரித்திரம் கண்டறிந்த உண்மைகளுக்கும் இந்தக் கும்மிப் பாடலிற் காணும் வரலாற்றுக்கும் பல முரண்பாடுகள் உள்ளன. எனவே இவர்களுடைய உண்மை வரலாற்றையும் நாம் முறையாகத் தெரிந்துகொள்வது அவசியம்; அதனையும் தெரியப் படுத்துவதே எனது இரண்டாவது நோக்கம்.

இப்போது நாம் நாட்டுப் பாடலில் காணும் வரலாற்றைப் பார்க்கலாம்.

கோட்டையை விட்டு வெளியேறிய ஊமைத்துரையும் சிவத்தையாவும் இங்குமங்குமாகச் சுற்றியலைந்து, உடம்பின்

காயங்களை ஆற்றிக்கொண்டு, சிவகங்கைச்சீமைக்குவருகின்றூர்கள்; சிவகங்கை மருதுபாண்டியரும் அவர்களுக்கு ஆதரவு தந்து காப்பாற்ற முனைகிறூர்கள். இதனைச் சரித்திரக் கும்மி பின் வருமாறு சித்தரிக்கிறது:

ராத்திரிக் காலத்தில் புறப்பட்டுக் கன
நாடு கடந்து விரைந் தெழுந்து
நாற்றிசையும் புகழ் மருது பாண்டியன்
நாட்டினிலே வந்து ஊமைத் துரை
மருது பாண்டியன் தன்னைக் கண்டு- ஊமையன்
வந்த விவரத்தைக் கூறினராம்
ஆதியோடந்தமாய் சண்டை நடந்ததுவும் அவர்கள்
அவதிப்பட் டங்கே வந்ததுவும்
நேயமாய்ச் சொல்லி உரைத்தார்கள் அப்போ
நீதமாய் மருதுப் பாண்டியனும்
ஒன்றுக்கும் அஞ்சாமல் நீங்கள் இருவரும்
உண்மையாய் இவ்விடம் தானிருங்கள்
கும்பினியான் இங்கே வந்தாக்கால் இப்போ
கூடி ஒரு கைகள் தான் பார்ப்போம்.

இவ்வாறு தன்னிடம் உதவி கோரிவந்த நண்பனுக்கு ஊக்கம் கொடுக்கிறுன் மருதுபாண்டியன். அத்துடன் ஊமைத்துரைக்கு விருந்துபசாரங்கள் செய்து மகிழ்விக்கிறுன். எப்படிப்பட்ட விருந்து ?

சந்தோஷமாக அவர்களுக்கு அங்கே
சட்டரச வர்க்கம் பாலுடனே
உண்பதற்கேற்ற முயல்க் கறியும் கதுவாலி
உடும்புக் கறியும் பொரிக்கறியும்
சீனிச்சம்பா நெல்லமுதும் இவர்
சித்தத்துக்கே சரியானபடி
பாங்குடன் அன்னந்தான் புசித்து அங்கே
பண்பாயிருந்தார்கள் அப்போது
விருந்துப் பந்தயம் பேசிக்கொண்டு அங்கே
வித்தாரமாய்ச் சபை செய்திருந்தார்,

இவ்வாறு ஊமைத்துரை சிவத்தையா முதலியோர் சிவகங்கைச் சீமையில் சடைவாறிக்கொண்டிருக்கும் வேளையில், வெள்ளையர் படைக்குத் தலைமை வகித்த அக்கினி மேஜர் பாஞ்சைப்பதியெங்கணும் அலசிப் பார்த்தும் ஊமைத்துரையைக் காணமுடியாமல் தவிக்கிறுன். பின்னர் அங்கு செத்து வீழுந்து கிடக்கும் பிணங்களையும் புரட்டிப் பார்க்கிறுன். அப்போது அந்தப் பிணக்குவியலிலிருந்து ஊமைத்துரையின் மனைவி எழுந்திருக்கிறுள். அவ்வாறு எழுந்த ஊமையன் மனைவி, அக்கினி மேஜரிடம்

அடைக்கலம் கோருகிருள். அவனும் அவளைக் காப்பாற்றுவதாக உறுதி கூறி, ஊமைத்துரையின் இருப்பிடத்தைக் கேட்கிருன். அவள் தனக்குத் தெரியாது என்கிருள். பின்னர் அவன் அவளைத் தக்க பாதுகாப்பில் விட்டு விட்டு, ஊமைத்துரையைப்பற்றித் துப்புத் துலக்க முனைகிருன். ஊமையன் சிவகங்கையில் இருக்கும் செய்தி அவனுக்குத் தெரியவருகிறது. இதன் பேரில் அக்கினி மேஜர் சிவகங்கை மீது படையெடுத்து வந்து கூடாரம் அடிக்கிருன். இந்தச் செய்தியை அறிந்த ஊமைத்துரை மருது பாண்டியனிடம் விஷயத்தைக் கூறி ஆலோசனை கேட்கிருன். ஊமைத்துரையின் பேச்சைக் கேட்டதும் மருதுபாண்டியன் ஆவேசம் பிறக்கப் பேசுகிருன்.

அப்போது மருது பாண்டியனும் அங்கே
அதிகக் கோபம் கொண் டேது சொல்வான்?
செப்பமுள்ள மன்னன் ஊமைத்துரைக்குச்
சிறந்த யோசனை என்ன சொல்வான்?
நட்புள்ள ஊமைத்துரையே நீர்
நம்மிடம் அடைக்கல மாயிருக்க
நடுப்படையில் உம்மைக் கைவிட்டால்
நான்தானும் வீர பாண்டியனே?
ஆனாலும் ஆகுது போனாலும் போகுது
அடிக்கிறேன் பார் ஒரு தம்மாசு
வெத்திப் போர்விட்டு வெகுநாளாச்சு இனி
கத்திப் போர் வேடிக்கை பார்ப்போம் என்ருன்.

இதன் பின்னர் மருதுபாண்டியனும், அவனது சகாக்களும், ஊமைத்துரையும் வெள்ளையர் படையை எதிர்த்துத்தாக்க முனைகிருர்கள். மருதுபாண்டியன் படைவீரர்களைத் திரட்டிப் போருக்கெழும்புகிருன்.

சேவகர் சேரத் தயாரென்ருன் அதி
சீக்கிரம் வேட்டைக் கெழும்பும் என்ருன்
துரைமகன் சிவஞானமும் அங்கே
துடி துடிக்க வெளியேறினராம்
அன்னேரம் மருதுப்பாண்டியனும் அங்கே
முன்னேடிச் சண்டைக் கெழும்பினரரம்
சின்னமருதுடனே சேர்ந்து சிவ
ஞானத் துரையும் சிவத்தையாவும்
வட்டப் பொட்டுக்கார மருதுபாண்டியன்
வல்லயம் ஈட்டிகள் எடுத்திட்டான்
பட்டாளத்தில் விழுந்து குத்திச் சண்டை
இட்டானே துரை அப்போது
ஊமைத்துரை ஒரு கையாகப் படை
ஊடே விழுந்தானே மெய்யாக

ஊமைத்துரையிலும் இரண்டு பங்காக
ஓடிக் குத்துறுன் பாருங்கடி
வச்சடி வாங்காமல் குத்துகிறுன் தம்பி
மிச்சமாய் வேட்டைகள் ஆடுகிறுன்
வளரிக் கம்பு கொண்டடிக்கிறுன் அவன்
மணிக்குடலே பற்றி இழுக்கிறுன்

குறை உயிராய்க் கிடக்கும் துரைகளைக்
குத்தி மலத்தி இழுக்கிறுன்
பரியைக் குத்தியே இழுக்கிறுன்—தம்பூர்க்
காரனையும் பூசை கொடுத்திட்டான்.

இவ்வாறு மருது பாண்டியன் விளைத்த பெரும்போரை விவரிக்கிறது கட்டபொம்மு கும்மி. மருது பாண்டியனின் தாக்குதலால் வெள்ளையர் படையில் பெருஞ் சேதம் நேர்கின்றது. இந்த நிலைமையைக் கண்டு தளபதி அக்கினி மேஜருக்கு ஆத்திரம் பொங்குகிறது. உடனே அவன் குதிரைமீது ஏறிப் போர்க்களத்தில் புகுகின்றுன்; இதைக் கண்டு, மருது பாண்டியனின் புதல்வனுன சிவஞானமும் அவனை எதிர்த்துக் கிளம்புகிறுன். இவர்கள் இருவருக்கும் நடக்கும் யுத்தத்தையும் கும்மிப் பாட்டுப் பாடிய புலவர் பின்வருமாறு வருணிக்கிறுர்:

இப்படிச் சண்டை நடப்பதையும் அங்கே
இறந்து பட்டாளம் போவதையும்
கண்டந்த அக்கினி மேசரும் தான் அங்கே
கடுங்கோபம் கொண்டு தானெழும்பி
இப்படி மோசங்கள் செய்தானே என்று
ஏறிக் குதிரைமேல் அப்போது
கையிலே ஆயுதம் தானெடுத்து அங்கே
கடிந்துவந்தானே அக்கினிசு
இப்படித்துரை வரும் போது அங்கே
ஏற்றமுள்ள சிவஞானமும்தான்
தானும் குதிரை மேல் ஏறிக்கொண்டு அங்கே
தாண்டியே வந்தானே பட்டாளத்தில்
சிவஞானமும் அக்கினி மேசரும்
சீறிச் சினந்து எதிர்த்தார்கள்
இருவருடைய குதிரைகளும் அங்கே
இடசாரி வலசாரி சுற்றிவர
ஒருவர்க்கொருவர் தோல்வியில்லாமல்
உன்னியே வாள்வீச்சு வீசிடவே
இருவருடைய வாள்முனைகளும் அங்கே
ஏகமாய் மேலெல்லாம் பட்டதுவாம்

சிவஞானமும் அக்கினி மேஜரும் தனித்துப் போரிடும் அதே வேளையில் ஊமைத் துரையின் சகாவான சிவத்தையாவும் ஒரு

பக்கத்தில் தனது வீரத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறுன். "கொக்குத் திரளிலே ராஜாளி பாய்ந்தாற்போல் குத்தியிழுத்து மலத்துகிறுன்" சிவத்தையா. இவ்வாறு மருது சகோதரர்களும் சிவஞானமும், ஊமைத்துரையும் சிவத்தையாவும் பேராற்றலோடு போர் புரிந்தபோதிலும், தோல்விதான் அவர்களுக்குக் காத்து நிற்கிறது. அக்கினி மேஜரின் படை மருது பாண்டியரையும் சிவஞானத்தையும் சுற்றி வளைந்துகொள்கிறது. அவர்கள் பிடிபட்டு விடுகிறுர்கள். ஆனுல், ஊமைத்துரையும் சிவத்தையாவும் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடிவிடுகிறுர்கள். "நமக்கு உதவியாக நின்ற மருது பாண்டியரை வெள்ளை நாசகாலர்கள் பிடித்து விட்டார்களே! இனிமேல் நமக்கு யார்தான் கதி?" என்று ஏங்குகிறுன் ஊமையன். இதற்கிடையில் மருது பாண்டியரையும் சிவஞானத்தையும் சுற்றி வளைந்துகொண்ட வெள்ளையர் படை அவர்களின் உயிருக்கே உலைவைத்து விடுகிறது; அவர்களைப் பிடித்து, மூவரையும் தூக்குமரத்துக்கு இரையாக்குகிறுர்கள். பின்னர், மருது பாண்டியனுக்குச் சொந்தமான கோட்டை கொத்தளங்களையும் இடித்துத் தரைமட்டமாக்குகிறது வெள்ளையர் சேனை.

இவ்வாறுக வெள்ளையரை எதிர்த்து நின்றவரும், நண்பனுக்காகப் போர்க்கொடியேந்தி களத்தில் புகுந்தவருமான மருது பாண்டியரின் கதை முடிவுறுகிறது; களத்திலிருந்து தப்பி ஓடிய ஊமைத்துரையும் பின்னர் வெள்ளையரால் பிடிக்கப்பட்டு, தூக்குண்டு மரணமடைகிறுன்.

கட்டபொம்மு சரித்திரக் கும்மியில் காணப்படும் வரலாறு மருது பாண்டியரின் வாழ்க்கையை இவ்வாறுதான் சித்தரிக்கிறது. இந்தப் பாடற் சித்திரத்துக்கும், மருது பாண்டியரின் வாழ்க்கைச் சரித்திரத்துக்கும் பெரிதும் வித்தியாசம் உண்டு. மருது பாண்டியரின் திறமையையும் அவர்கள் போரிட்ட வரலாற்றையும் 'கட்டபொம்மு கும்மி' சரிவரப் பிரதிபலிக்கவில்லை. கடல் கடந்து வந்த அன்னியக் கொள்ளைக்காரர்களுக்கு நாட்டைக் காட்டிக்கொடுக்க மாட்டோம் என்ற உன்னத உணர்ச்சியோடும், உதவி நாடி வந்த நண்பனை உயிரைக் கொடுத்தாகிலும் காப்போம் என்ற மகத்தான நட்புணர்ச்சியோடும் போரிட்டு மடிந்த இந்த வீர மறவரின் சரிதத்தை, வெள்ளையரின் ஆதிக்க வேட்டையின் கடைசிப் பலியாக மடிந்த இந்தச் சுதந்திர புருஷரின் தியாக வரலாற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

அந்த வீர வரலாற்றையும், மருது பாண்டியரைப்பற்றிய பிற விவரங்களையும் அடுத்த இதழில் சரித்திரத் வாயிலாக ஆராய்வோம்,

★

திரைப் படம்

★★★ மிஸ்ஸியம்மா

நமது படாதிபதிகள் சென்ற பல ஆண்டுகளாக நகைச்சுவை என்ற பெயரில் நம்மையெல்லாம் நரக வேதனைக்கு ஆளாக்கி வந்திருக்கிறார்கள். 'ஆனந்த பரவசமூட்டும் ஹாஸ்ய சித்திரம்,' 'முழு நீள நகைச்சுவை ஓவியம்' என்றெல்லாம் விளம்பரங்கள் செய்துகொண்டு வரும் படங்களை நினைத்தாலே நமக்குக் குலை நடுக்கம் எடுத்தது. ஏனெனில் கதாநாயகன் குப்பை வண்டியில் குதித்து 'சொர்க்கபோகம்' அனுபவிப்பதையும், ஆண்மகன் பெண்வேடம் போட்டுக் குலுக்கி மினுக்குவதும், குதிர் போன்ற பெண்ணிடம் கதிர் போன்ற ஆணழகன் 'காதல்' பண்ணுவதும், சிலேடை என்ற பெயரில் ஆபாசமாய்ப் பேசுவதும், பல்லை இளிப்பதும், கனைப்பதும், இருவதும், ஏப்பமிடுவதும் ஒப்பாரிவைப்பதும் ஆன கீழ்த்தரமான விகாரச் செயல்கள் நிறைந்த 'ஹாஸ்யத்தை' (!)க் கண்டு நாம் அடைந்த துன்பம் கொஞ்ச நஞ்சம் அல்ல.

இருந்தாலும், இவற்றாலெல்லாம் நாம் விரக்தியடைந்து 'பட்டினத்தார்' ஆகிவிடவில்லை; வாழ்வில் நம்பிக்கை இழந்துவிடவில்லை! நமது படாதிபதிகளிடம் கூட நாம் நம்பிக்கை வைத்திருந்தோம். என்ன இருந்தாலும் நமது படாதிபதிகள் சபாபதி, என் மனைவி, திவான் பகதூர், கல்யாணம் பண்ணிப்பார், பணம் படுத்தும் பாடு முதலிய சிறந்த ஹாஸ்யப் படங்களைக் கடந்த காலத்தில் சிருஷ்டித்துத் தரவில்லையா?

பொங்கல் தினத்தன்று 'விஜயா'வின் தயாரிப்பான 'மிஸ்ஸியம்மா'வைத் தயாரித்தவர்கள் என்னை ஏமாற்றவில்லை; ஓர் உயர்தர நகைச்சுவை விருந்தையே அளித்தார்கள். அவர்கள் முழு நம்பிக்கையுடன் தமக்குத்தாமே விளம்பரங்களில் அளித்துக் கொண்ட நற்சாட்சிப் பத்திரத்தையும் மெய்ப்பித்தார்கள்.

மிஸ்ஸியம்மாவின் கதையில் பிரமாதமான சிக்கல்கள் ஒன்றுமில்லை. வேலையில்லாமல் திண்டா

டும் பட்டதாரிகளான பாலு என்ற இளைஞனும், மேரி என்னும் யுவதியும் பத்திரிகையில் ஒரு விளம்பரத்தைக் காண்கிறார்கள். ஒரு கிராமப் பள்ளிக்கூடத்துக்குக் கணவனும் மனைவியுமான ஆசிரிய தம்பதிகள் தேவை என்றும் அவர்களுக்குச் சங்கீதம் தெரிந்திருக்கவேண்டும் என்றும் ஒரு பண்ணையார் விளம்பரம் செய்திருக்கிறார். பாலுவும் மேரியும் கணவன்—மனைவியாக வெளிப்பார்வைக்கு நடந்து கொள்வதென்றும், இரண்டு மாதத்துக்குத்தான் வேலை பார்ப்பதென்றும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். இந்த ஒப்பந்தப் பிரகாரம் நடக்க முடியாமல், பள்ளிக்கூடச் சூழ்நிலையும் பண்ணையாரின் அன்பும் அவர்களைத் திக்குமுக்காட வைக்கின்றன. இதன் காரணமாக கோப தாபங்கள் ஏற்பட்டுப் பூசல் உண்டாகின்றது. இந்தப் பூசல் காதலாக மாறுகிறது. கடைசியில் மேரி பல ஆண்டுகளுக்கு முன்னால் காணமற்போன பண்ணையாரின் மகள் என்பது வெளியாகிறது; பாலுவும் மேரியும் உண்மையிலேயே கணவன் மனைவியாகின்றனர்.

இந்தச் சாதாரணக் கதையை வெகு அருமையான நகைச்சுவைச் சித்திரமாக ஆக்கியுள்ளனர் படத் தயாரிப்பாளர்கள்.

சம்பவக் கோவையிலிருந்தும், பாத்திரங்களின் சுபாவத்திலிருந்தும் இப்படத்தில் நகைச்சுவை தோன்றுகிறது. பாத்திரங்களின்

> "பாதுகாப்பிற்காகக் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவிடுவதால் மக்களைக் காப்பாற்றிவிடமுடியாது. மக்கள் திருப்தியுடன் வாழ்ந்தால்தான் சந்தோபஸ்து நிலைத்திருக்கும். ஆயுத உற்பத்திக்காகச் செலவிடும் பணத்தில் ஓர் அற்பப் பகுதியைச் செலவழித்தால், உலகிற்கு மிகுந்த சுபிட்சத்தை அளிக்க முடியும்"
>
> — எஸ். ராதாகிருஷ்ணன்

புத்திசாலித்தனமான நடத்தையும் பரிவு மிகுந்த செயல்களும் இயற்கையாக எழக்கூடிய உள்ளக் கிளர்ச்சிகளும் இப்படத்தின் நகைச்சுவைக்கு ஒளியும் மணமும் தருகின்றன. ஒவ்வொரு பாத்திரத்தின் செயலிலும் மனிதத் தன்மை இருக்கிறது. அவர்களுடைய குணவிஷேசங்களுக்கு ஏற்ப நாமும் அவர்களிடம் மனம் ஒன்றிப் போகிறோம்.

பண்ணையாராக நடிக்கும் எஸ். வி. ரங்காராவ், பாலுவாக நடிக்கும் ஜெமினி கணேசன், மேரியாக வரும் சாவித்திரி, துப்பறியும் ராஜூவாக வரும் தங்கவேலு, லோகிதாசனாக வரும் சாரங்கபாணி முதலியோர் அருமையாக நடித்துள்ளனர். நம்பியார், எழுமலை ஆகியோரின் நடிப்பு மிகையாக இருக்கிறது.

இந்தப் படத்தில் பாடல்களும் வசனமும் அளவோடு இருக்கின்றன. அவற்றில் ஆபாசம் எதுவுமில்லை என்பதே நமக்குத்

திருப்தி அளிக்கும் விஷயம். டைரக்டர் பிரசாத்தின் திறமை இப்படத்தின் வெற்றிக்கு ஓர் முக்கிய காரணம் ஆகும்.

படத்தில் குறைகள் இல்லாமல் இல்லை. வேலையில்லாத் திண்டாட்டப்பிரசினையில் ஆரம்பித்து, பண்ணையாரின் குடும்பத்தினராக ஆகும் கதாபாத்திரங்கள் கதாசிரியரின் கற்பனையில்தான் தோன்றக்கூடுமே யன்றி யதார்த்த வாழ்க்கையில் காணக்கூடியவர்கள் அல்ல. மிஸ்ஸியம்மா கதை யதார்த்த வாழ்க்கைக்குப் புறம்பானது என்பதில் ஐயமில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு அது பரிகாரம் காட்டாமல், திசை மாற்றுகிறது என்பதும் உண்மையே.

ஆயினும் தமிழ்ப்பட உலகில் நகைச்சுவை படும் பாட்டைக் கண்டு வருந்திய ரசிகர்களுக்கும் தமிழ்ப் பட முதலாளிகளின் கீழ்த்தர ஹாஸ்ய உணர்ச்சியைக் கண்டு மனம் சலித்தவர்களுக்கும், உயர்தர நகைச்சுவை வேண்டும் என்றும் விரும்புகிற மக்களுக்கும், பொது மக்களின் கலாரசனை உயரவேண்டும் என்று கருதுகிறவர்களுக்கும் மிஸ்ஸியம்மா ஒரு உயர்ந்த படம் என்று தோன்றுவதில் வியப்பில்லை.

"துருவன்"

●

"குண்டுகளைப் பரிசோதனை செய்து பார்ப்பதே உலகுக்குப் பேராபத்தாக விளைந்துள்ளது. அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு முதலியவற்றைப் பிரயோகிக்கக் கூடிய ஒரு பெரும் யுத்தம் வரக் கூடிய அபாயம் இன்னும் நம்மைப் பயமுறுத்துகிறது. இப்போது — யுத்தம் வருவதற்கு முன்னுங் கூட — இந்தப் பரிசோதனைகளே கட்டுப்படுத்த முடியாத சேதங்களை ஏற்படுத்தக் கூடும்."

— பண்டித நேரு

○

"ஒரு சிலருடைய ஏகபோக உரிமையை ஆதரிப்பது, சமூகச் சீர்திருத்தங்களைத் தடுப்பது, பிற்போக்குச் சக்திகளையும், பண மூட்டைகளையும் ஆதரிப்பது, கொடுங்கோன்மை சர்க்கார்களுக்கு ஊக்கம் அளிப்பது, சர்க்கார்கள் திருந்துவதற்கு உதவிசெய்யாதிருப்பது ஆகியவை மூலம் நமது தலைமுறையில் இரண்டு பெரிய யுத்தங்கள் தோன்றின."

— எஸ். ராதாகிருஷ்ணன்

●

புத்தக விமர்சனம்

விமர்சனத்துக்கு இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்.

வல்லிக்கண்ணன் கதைகள்

(கயிலைப் பதிப்பக வெளியீடு; பக்கங்கங்கள் 120; கிடைக்குமிடம்:- 116, இராயப்பேட்டை ஐரோடு, சென்னை-4. விலை ரு. 1—12—0)

பிரபல எழுத்தாளர் வல்லிக்கண்ணனின் மூன்ருவது சிறுகதைத் தொகுதியான இந்நூலில், வஞ்சம், தெளிவு, நம்பிக்கை, சக்தியுள்ள தெய்வம், ஞானோதயம், நல்ல முத்து, நீதியின் கண்ணீர், புத்தரின் பேரன்கள், பெரியவளும் சின்னவளும், இன்பம், விண்ணும் மண்ணும் ஆகிய 11 கதைகள் உள்ளன.

நல்ல முத்து, நீதியின் கண்ணீர், புத்தரின் பேரன்கள், பெரியவளும் சின்னவளும் ஆகிய நான்கு கதைகள் மட்டும் இத்தொகுதியில் சிறந்தனவாக நமக்குப் படுகின்றன. அவற்றில்தாம் பகுத்தறிவுக்கு ஏற்ற, மனிதத் தன்மையும், தன்னம்பிக்கையும் நிறைந்த கருத்துக்களும், பொருத்தமான கட்டுக்கோப்பும் ஒருசேர அமைந்துள்ளன.

'நல்ல முத்து', 'பெரியவளும் சின்னவளும்' என்னும் இரு கதைகள் ஆங்கிலத்திலும், 'புத்தரின் பேரன்கள்' என்னும் கதை செக் மொழியிலும் பிரசுரிக்கப் பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது,

மேற்கூறிய நான்கு கதைகளைத் தவிர, பிற கதைகளில் வல்லிக்கண்ணனின் சிறு கதை புனையும் ஆற்றல் நன்கு புலனுகின்றது. எனினும் அக்கதைகளில் பொதிந்திருக்கும் கருத்துக்கள் மக்களின் மன வளர்ச்சிக்கு உகந்தன அல்ல.

''கதை எழுதுகிறவன் எதையும் எப்படியும் எழுதலாம்; ஆனல், சொல்கிற விஷயத்தைச் சுவையாகச்சொல்லக்கற்றிருக்க வேண்டும்; அதுதான் முக்கியம் — இதுவே என் நோக்கம்'' என்று தமது கதைகளைப்பற்றிய முகவுரையில் கூறுகிருர் ஆசிரியர்.

''கதை எழுதுகிறவன் சொல்கிற விஷயத்தைச் சுவையாகச் சொல்லக் கற்றிருக்க வேண்டும்'' என்பது சரி; ''எதையும் எப்படியும் எழுதலாம்'' என்று கருத்து சரியல்ல. இது ''கலை கலைக்காகவே!'' என்னும் செல்லரித்துப்போன கொள்கையின் மறு பதிப்பேயாகும்.

''எதையும் எப்படியும் எழுதலாம்'' என்ற வாதம் நடை

முறையில் பத்தாம்பசலிக் கருத்துக்களையும், மூட நம்பிக்கைகளையும், பயத்தையும், தோல்வி மனப் பான்மையையும், அவநம்பிக்கையையும் மக்கள் மனத்தில் வேரூன்றச் செய்யவே உதவும். தமிழ் நாட்டுப் பிரபல பத்திரிகைகளில் பெரும்பான்மையானவை இன்று இந்தத் திருத்தொண்டைத்தான் செய்து வருகின்றன.

"எதையும் எப்படியும் எழுதலாம்" என்று சொல்லி ஏழையின் வாழ்வுப் போராட்டத்தையும், பணம் படைத்தோரின் ஈவு இரக்க மற்ற சுயநல வாழ்கையும்பற்றி மேற்படி 'பிரபல' பத்திரிகைகளுக்கு திரு. வல்லிக் கண்ணன் ஒரு கதை எழுதி அனுப்பட்டும்; அற்புதமான கலை நயத்தோடு எழுதி அனுப்பட்டும்; பிரசுரமாகிறதா பார்க்கலாம்! நிச்சயம் அவர் கதை பிரசுரமாகாது! இந்த உண்மையைத் தமது 15 வருட எழுத்துலக அனுபவத்தில் திரு. வல்லிக் கண்ணன் உணர்ந்திருப்பார் என்றே நம்புகிறோம்.

"எழுத்தாளன் எதை எப்படி எழுதவேண்டும்?" என்ற கேள்வியுடன் "யாருக்காக எழுதவேண்டும்?" என்ற கேள்வியும் இணைந்தது தான். எழுத்தாளன் சிலருடைய நன்மைக்காக அல்ல; பலருடைய நன்மைக்காக எழுதவேண்டும்.

சிலருடைய எதிர்காலத்திற்காக அல்ல; பலருடைய எதிர்காலத்திற்காக எழுதவேண்டும்.

அஞ்ஞானத்தை வளர்ப்பதற்காக அல்ல; விஞ்ஞானத்தை வளர்ப்பதற்காக எழுதவேண்டும்.

எழுத்தாளனுடைய பேனா, அவனுடைய வயிற்றை மட்டும் நிரப்பவோ அல்லது காகிதத்தை நிரப்பி 'ஆத்ம சாந்தி' காணுவதற்கோ உரிய கருவி அல்ல; அது சமுதாய விரோதிகளுக்கு வாளாகவும், மக்களுக்குக் கேடயமாகவும் விளங்க வேண்டும்.

இதை "வல்லிக் கண்ணன்" ஏற்றுக்கொள்வார் என்றே நம்புகிறோம்.

அத்துடன் புத்தரின் பேரன்கள் போன்ற சிறந்த சிறுகதைகளைப் படைத்து, மக்கள் நிலையை மேம்படுத்துவதற்குத் தன்னாலான பணியை ஆற்ற வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறோம்.

உதயம்!

[ஆசிரியர்: ஜெயகாந்தன்; பக்கங்கள் 88; வெளியீடு; விஜயா பிரசுரம், 32, எழும்பூர் ஹைரோடு, சென்னை 8; கிடைக்குமிடம்:- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 194, மவுண்ட் ரோடு-சென்னை 2. விலை 0—12—0.]

இந்தச் சிறு கதைத் தொகுதியில் சாந்தி பூமி சுமை பேதம்', 'கண்ணன் பிறந்தான்' உதயம், பிழைப்பு மீனாச்சி ராஜ்யம், காந்தி ராஜ்யம் என்னும் ஏழு கதைகள் உள்ளன.

உலக சமாதானம், ரிக்ஷாக்காரன் மனோநிலை, சமயப் பிரசங்கியின் வறுமை, கலைஞனின் 'காதல்,' கள்ளத்தோணி ஏறிச் சென்றவனின் கதி, பட்டணத்து விபசாரியின் வாழ்வு, தேசவிடுதலைக்காக உயிர் நீத்த காந்திய வாதியின் கனவு நனவாகும் விதம் — இவைபற்றி ஜெயகாந்தன் தமது சிறுகதைகளில் சித்தரித்துள்ளார்.

இவருடைய சிறுகதைகளைப் படிக்கும்போது வாழ்விலே அல்லலுற்று அழுந்தி அவதிப்படும் மக்கள் மீது இவருக்குள்ள அநுதாபம் நன்கு புலப்படுகின்றது. இவருடைய இதய தாபத்தை வாசகர்களையும் பகிர்ந்து கொள்ளச் செய்யும் சக்தி இவருக்கு இருக்கிறது.

இவருடைய கதைகளைப் படித்ததும் வாசகர் ஒரு தடவைக்குப் பல தடவை, சமுதாயத்தின் இழிநிலையை எண்ணிப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறார்! ஆசிரியருடைய நெஞ்சில் அலைமோதும் விரக்தியும், கசப்பும், வேதனையும், புழுக்கமும், தத்தளிப்பும் வாசகருக்கு உண்டாகின்றன. பெருமூச்சு விட்டுக் கொண்டு வாசகர் கல்லாய்ச் சமைந்துவிடுகிறார்!

சமுதாயத்திலுள்ள அநாகரிகச் சின்னங்களை, ஏழை பாழைகளை, புகலிடம் அற்றோரை, புறக்கணிக்கப்பட்டோரை ஜெயகாந்தன் கதாபாத்திரங்களாக்குவதை நாம் வரவேற்கிறோம்; முழு மனதுடன் வரவேற்கிறோம். ஆனால் இவர்கள் ஏன் அநாகரிகச் சின்னம் ஆனார்கள், யார் இவர்களை அப்படி ஆக்கியது என்பதையும் அவர் நமக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

ஒரு ஏழையின் முதுகிலே சாட்டையடி விழுகிறது; அவன் சாட்டையால் துடிப்பதை நாம் காண்கிறோம்; நெஞ்சம் பதைக்கிறோம். இந்தக் காட்சியைப் படம் பிடிப்பதுடன் கதாசிரியர் நின்று விடக்கூடாது. சாட்டையையார்சொடுக்குகிறார்கள், சாட்டை பிடிக்கும் கரத்திற்கு யார் பக்கபலமாக நிற்கிறார்கள் என்பதையும் நமக்குக் காட்ட வேண்டியது அவர் கடமை; அப்படியானால்தான் நாம் அந்தக் கொடுங்கரத்திலிருந்து சாட்டையைப் பிடுங்க முடியும்; இல்லாவிடில் பெருமூச்சு விட்டுக் கொண்டு நிற்க வேண்டியது தான்!

ஜெயகாந்தனுடைய சிறுகதைகளில் நல்ல வேகம் இருக்கிறது. ஆனால் அவருடைய பார்வையில் இன்னும் நிரம்பத் தெளிவு வேண்டும். கோவில் பிரசங்கியின் வறுமையைவிட, ஆரம்பஆசிரியரின் இழிநிலையை, போலீஸ்காரனின் சிறுமை வாழ்வை அவர் சித்தரித்தால் நலம்.

கலைஞன் நாகநாதனைச் (உதயம் என்ற கதை) சித்தரிப்பதைவிட ஒரு நாடக — சினிமா உபநடிகனின் வாழ்வையோ, பத்திரிகாலயத்தில் வயிற்றைக் கழுவும் உதவி ஆசிரியனின் நிலையையோ படம் பிடித்துக்காட்டுவது மேல் அல்லவா?

கதாசிரியன் எதை எழுதினாலும் காரண — காரியத்தோடு, வாசகர்களுக்கு நெஞ்சில் உரமூட்டும்படி, எதிர் காலத்தில் நம்பிக்கை தழைக்கும்படி எழுத வேண்டும். இல்லாவிடில், அவன் எழுத்துக்கள் அலங்கார சித்திரங்களாக ஒரு சிலருக்குத் திருப்தி அளிக்கலாமே தவிர, மிகப் பலருக்கு பயனற்றதாய்ப் போய்விடும்.

இந்த உண்மையை சமுதாய நலத்தில் நாட்டங்கொண்ட ஜெயகாந்தன் போன்ற நல்லெண்ணமுடைய எழுத்தாளர்கள் ஒப்புக்கொள்வர் என்று திண்ணமாய் நம்புகிறோம்.

தி. க. சி.

இலங்கைத் தொழிலாளர்களின் போர்க்குரல்!

"தேசாபிமானி"

(முற்போக்கு தமிழ் வாரப் பத்திரிகை)

சமாதானத்திற்காகவும்,

தேசிய சுதந்திரத்திற்காவும் போராடும் பத்திரிகை.

அரசியல் கட்டுரைகள், சிறு கதைகள், கவிதைகள்

ஆகிய புதுமை அம்சங்களுடன் வெளிவருகிறது.

8. பக்கங்கள். விலை அணு 2.

ஆண்டுச் சந்தா ரூ. 6 ஆறுமாதச் சந்தா ரூ. 3

முன்பணம் கட்டும் ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு

நிர்வாகி, தேசாபிமானி

91, கொட்டாரோடு, கொழும்பு 8.

சர்வதேசீயமும் தேசீயமும்

லியு சோ ஷி எழுதியது

தமிழாக்கம் :: எஸ். சண்முகம்.

சர்வதேசியத்துக்கும் தேசியத்துக்கும் உள்ள

தொடர்புகளையும், இரண்டின் முக்கியத்துவத்தையும்

விளக்கும் சிறந்த அரசியல் நூல்

விலை அணு எட்டு

நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ் லிமிட்டெட்

திருநெல்வேலி.

"SHANTHI" Edited and Published by T. M. C. Ragunathan at 81, High Road, Tirunelveli Jn. Printed by S. Ramiah at Sri Lakshmi Press, 120, High Road, Tirunelveli Jn.



"புதுமைப்பித்தன்"

ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி

1955

★

பரிசு ரூபாய் நூறு

★

சிறந்த சிறுகதை எழுத்தாளரான அமரர் 'புதுமைப்பித்த'னின் ஞாபகார்த்தமாக, திறமை வாய்ந்த இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு சாந்தி இந்தச் சிறுகதைப் போட்டியை நடத்தத் தீர்மானித்துள்ளது.

நிபந்தனைகள்.

1. ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளை அனுப்பலாம்.

2. கதையைத் தெளிவான கையெழுத்தில் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதியனுப்ப வேண்டும்; கதையுடன் கதாசிரியரின் முழுவிலாசமும் குறித்தனுப்ப வேண்டும்.

3. மொழிபெயர்ப்போ தழுவலோ கூடாது. இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளிவராத சுய சிருஷ்டியாக இருக்கவேண்டும்; அதற்கான ஒப்புதல் கடிதமும் அனுப்பவேண்டும்.

4. பரிசுத் தொகை ரூ. 100. ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் பரிசுபெறத் தக்கதெனக் கருதப்பட்டால் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

5. பரிசுபெறும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கதைகளை முதன் முறையாகப் பிரசுரிக்கும் உரிமை மட்டும் சாந்திக்கு உரியது; பிற உரிமைகள் அனைத்தும் எழுதியவருக்கே.

6. எழுத்துப் பிரதிகள் திரும்ப அனுப்பப்படமாட்டாது, எனவே கதைகளுக்கு நகல் எடுத்துக்கொண்டு அனுப்புவது நலம்.

7. போட்டி சம்பந்தமாக எந்தவிதக் கடிதப்போக்குவரத்தும் கூடாது.

8. கதைகள் 1955 எப்ரல் மாதம் 10ம் தேதிக்குள் வந்துசேர வேண்டும்.

9. 1955 ஜூலை மாதம் நடைபெறும் புதுமைப்பித்தன் நினைவு விழாவை ஒட்டிப் பரிசுகள் வழங்கப்படும்.

10. நான்கு எழுத்தாளர்களைக்கொண்ட பரிசீலனைக் குழுவே கதைகளைப் பரிசீலனை செய்து முடிவுசெய்யும். (இவர்களின் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்படும்.)

11. சாந்தி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

12. கதைகளை, 'பு. பி. சிறுகதைப் போட்டி–1955' என்று குறித்து ஆசிரியர், 'சாந்தி', 81, ஹைரோடு திருநெல்வேலி ஜங்ஷன் என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

அழகுக்கு அழகு செய்ய....

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டல கேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் ஐம்பெருங்காப்பியங்களையும் அணிகலன்களாகப் பெற்ற பாக்கியவதி என்று தமிழன்னையைப் புலவர்கள் பாராட்டுகிறார்கள். ஆம், நல்ல நகைகள் அழகுக்கு அழகு செய்யும் சிறப்புடையவை.

★

திருவாங்கூர் கொச்சியில் உயர்தரமான
தங்கம், வெள்ளி, வைர நகைகளுக்கு பிரசித்தி பெற்ற இடம்

ஜூவல் மான்ஷன்

50 ஆண்டுகளாகப் பொது மக்களின்
நம்பிக்கையைப் பெற்றுள்ள ஆபரண மாளிகை

★

உரிமையாளர் :

பி. எம். சி. சுப்பிரமணியன் செட்டியார்

" ஜூவல் மான்ஷன் "

சாலை : : திருவனந்தபுரம்

Wrapper printed at Shanti Press, Madras - 1